89

89

[illegible]

Pg 43, 112

1) [illegible]
2) [illegible]

[illegible]
28.11.2011

Selected by the Committee

[illegible]

1992

Dr. K.K. Rajeshwari M.D.(S)

251

ஏடு எண் - 262.

வைத்தியம் மந்திரம் -

பாகம் - I

27/7/2001.

27/7/2001.

27/7/2001.

Selected Items

சுவடி எண்: 262

வைத்தியம் பலதிரட்டு

பாகம் — 1

✓ Compared
[illegible]

ஏடு எண் : 262

சுவடி பெயர் : வைத்தியம் பலதிரட்டு.

படியெடுத்த நாள் : 9.3.92.

முடித்த நாள் : 5.6.92

மொத்த பக்கங்கள் : (1 - 342) 342 //

பொருள் பக்கங்கள் : 31 (1-31)

படியெடுத்தவர் : தா. [signature] 5/6/92

குறிப்பு :- வைத்தியம் பலதிரட்டு என்ற இச்சுவடி சிதைவுறும் தருவாயில் உள்ளது. இதில் தொடை முதல் ஏடும், முடிவு ஏடும் காணப்படவில்லை. பல நபர்கள் சொல்லக் கேட்டு எழுதப்பட்டுள்ளது தெரிகிறது. பல நோய்க்கும் மருந்துகள் கூறப் பட்டுள்ளது.

Page No. 2

Page 8

Page 14

Page 16

Pages - 18

சுவடி எண்: 262

வைத்தியம் பலதிரட்டு

27. அ. சகலமான வியாதிக்கும் அனுபானம் சுத்தி:-

நாபி, இருவி, இரசம், கெந்தகம், அரிதாரம், வெங்காரம், இந்த ஆறு மருந்தும் தண்ணியிலைக்கக் கூட்டி சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றி, நெல்லிமுள்ளி. இந்த ஆறுமருந்தும் சமனாகக் கூட்டி நொச்சியிலை சாறுவிட்டு ஒருநாளரைக்கவும் முருக்கிலை சாறுவர்த்தொருநாள் அரைக்கவும் குப்பைமேனி சாறுவர்த்தொருநாள் அரைக்கவும். கையாந்தகரை சாறுவர்த்தொருநாள் அரைக்கவும் ஆடாதோடை சாறுவர்த்தொருநாள் அரைக்கவும் ஐந்துநாள் அரைத்து மிளகு அளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு

1) கபால சூலைக்கு எலியாவம் பாலில் உரைத்து உள்ளுக்கு கொடுத்து மேலுக்கும் பூசவும். 2) மண்டை கரப்பானுக்கு குப்பைமேனி சாற்றிலிட்டுப் பூசவும்.
3) மண்டை வியாதிக்கு செருப்படைச் சாற்றிலிடவும்.
4) காஷ்டத்துக்கு வெலிப்பருத்தி, மணத்தக்காளி சாற்றிலிடவும். 5) அதிபோகத்துக்கு பசுவின் நெய்யில் இடவும். 6) அக்கரத்துக்கு சந்தனத்திலிடவும்.
7) சுக்கிலப் படலத்துக்கு அருப்புள்ளடி சாற்றில் இடவும்.

8) கண்ணில் அமரத்திற்கு வேப்பிலை சாற்றிவிடவும். ~~நிணம் செருக்கி வாதவனுக்கு உலந்தைச் சாத்தி விடவும்.~~ 9) காதிலே பூச்சிக்கு கீழாநெல்லி சாற்றிவிடவும். 10) கரப்பானுக்கு கழுதைவிட்டை சாற்றிவிடவும். 11) நீத்தை பருவனுக்கு வேப்பம்பட்டை சாற்றிவிடவும். 12) கண்புழுவிற்கு முருக்கிலைச் சாற்றிவிடவும். 13) கண்ணீர் வடிதலுக்கு சிறுகீரிலிடவும். 14) சேத்தும கரப்பானுக்கு பிரண்டையிலை சாற்றிவிடவும். 15) பித்த கரப்பானுக்கு பூஞ்சோற்று தண்ணீரிலிடவும். 16) கரந்தி ~~சனைப்பட்டதுக்கு~~ ~~எல்லாம்~~ ஆடாதோடை சாற்றிவிடவும். (17) வாத வாயுவிற்கு வெற்றிலை சாற்றிவிடவும். (18) வாயுவிற்கு வெந்தயத்திலிடவும். (19) சேத்தும வாயுவிற்கு கொன்றைப் பொடியிலிடவும். (20) ~~வயிறு~~ கழிச்சலுக்கு அத்திப்பட்டை சாற்றிவிடவும். (21) கிராணிக்கு சீரகத்திலிடவும். (22) வாயு கிராணிக்கு பாவட்டை சாற்றிவிடவும். (23) சூடு கிராணிக்கு எருமைத் தயிரிலிடவும். (24) வாயு குன்மத்திற்கு உமிக்கின்ன நீரிலிடவும். (25) சத்தி குன்மத்திற்கு வில்வபத்திரி சாற்றிவிடவும். (26) வயிற்று வலிக்கு மாவிலிங்கம் வேர் சாற்றிவிடவும். (27) வாதத்திற்கு முடக்கற்றான் சாற்றிவிடவும். (28) நீர் வாதத்திற்கு துடரியிலை சாற்றிவிடவும். (29) அற்புத வாதத்திற்கு பிரண்டையிலை சாற்றிவிடவும். (30) சந்து வாதத்துக்கு சாரணையிலைச் சாற்றிலிடவும். (31) பல்லடி வாதத்திற்கு சுக்கு நீரிலிடவும். (32) குடைப்பு வாதத்திற்கு எலுமிச்சம் பழச்சாற்றிலிடவும்.

3

(33) உதை வாய்வுக்கு ஆதண்டயிலை சாற்றிலிடவும். (34) நடுக்கு வாதத்திற்கு கழற்கொடி பருப்பு சாற்றிலிடவும். (35) ஒடியடி வாதத்திற்கு உவர்மண்ணிலிடவும். (36) ஆசன் பிள்ளைக்கு பசுவின் பாலிலிடவும். (37) தண்டற்பிள்ளைக்கு பொன்னாங் கண்ணி சாற்றிலிடவும். (38) உச்சிப்பிள்ளைக்கு பசுவின் நெய்யிலிடவும். (39) பித்த சுரத்திற்கு முலைப்பாலிலிடவும். (40) சன்னிவாத சுரத்திற்கு சிட்டுக் குருவி முட்டையிலிடவும். (41) வாத சுரத்திற்கு நொச்சி யிலை சாற்றிலிடவும். (42) சேத்தும சுரத்திற்கு ஆடாதோடை சாற்றிலிடவும். (43) பித்த சன்னிக்கு உளாணானிலை சாற்றிலிடவும். (44) அஸ்த்து சன்னிக்கு துவரையிலை சாற்றிலிடவும். (45) நடுக்கு சன்னிக்கு சாரணை இலைச் சாற்றிலிடவும். (46) ~~பிம்புக்கு மாவை சாற்றிலிடவும்.~~ (47) அஞ்சனத்திற்கு வெற்றிலை சாற்றிலிடவும். (48) நசியத்திற்கு சிறுவழுதலைச் சாற்றிலிடவும். (49) பனையன் பாம்பிற்கு உமத்தையிலை சாற்றிலிடவும். முதிலை சாற்றிலிடவும். (50) ஸ்தம்பனத்திற்கு அத்திபாலிலிடவும். (59) யோனி குஷ்டத்திற்கு பிரண்டையை சாற்றிலிடவும். (60) ஆண்கட்டுக்கு முருங்கைப்பூ சாற்றிலிடவும். (61) மகோதரத்திற்கு அரப்பொடியிலிடவும். (62) நீர்க்கோவைக்கு எலுமிச்சம் பழச் சாற்றிலிடவும். (63) பித்த பாண்டுவிற்கு சவுக்கிலை சாற்றிலிடவும். (64) சோகைக்கு சீரகத்தி லிடவும். (65) காமாலைக்கு நவரிசியிலிடவும். (66) வறள் மாலைக்கு கடுக்காய் சாற்றிலிடவும்.

சங்குவெடையி கிருதம்:-

புளியம் பட்டைச் சாம்பல் ஒருபங்கு, பஞ்சலவண வகை ~~அந்த சாம்பலுக்கு சரியாய் யிந்த இரண்டுக்கும் சரியாய் யித்தை~~ ஒருபங்கு எருக்கு வேப்பம் பட்டை சாற்றிலரைத்து சங்கு பஸ்பம் கூட்டி ~~அதின்~~ பிறகு பெருங்காயம், சுக்கு, மிளகு, திற்பலியாந்த நான்கும் அதற்கு சரியாய் கூட்டி வேப்பம் பட்டை கஷாயத்தில் அரைத்து சுணப்பம்விதை பிரமாணம் குளிகை ~~பண்ணி~~ செய்து வெந்நீரில் கொடுக்க மகாவாத சூலை ~~எல்லாம்~~ தீரும்.

சங்குவெடையம்:- மருள் கிழங்கு. புளியாரணைக் கிழங்கு, அம்மணாந்தாளங் கிழங்கு, பிரண்டைவேர், கொடிவேலி, திரிபலம், பஞ்சமூலம், சுக்கு, மிளகு, திற்பலி, யிந்த நான்கும் அதற்கு சரியாய் கூட்டி வேப்பம் பட்டை கஷாயத்திலரைத்து சுணப்பம் விதை ~~பிரமாணம்~~ அளவு குளிகை ~~பண்ணி~~ செய்து வெந்நீரில் கொடுக்க மகா வாதவல்லை நோவு தீரும்.

மருள்கிழங்கு, புளியாரணைக் கிழங்கு, அம்மணாந்தான் கிழங்கு, பிரண்டைவேர், கொடிவேலி திரிபலம், பஞ்சமூலம், சுக்கு, மிளகு, திப்பலி, அதிவிடையம், சீரகம், சத்திசாரம், எவச்சாரம், நவச்சாரம், புங்கம்வேர், பெருங்காயம், ஓமம் ~~யாதுவெல்லாத்துக்கும்~~ இவைகளுக்கும் மூன்றுபங்கு சங்கு பற்பம் கூட்டி எலுமிச்சம் பழச்சாற்றில் ஒருநாளரைத்து இலந்தைக் கொட்டை ~~பிரமாணம்~~ அளவு குளிகை ~~பண்ணி~~ செய்து

திருக்க வயிற்றில் சூலை, ஆசிரணம், அலிமுகம்,
அரோசிகம், அக்கினி மாந்தம், வயிறு உப்புசம்
மலகிருமி ரோகம், குன்மம், வயிற்றில் கட்டி முதலானது தீரும்.

31. அ. புளியம் பட்டை சாம்பல் பலம் 2 அதற்கு சரியாய்
பஞ்சலவணம் எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து அதிலே
சங்கு பற்பம் பலம் 2 கூட்டி மிளகு, பெருங்காயம்,
செவ்வியம், வகை ஒன்றுக்கு மூன்று விராகனெடை
ரசம் மூன்று விராகனெடை, கெந்தகம், எலுமிச்சம்
பழச்சாற்றில் அரைத்து அரிசி கொட்டை பிரமாணம்
குளிகை பண்ணி திருக்க குன்மம், சூலை, அக்கினி
மாந்தம், விஷூசி, அதிசாரம், கிராணி என்னேரம்
பெருங் கோரம் பிராணி, விக்கல் தீரும்.

II-ம் காசங்குடையம்:-

திரசம், கெந்தகம், நாபி, வீரம் பாசுபதம் வகைமுறை
பாங்கு கொடிவேலி, சுக்கு, மிளகு, திப்பிலி, பெருங்காயம்
யாது வகைக் ஒன்றுக்கு மூன்றுபங்கு கூட்டி நவாச்சாரம்
வெண்காரம் எவ்வாச்சாரம், வெண்காரம், புளியம்பட்டை
சாம்பல், சயிந்த லவணம், சவிட லவணம், காசு
லவணம், சங்கு பாஷாணம், யாது வகை ஒன்றுக்கு
விராகனெடை 5 கூட்டி எலுமிச்சம் பழச்சாற்றிலரைத்து
குன்றிமணி பிரமாணம் குளிகை பண்ணி திருக்க சூலை
ஆசிரணம், அலிமுகம், அரோசிகம், பிலபந்தம்,
அக்கினி மாந்தம், வயிறு உப்புசம் மலகிருமிரோகம்
குன்மம், முதலான எல்லாம் தீரும்.

32. அ. இரச பூபதி :—

சங்குவேடையம், கெந்தகம், இரசம், சயிந்தலவணம், வெண்காரம், நாபி, பலகறை பற்பம், சங்குபற்பம், ~~யாதுகள்~~ [இவைகளை] கூட்டி பஞ்சமூல கிஷாயம், புங்கம்வேர் கிசாயம், இஞ்சிச்சாறு, ~~யாதுகளில்~~ [இவைகளில்] ஒவ்வொரு சாமம் அரைத்து ~~மடக்கில்~~ [மண் அகலில்] வைத்து ஒவ்வொரு குக்கிடப் புடம்போட்டு ஆறவிட்டு எடுத்து சூரணமாய், அரைத்து ~~யாதுஎல்லாத்துக்கும்~~ [இதற்கு] சரியாய் மிளகுசூரணம் கூட்டி பஞ்சலோக கஷாயத்தில் ~~தி~~[கொ]டுக்க பஞ்சகுல்மம் ~~சேஷ்ட்டுமம்~~ [கப] சுவாசம், மந்தாக்கினி, அக்கினிமாந்தம் ~~இதுகள்~~ [அஜீரணத்திய நோய்கள்] தீரும்.

இரசம் ~~௫க~~ [பலம் ¼], கெந்தகம் ~~௫க~~ [பலம் ¼], நாபி ~~௫க~~ [பற்பம் பலம்] செருப்படைச் சா~~ற்றில்~~[றில்] நா~~லு~~[ன்கு] சாமம் அரைத்து குன்றுமணி பிரமாணம் குளிகை ~~பண்ணி~~ [செய்து] காசுகுப்பியிலிட்டு சீலைமண் பூசி வாலுகா எந்திரத்தில் நா~~லு~~[ன்கு] சாமம் தீபாக்கினி, கமலாக்கினி, காடாக்கினியால் எரித்து ஆறினபிறகு எடுத்து இந்த மருந்~~துக்கு~~[துக்கு] ~~காலத்தொன்று~~ [நாலிலொரு பங்கு] நாபி கூட்டி நாபிக்கு சரியாய் மிளகு கூட்டி வெ~~த்தி~~[ற்றி]லை சா~~த்தி~~[ற்றி]ல் நா~~லு~~[ன்கு] சாமம் அரைத்து துவரை ~~பிரமாணம்~~ [அளவு] குளிகை ~~பண்ணி~~ [செய்து] ~~தி~~[கொ]டுக்க சகல ரோகமும் சுவாசகாசம், பாண்டு காமாலை, சூலைவாய்வு, சன்னிபாதம், சுரம் ~~யாதுகள்~~ [இவை] தீரும்.

33. அ. தாம்பிர பூபதி :—

இரசமும், கெந்தகமும் சரியாய் கூட்டி இவ்விரண்டுக்கு நாலிலொன்று நாபி கூட்டி இவை மூன்றுக்கும் பதினாறு பங்கு தாம்பிர பஸ்பம் கூட்டி செருப்படையிலைச் சாறுவிட்டு ஒருநாளரைத்து குளிகை செய்து காசு குப்பியிலிட்டு வாலுகா எந்திரத்தில் தீபாக்கினி, காடாக்கினி, கமலாக்கினியில் எட்டு சாமம் எரித்து அகலிலிட்டு மூடி சீலைமண் பூசி ஒரு குக்கிடபுடம்போட்டு ஆறவிட்டெடுத்து இந்த மருந்திற்கு நாலிலொன்று நாபியும் நாபிக்கு சரியாய் மிளகு கூட்டி கொட்டைக்கிரந்தைச் சாற்றில் ஒரு சாமம் அரைத்து குன்றுமணி அளவு குளிகை செய்து இஞ்சிச் சாற்றில் கொடுக்கவும் தீரும் வியாதி அக்கினிமந்தம், சுரம், வாத தோஷம், சோகை, பாண்டு, பீலிகம், குன்மம், மூலம், சன்னிபாதம் இவை தீரும்.

அக்கினி குமார பூபதி :—

இரசம், கெந்தகம், தாம்பிர பற்பம், ஏமனிகம், மனோசிலை, அரிதாரம், இவை சரியாய் கூட்டி செருப்படைச் சாற்றில் இரண்டுசாமம் அரைத்து குன்றுமணி பிரமாணம் குளிகை செய்து காசு குப்பியிலிட்டு சீலைமண் பூசி வாலுகா எந்திரத்தில் தீபாக்கினியில் கமலாக்கினியில் எட்டு சாமம் எரித்து பிறகு எடுத்து இதற்கு நாலிலொன்று சிவநாபி கூட்டி நாபிக்குச் சரியாய் மிளகு கூட்டி இஞ்சி சாற்றில்

சாமம் அரைத்து உழுந்து பிரமாணம் குளிகை செய்து கொடுக்கத் தீரும் வியாதி ஜலம் சத்தியாம். பசி உண்டாகும். அஜீர்ணிகம், அக்கிராணி, வாய்வு, சுவாச காசம், பீனிசம், சகல ரோகங்களும் தீரும்.

34. அ. சித்தாக்கினி பூபதி:—

இரசம், கெந்தகம், வெங்காரம், நாபி, இவைகள் சரியாய் கூட்டி எருக்கிலைச் சாற்றில் சாமம் அரைத்து வச்சிர மூசை செய்து வாலுகா எந்திரத்தில் தீபாக்கினி, கமலாக்கினி காடாக்கினியில் ஒரு சாமம் எரித்து ஆறின பிறகு எடுத்து இஞ்சி சாற்றில் சாமம் அரைத்து குன்றிமணி அளவு குளிகை செய்து கொடுக்க சுரம் சன்னியும், அஸ்தியும் தீரும்.

மார்த்தாண்ட பூபதி:—

இரசம், வெங்காரம், கெந்தகம், தாளகம், மனோசிலை, இவை சம எடை கூட்டி செருப்படைச் சாற்றில் எட்டு சாமமரைத்து காசிக்குப்பியில் அடைத்து சீலைமண் பூசி நொச்சிலைச் சாற்றில் அரைத்து குன்றிமணி அளவு குளிகை செய்துக் கொடுக்க பதின்மூன்று வகை சன்னி சுரம் தீரும்.

ஆ. மகா அக்கினி குமார பூபதி:—

இரச பற்பம், தாம்பிர பற்பம், நாபி, வெங்காரம், இவை சம அளவு கூட்டி நொச்சிச் சாறு கொடிவேலிச் சாறு, கண்டங்கத்திரி சாறு தழுதலைச் சாறு, இவைகளில்

இருபத்தொரு நாள் அரைத்து குன்றுமணி அளவு குளிகை செய்து கொடுக்க சன்னிபாதம், நசிகைவாய்வு, வாய் அடைத்தல், ஆகிய நோய்கள் தீரும்.

35. அ. சொர்ண பூபதி:—

இரசம் பற்பம், தாம்பிர பற்பம், கெந்தகம், தங்க பற்பம், காந்த பற்பம், வெள்ளி பற்பம், இவை சமஎடை கூட்டி செருப்படைச் சாற்றில் எட்டு சாமம் அரைத்து குன்றுமணி அளவு குளிகை செய்து காசிக்குப்பியிலிட்டு சீலைமண் பூசி வாலுகா எந்திரத்தில் தீபாக்கினி, கமலாக்கினி காடாக்கினியில் ஆறு சாமம் எரித்து ஆறின பிறகு எடுத்து இஞ்சி சாற்றில் சாமம் அரைத்து பணவிடை அளவு குளிகை செய்து இஞ்சி சாற்றில் திப்பிலியில் கொடுக்க சேத்துமம், திரிதோஷம், பதிமூன்று சன்னி, அஸ்திக வாதம், அதிர்வாதம், தனுர்வாதம், ஆமைவாதம், சர்வ வாதமும் முதலாய் அந்தகாரமென்னும் இருட்டில் சூரியனுதயமானாற் போலேயிருக்கும்.

36. அ. சர்வ சுர பூபதி:—

இரசம், கெந்தகம், தாம்பிர பற்பம், தாளகம் இவை வகைக்கு பலம் க, எலிபாஷாணம் பலம் உ, கைவரிபாஷாணம் பலம் உ இவைகளை கூட்டி சித்திரமூல கஷாயத்தில் இரண்டு சாமமரைத்து மிளகு அளவு குளிகை செய்து காசிக்குப்பியிலிட்டு சீலைமண் பூசி வாலுகா எந்திரத்தில் கமலாக்கினியில் நான்கு சாமம் எரித்து ஆறவிட்டெடுத்து

கிரிந்த பெருந்திரு நாலின்றை சிவநாபி கூட்டி நாபிக்கு
சரியாய் மிளகு கூட்டி நெரச்சில் சாற்றில் ஒருசாமமரைத்து
உருண்டு அரை உளிகை செய்து இஞ்சி சாற்றில்
கொடுக்க பதினேழுவகை சன்னியும் ஏகாக்கியம், திரியாக்
கியம், சுரமுந் தீரும்.

ஆ. வாசாபிருங்க கிருதம் :—

ஆடாதோடைச் சாறு, கரிசலாங்கண்ணிச் சாறு, இவைகள் கூட்டி இதுக்கு
பசுவின் கோமியம், பசுவின் பால் இவைகள் கூட்டி
கல்க்க திரவியம் திப்பிலிமூலம், அரத்தை, தாளிசபத்திரி,
இலைவகைக்கு பலம் ஒவ் சூரணம் செய்து அந்த நெய்யில்
போட்டு மெழுகு பக்குவத்தில் காய்ச்சி வடித்து கொண்டு குடிக்க
சுவாசம், அஸிமுகப் பாண்டு, மூலரோகம், சோபை,
பீலிகம், சுரம், அக்கினி மாந்தம், நாசியில் விழுகிற
இரத்த பித்தம், இரத்த வாந்தி அதுவை நோய்கள் தீரும்.

அருகம் வேர், நெய்தல் கிழங்கு, தாமரைக்கிழங்கு
மஞ்சட்டி, ஏலம், பெருங்கிழங்கு, வெட்டிவேர், கோரைக்
கிழங்கு, சந்தனம், திராட்சப் பழம், அதிமதுரம், வகைக்கு
37.அ விராகனை ரூ சூரணம் பண்ணி இருநாழி நெய்யில்
போட்டு அருகன் வேர் சாறு இருநாழி இதில் அந்த
சூரணம் போட்டு மெழுகு பக்குவத்தில் காய்ச்சி
வடித்து கொண்டு குடித்து தலைக்கும் இடவும். —
மூக்கில் நசியம் செய்ய இரத்தவாந்தி, பயித்தியம்,
காமாலை இவைகள் தீரும்.

ஆ. மகாவாசக் கிருதம் :—

ஆடாதோடை இலைச்சாறு, நெய்நாழி, பால் ~~யிதுகள்~~ இவை கூட்டி கல்க்கம் நிலவேம்பு, கொடிகசையிலைபட்டை, அதிமதுரம், சந்தனம், வெட்டிவேர், நருப்பைபூ, கொத்தான், நன்னாரி வேர், நெல்லி பருப்பு, தாமரைக் கிழங்கு, நெய்தல் கிழங்கு, மாதுளம் கொழுந்து வகைக்கு விராகனிடை க. கூட்டி சூரணம் ~~[illegible]~~ பலம் அந்தநெய்யில் கலந்து மெருக்கி பக்குவமாய் காய்ச்சி ~~வடிச்சக்~~ வடித்து கொண்டு ஒரு பலம் சர்க்கரையும், உழக்கு தேனும் கலந்து வைத்து கொண்டு குடிக்க இரத்த பித்தம், சுவாசகாசம், குஷ்டம், சுரம், ~~வேதம்~~, அலிசுகம் ~~யிதுகள்~~ இவைகள் தீரும்.

38\. அ. படாதி கிருதம் :—

வட்டத்திருப்பிவேர், வில்வம் பிஞ்சு, மாதுளம் கொழுந்து, வெருமரபட்டை, கோரைக் கிழங்கு, திராக்ஷைப்பழம், சந்தனம், மாம்கொட்டை, நாவல்க் கொழுந்து, நிலப் பனம் கிழங்கு, வாழைக் கிழங்கு, ~~யிது~~ இவை வகை ஒன்றுக்கு விராகனிடை ~~ஒன்று~~ கூட்டி நாழி பாலிலரைத்து நாழி நெய்யில் வார்த்து பக்குவமாய் காய்ச்சி வடித்துக் கொண்டு ~~ஸ்திரீகளுக்கு~~ அஸ்திசுரம், பெரும்பாடு, சூதுசூலை நோய்கள் ~~யிதுகள்~~ தீரும்.

ஆ. வராகி கந்த கிருதம் :—

நிலைப்பனம் கிழங்கு, பலம் ஒள, நாவல் பட்டை பலம் ஒள கருங்காலி பட்டை பலம் ஒள, முருக்கம் பட்டை பலம் ஒள ~~யிதுகள்~~ இவை கூட்டி பதினாறு மரக்கால் ~~தண்ணியில்~~ நீர் விட்டு போட்டு

நாலில் ஒன்றாய்

~~நாலத்தொண்ணாய்~~ காய்ச்சி வடித்துக்கொண்டு அதிலே
பசுவின் நெய் ~~நாலாழி~~ நாலில் ஒன்றாய் வார்த்து, புளியாரைச் சாறு
தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு, பால் நான்கொன்றி அந்த
நெய்யில் கலந்து, கல்க்கம் திரவியம், விளாவோடு,
சடாமாஞ்சில், கொத்தமல்லிவிதை, வட்டத்திருப்பிவேர்,
மாங்கொட்டை பருப்பு, திரிபலை, கர்ச்சூரபழம்,
சுக்கு, திராட்சை பழம், செம்மரம், இலவம்பிஞ்சு,
தாமரைப்பூ, ~~நாகேசரம்~~ நாகப்பூ, ~~கொடிச்சி~~ ஓடைப் பாளை பட்டை,
~~கோத்தான்~~ முடக்கற்றுத்தான், எருக்கம்பூ, அதிமதுரம், மாதுளங்கொழுந்து,
அதிவிடையம், கோரைக்கிழங்கு, வில்வப்பழம்,
திப்பிலி, அமுக்கிறாங்கிழங்கு, நன்னாரிவேர்,
வெட்டிவேர், ~~யாதுக்கை~~ கிளை ஒன்றுக்கு விராகனெடை
ஒன்று கூட்டி சூரணம் ~~பண்ணி~~ செய்து பாலில் கரைத்ததை
நெய்யில் கலந்து மெழுகுபக்குவத்தில் காய்ச்சிவடித்து
~~கொண்டு~~ உழக்கு தேன் கூட்டி குடிக்க யோனியில்
பிறந்த ரோகமெல்லாம் போம். மாதவிடாய் செந்நில
வர்ணமாய், கிருஷ்ண வர்ணமாய், பாண்டு வர்ணமாய்,
~~வெளிப்பு~~ வெளுப்பு வர்ணமாய், பச்சை வர்ணமாய் விழுகின்ற
ரோகம், சுவாச காசம், அஸ்திசுரம், சுரசாதகம்,
மேல் பாண்டு காமாலை ~~யாதுகள்~~ கிளை தீரும்.

ஆ. கண்டகாரி கிருதம்:—

கண்டங்கத்திரி சாறு நாழி, நெய் நாழி கூட்டி
சுக்கு, மிளகு, திப்பிலி, மாதுளங்கொழுந்து, சவ்வாக்ஷா
ரம், யவக்ஷாரம், வாய்விளங்கம், செங்கல்,

கோஷ்டம், கடுக்காய், வகை ஒன்றுக்கு விராகனெடை ஒன்று கூட்டி சூரணம் செய்து அந்த நெய்யில் கலந்து மெழுகு பக்குவத்தில் காய்ச்சி வடித்து குடிக்க இருமல், உப்பிசம், ~~இந்திர ரோக மேகநாத~~, நெஞ்சக் நோய், சுரம், பெருமூச்சு இவைகள் தீரும்.

திரிசமூல கிருதம்:—

முன்னை வேர், பாதிரி வேர், வில்வ வேர், சிற்றாமல்லி வேர், பேராமல்லி வேர், சிறுவழுதலை வேர், கண்டங் கத்திரி வேர், நெருஞ்சில் வேர், காட்டுவொறைழ வேர், பெருங் குமிழ் வேர், இவை வகை ஒன்றுக்கு பலம் ஒன்று கூட்டி எட்டு மரக்கால் நீரில் போட்டு எட்டிலொன்றாய் காய்ச்சி வடித்துக்கொண்டு அதில் இருநாழி நெய் வார்த்து, கல்க்க, சயிந்தலவணம், கண்டுபாரங்கி, கற்கடகசிங்கி, செவ்வியம், தாளிசபத்திரி, மிளகு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லி பருப்பு இவைவகை ஒன்றுக்கு விராகனெடை ஒன்று கூட்டி சூரணம் செய்து அந்த நெய்யில் கலந்து மெழுகு பக்குவத்தில் காய்ச்சி வடித்துக்கொண்டு குடிக்க விக்கல், சுவாசம், தூசைகள், குன்மநோய், அரோசகம், மருந்தின் நோய் இவைகள் தீரும்.

~~ச: தவிமிசிதிக்குது:~~

சுக்கு, மிளகு, திப்பிலி, திரிபலை, கோரைக்கிழங்கு, வாய்விளங்கம், செவ்வியம், கொடிவேலி, ஏலம், திப்பிலிமூலம், தேவதாரு கோஷ்டம், மஞ்சள், மரமஞ்சள், சாலவணம், சயிந்திலவணம், ஆனைத்திப்பிலி

இவையெல்லாம் ஒருபங்கு சூரணம் செய்து மயாசாவி
பாதியும் அதிலே கூட்டி அதற்குத் தக்க நெய், தேன்,
வார்த்து பிசைந்து, அழிஞ்சில்கொட்டை அளவு
குளிகை செய்து தின்ன அஷ்டகுஷ்டமும்,
அசனத்தில் நாடிவிரணம், சுவாசம், அஜீரணரோகம்,
பகந்திர குன்மம், பீலிகம், ~~வயிற்றுப்புற அனதம், அந்திர~~
~~விருத்தி~~ சுரம், சேத்துமம் இவைகள் தீரும்.

மகாருது சாதிரசாயனம்:—

திராட்சை பழம், பலம் ஒ யசா, பொரி பலம் ஒ யசா, சுக்கு பலம் ஒ யசா
கொத்தமல்லி விதை பலம் ஒ யசா, வெட்டிவேர் பலம் ஒ யசா, அதிமதுரம் பலம் ஒ யசா, சந்தனகிள்ளி பலம் ஒ யசா, பருத்திக்கொட்டை
பருப்பு பலம் ஒ யசா, ஏலம் பலம் ஒ யசா, நெல்லி பருப்பு பலம் ஒ யசா
கோரைக்கிழங்கு பலம் ஒ யசா, சீரகம் பலம் ஒ யசா, வில்வ
பத்திரி வேரும், சிஞ்சம் பலம் ஒ யசா, சிந்தில் கொடி நுய
இவைகளின் கூட்டி பதினாறு மரக்கால் நீர் விட்டு
எட்டிலொன்றாய் காய்ச்சி வடித்து அதிலே ஜீனிப்பூ பலம் ஒ
சர்க்கரை போட்டு நெல்லிக்காய்ச்சாறு நாழி, பசுந்தயிர்
நாழி, பொரிகஷாயம் நாழி, கொம்மட்டி மாதுளம்
பழச்சாறு நாழி, எலுமிச்சம் பழச்சாறு நாழி,
வெள்ளை வெற்றிலைச் சாறு நாழி இவைகள் கூட்டி

பலம் இத்திரி கல்கம் :- சுக்கு ஒ ச, இலவங்கம் ஒ க,
நாகேசரம் ஒ க, கொத்தமல்லி விரை ஒ க, சீரகம்
ஒ க, ஏலம் ஒ க, திப்பிலி ஒ க, உ, திப்பிலிமூலம் ஒ க,
கொடிவேலி ஒ க, செவ்வியம் ஒ க, தாளிச பத்திரி ஒ க
இவையெல்லாம் சூரணம் செய்து அந்த லேகத்தில் போட்டு

லேகம் பக்குவமாய் காய்ச்சி அதிலே நாளைக்கு தேன்
வார்த்து கலந்து தின்னவும் நேத்திர ரோகம், அரோசிகம்,
வாந்தி, விக்கல், இருமல், உப்புசம், சுவாசம், அஜீரணம்,
அதிசாரங்கள் தீரும், பசி உண்டாகும்.

மகாகூஷ்மாண்ட இரசாயனம்:—

பலம்

பெரும் பூசணிக்காய்ச் சாறு ௱ பலம் பாலிருளிக்கிழங்கு
௱ பலம், கரும்பு ௱ பலம், வாழைக்கிழங்கு ௱ பலம்,
நெருஞ்சில்: இவைகளில் கல்க திரவியம் திராட்சைப்பழம்,
கர்ச்சூர பழம், கொத்தமல்லிவிதை, சந்தனம், சீரகம்,
அதிமதுரம், ஏலம், இலவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி,
பஞ்சமூலம், இலவங்கம், வாய்விளாங்கம், சதகுப்பைவிதை
தக்கோலம் போட்டு, தாமரைப்பூ, நாககேசரம், நெல்லி
பருப்பு, வெட்டிவேர், ரேணுகம், ஜடம், மிளகு, கருஞ்
சீரகம் இவைவகை ஒன்றுக்கு மூன்று வராகனெடை கல்க
கூட்டி சூரணம் செய்து அதை நெய்யால் போட்டு
மெழுகு பக்குவமாய் காய்ச்சி வடித்துக்கொண்டு
அதிலே தேன் ௱ பலம், வார்த்துக்கொண்டு தின்னவும்
வியாதி. க்ஷயம், காய்ச்சல் சுரம், வாந்தி, மூர்ச்சை
அபஸ்மாரம், காமாலை, இரத்தபித்தம், அரோசகம்,
அதிசாரம், யோனியில் தோஷம் மாசூதகம், கடுப்பு,
விக்கிற பிள்ளை, நீங்கும். கர்ப்பமின்னி வர்த்திக்கும்:
சரீரம் புஷ்டியாம். போவது ..

42.அ. இரச செந்தூர யோகம் :—

இரச செந்தூரம் சுத்தி: இரசம் நெல்லிக்காய் கெந்தகம் இரண்டும் சரியாய் கூட்டி பொடி செய்து காசி குப்பியில் வரையளவு போட்டு அந்த குப்பி வாயை அடைத்து ஏழு சீலைமண் பூசி வாலுகா எந்திரத்தில் தீபாக்கினி, கமலாக்கினி, காடாக்கினி தொன்னூறு நாழிகை எரித்து ஆறவிட்டு எடுக்க செந்தூரமாம். இந்த செந்தூரத்தில் தீரும் வியாதி. சக்கரையுடன் அனுபானம் செய்து கொடுக்க இருமல் தீரும். முசுமுசுக்கை சாற்றில் கொடுக்க சிலேஷ்மம் தீரும். க்ஷயமும் தீரும். சீரவெண்காய சாற்றில் கொடுக்க இரத்த க்ஷயமும் தீரும். கடுக்காய் கஷாயத்தில் கொடுக்க சுவாச காசம் தீரும். திப்பிலியால் கொடுக்க இருதய ரோகம் தீரும். நொச்சிலை சாற்றில் கொடுக்க இருதய நோய் தீரும். சர்க்கரையும் தேனும் கூட்டிக் கொடுக்க பயித்திய க்ஷயம் தீரும். நொச்சி சாற்றில் கொடுக்க இருதய ரோகம் தீரும். நொச்சில் சாற்றில் கொடுக்க காய்ச்சல் குளிர் தீரும். நன்னாரி வெண்ணீரில் அரைத்து கொடுக்க முறைகாச்சல் விடும். கொடிவேலி கஷாயத்தில் கொடுக்க நெருப்பு காச்சல் விடும். குப்பைமேனி சாற்றில் கொடுக்க முறை காய்ச்சல் விடும். வெல்லத்திலாவது, மோரிலாவது கொடுக்க அதிசார சுரம் தீரும். வெண்ணையில் கொடுக்க விக்கலும், வாந்தியும் தீரும். பருத்திக் கொட்டையை தண்ணீர் வார்த்து இடிச்சு பிழிந்து அந்த தண்ணியில் கொடுக்க வெகுமூத்திரம் தீரும்.

வெள்ளரி சாறு உரைத்து தொடுக்க காமாலை தீரும்.
நெய்தல் பூ சாறு பிழிவாக, அதின் கிழங்கு சாறு பிழிவாக தொடுக்க
இரத்த பித்தம் தீரும். கஞ்சா சாற்றில் தொடுக்க கிராணி
43. அ. தீரும். நாயுருவி சாற்றில் தொடுக்க மேகவியாதி தீரும்.
தேன் கொடுக்குப் பூண்டு சாற்றில் தொடுக்க நீர்கட்டு தீரும்.
உடம்பெரிப்பு தீரும். சுண்ணாம்பு தண்ணீரில் தொடுக்க
நீர்ப்பாட்டுக்கழிச்சல் தீரும். கருங்காலி பட்டை சாற்றில்
தொடுக்க மூன்று நாளைக்கொருக்கால்
ஐந்து நாளைக்கொருக்கால், பத்து நாளைக்கொருகால்,
கழியும் சங்கிராணியும், இரத்த கழிச்சலும் தீரும்.
மாவிலிங்க கஷாயத்தில் தொடுக்க அக்கினி மாந்தம் தீரும். தினம்
சங்கயிலைச் சாற்றில் தொடுக்க விடபாகம் தீரும்.
வேரு கஷாயத்தில் தொடுக்க சர்வாங்க வீக்கமுந் தீரும்.
பேய்கரும்பின் சாற்றில் தொடுக்க உன்மாதம் தீரும். மருதம்
பட்டை சாற்றில் தொடுக்க அக்கினி பிரமியம் தீரும்.
அதிவிடையம் வெந்நீரில்
தொடுக்க வயிறு கழிச்சலுடன் சூலையும் வயிற்றுவலி தீரும்.

சுப்பம் :

சூசிகா பாணம் :-

இரசம், கெந்தகம், சொர்ண சுப்பம், நாபி, வெள்ளி
சுப்பம், லோக சுப்பம், தாம்பிர சுப்பம், வங்க சுப்பம்,
நாக சுப்பம், அப்பிரக சுப்பம், காந்த சுப்பம், இவை
சரியாய் கூட்டி நொச்சியின் சாறு,
கரிசிலாங்கண்ணி சாறு, சாறு வேளை சாறு, பேய் புடல்
சாறு, ஆடாதோடை இலை சாறு, சீந்தில் கொடிச் சாறு,

எருக்கிலைச்சாறு, ஊமத்தை (பிணை) சாறு, துளசிச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, கொடிவேலி சாறு. ~~இதுகள்~~ (இவை) ஒவ்வொன்னில் ஒவ்வொரு நாழிகை அரைத்து ~~அது கக~~ கை உருட்டி காசி கெம்பியால் எடுத்து குப்பிவாய் வலபக்கல் அடைச்சு ஏழுசீலை மண் பூசி வாலுகா எந்திரத்தில் கமலாக்கினி, காலாக்கினியால் முப்பது நாழிகை எரித்து ஆறின பிறகு எடுத்து ஆட்டுப்பிச்சு, எருமைகிடா பிச்சு, கழுதை பிச்சு, குதிரை பிச்சு, மனிசன் பிச்சு, மீன் பிச்சு, ஆமையின் பிச்சு, முதலை பிச்சு, பாம்பு பிச்சு, கோழி பிச்சு, பன்றி பிச்சு, காட்டுபன்றி பிச்சு, புலி பிச்சு, நரி பிச்சு, நீர்தவளை பிச்சு, ~~பின்னையு முண்டான~~ (மற்ற) சீவத்துகள் பிச்சுகளெல்லாம் கூட்டி அரைத்து குரு ~~பிரமாணம்~~ (அளவு) குளிகை ~~பண்ணி~~ (செய்து) அநுபான விசேசத்தில் ~~கொடுக்க~~ (தர) சுகவாய்(ம்), முதலாய அசாத்தியமான ரோகம், சன்னிபாத ~~முதலாய~~ (போன்ற) தீரும். ~~காலவிரத்தியானாலும்~~ (இணைமாத்திரை, காலம் அனைத்தும்) தெளிவு ~~கொடுத்து~~ (தந்து) போம். ~~அவ்விரத்தியானாலும் இணைமாம்.~~

சோகி இரசம் :—

இரசம், நாபி, கெந்தகம், அரிதாரம், கெவுரி பாஷாணம், தொட்டி பாஷாணம், இங்கிலிகம், மயில் துத்தம், ~~அப்புரகம்~~ (அப்பிரகம்), நேர்வாளம், வெங்காரம், நிர்விஷம், சத்தி சாரம், எவ்வாசாரம், சயிந்த லவணம், விட லவணம், சமுத்திர லவணம், காசலவணம், சூரக்காரம், படிக்காரம், கோமூத்திர சிலாசத்து, கற்பூர சிலாசத்து, காந்த சுப்பம், லோக சுப்பம், தாமர சுப்பம், வெண்கல சுப்பம், வங்க சுப்பம், தகர சுப்பம், சொர்ண சுப்பம்,

வெள்ளிசுப்பம், நவரத்தினசுப்பம்.

சுக்கு, மிளகு, திப்பிலி, வசம்பு, சீரகம், கருஞ்சீரகம்,
கண்டுபாரங்கி, அதிமதுரம், கடுகுரோகணி, ஏலம், இலவங்
கம், இலவங்கபத்திரி, ~~செங்கழுநீ~~ கோஷ்டம், கர்க்கடசிங்கி,
~~வாது~~ தக்கோலம், சடாமாஞ்சில், எட்டிக்கொட்டை
திலை ~~வெல்லாம்~~ சரியாய் கூட்டிக் கொண்டு கொடிவேலி,
இரும்பிலி வேர், முருள் கிழங்கு, பேய்பிர்க்கம் வேர்,
கருங்காலி பட்டை, குடைப்பாலை பட்டை, அரசம்பட்டை,
விசிறி பட்டை, தண்ணீர்விட்டான் கிழங்கு, வில்வம் பட்டை,
முருங்கை பட்டை, முருக்கம் வேர், சிற்றாமுட்டி, பேராமுட்டி
வேர், தும்பி வேர், வாழை கிழங்கு, நெய்தல் கிழங்கு,
வெட்டி வேர், குறு வேர், சங்கம் வேர், தாழை விழுது,
அமுக்கிரா கிழங்கு, குமிளம் வேர், புங்கம் வேர்,
நன்னாரி வேர், முருக்கிலை, ஊமத்தையிலை, ஆடாதோடை
யிலை, செம்பருத்தி இலை, ஆமணக்கிலை, கோவையிலை,
பேய்பிரத்தியிலை, கோரைக் கிழங்கு, கண்டங்கத்திரியிலை
சிறுவழுதலையிலை, நெருஞ்சிலிலை, கரிசலாங்கண்ணி
மூக்கிரட்டையிலை, சாறுவேளையிலை, காட்டுபாகலிலை,
பிரண்டை, பேய்புடல், மணத்தக்காளியிலை, முருங்கையிலை,
நொச்சியிலை, புளியிலை, கிழுகிழுப்பையிலை, வேப்பீர்க்கு,
உத்தாமணியிலை, அகத்தியிலை, கற்றாழை, காரையிலை
அருகம்புல், செப்புநெருஞ்சில், நாயுருவியிலை, கீழாநெல்லி
யிலை, வெள்ளருகு, விஷ்ணுகிரந்தி, கஞ்சாயிலை, தாமரை
யிலை, கொன்றையிலை, உசிந்தையிலை, தேற்றானிலை,

துளசி, அம்மான் பச்சரிசியிலை, பேராமல்லி இலை,
பற்பாடகம், கழற்சியிலை, பிரும்பிக்கீரையிலை, உருவச்சை
யிலை, யசறை, சேராங்கொட்டை, பால்சோறையிலை,
பெரும்பூசணிக்காய், எலுமிச்சம் பழம், தாதிநிம்ம பழம்,
~~நகை~~ நாரத்தம் பழம், களாக்கி, கடுக்காய், தான்றிக்காய்,
நெல்லி பருப்பு, கடலைப்பருப்பு, சதகுப்பி விதை, கொத்த
மல்லிவிதை, செண்பக மொக்கு, விராயன் பால், எருக்கன்
பால், ஆலம்பால், சதுரக்கள்ளிப்பால், முன்சொன்ன வேர்
வகை கஷாயங்கள் இலை சாறு, கிழங்கு சாறுவகைகள்
எல்லாம் கஷாயம் சாறுயில்லாததெல்லாம் தண்ணீர்
விட்டு பிழிந்து கொள்ளவும். இவை ஒவ்வொன்றில்
ஒவ்வொரு தரம் ~~பிறகும் யிரத்தேமாக~~ அரைத்து,
உலர்த்தி காசிகுப்பியிலிட்டு குப்பி வாயை ~~வை... ல்லா~~
~~மல் பலபக்கவிட்டு~~ அடைத்து எரித்த பிறகு எடுத்து
~~கொண்டு~~ அதற்குள் கூட்டும் பிச்சு வகைகள்.
எருமைகிடா, பூனை, ஆடு, நரி, நாய், கரடி, புலி,
குதிரை, கழுதை, மான், ஆமை, பன்றி, காட்டுபன்றி,
முள்ளம்பன்றி, கோழி, காட்டுக்கோழி, மயில், பாம்பு,
முயல், முதலை, மனுஷன், கீரி, தேவாங்கு, உடும்பு,
புனுகு, பூனை, காட்டுப்பூனை, கோட்டான் புலி, ~~கடுத்து~~
~~கடம்பை~~, காட்டெருமை, கிரிச்சல் ~~ஆனை கோட்டான்~~
~~கூனி யிது வை முதலான பிள்ளைய மண்டான~~ இவைகளின் ~~சில~~
~~சிந்துகள்~~ பிச்சுகள் எல்லாம் கூட்டி அரைத்து பயறு
~~பிரமாணம்~~ அளவு குளிகை ~~பண்ணி~~ செய்து கடு~~மான~~ வியாதிக்கும்
கற்பூரம் கூட்டி ~~அதுக் கொத்த~~ தக்க அநுபானத்தில்

~~திருக்க~~ (கையிலுறு திட்டான வியாதிகளெல்லாம் தீரும்)
இருக்கு பத்தியம் / சோறும், மிளகு, சர்க்கரை, கரும்புச
சாறு, ~~பின்னேயும் இருந்ததியான~~ சந்தனம், கற்பூரம்,
வெட்டிவேர், இருவேர், யாதுகளாம்

ஆ. விரவிய கிருத இரசம் :—

இரசம் பதினெட்டு, கெந்தகம் பன்னிரெண்டு (நிறை) பங்கு
அரிதாரம் ஒன்பது (நிறை) மனோசிலை நாலு (நிறை) பங்கு
தாம்பிர சுப்பம் மூன்று (நிறை), லோக சுப்பம் ஆறு (நிறை),
காந்த சுப்பம் இரண்டு (நிறை), ~~யாதுவெல்லாம்~~ இவைகளை கூட்டி
மாதுளம்பூ சாற்றில் அரைத்து உலர்த்தி காசி குப்பியில்
எடுத்து குப்பி வாய்க்கு (புரையில்லாமல் பலபக்கல்)
அடைத்து ஏழு சீலைமண் பூசி வாலுகா எந்திரத்தில்
தீபாக்கினி, கமலாக்கினியில் நாற்பத்தெண் நாழிகை
எரிக்க செந்தூரம் போலே ஆகும். ஆறவிட்டு எடுத்து
இஞ்சி சாற்றில் அரைத்து ஒன்றுமணி ~~பிரமாணம்~~ அளவு குளிகை
47. அ. ~~பண்ணி~~ செய்து ~~வியாதிக்கு ஏற்ற~~ நோய்க்கு ஏற்ற அநுபானத்தில் ~~கொடுக்க~~ கொடு ~~தீரும்~~
~~வியாதி~~ சுரம், சுவாசகாசம், பயித்தியம், ~~முதிர்ந்தாள்~~
காமாலை, கோமாலை, ~~முதிர்ந்தாள்~~ பாண்டுவும், ~~பாண்டு~~
மூத்து, அலிமுகம் எக்காளபம் பஞ்சகோக சன்னிபாதம்
தீரும்.

ஆ. கோழிமுட்டையில் செந்தூரம் போடும் வகை

கோழி முட்டையை ~~வெள்ளைசம்~~ போக்கி அதிலே இருக்கிற
கருவெல்லாம் வாங்கி போட்டு ஒரு முட்டைக்கு இரண்டு
விராகனிடை இரசமும், ஒரு விராகனிடை கெந்தகமும்

செய்து
பொடி ~~பண்ணி~~ அந்த முட்டையிலடைத்து அந்த முட்டை
னாலேயே / வையிலிட்டு ஒரு
ஓட்டி~~லே தானே~~ மூடி காசு கட்டி ~~பந்தனம் பண்ணி அதுக்கு~~
மூன்று சீலைமண் பூசி வாலுகா எந்திரத்தில் தீபாக்கினி,
கமலாக்கினி, கடாக்கினியில் தொண்ணூறு நாழிகை
எரிக்க செந்தூரமாம். இப்படி ஒரு சட்டியில் நாலாறு
போடலாம்.

நீக்கவும்

48. அ. திரிலோக செந்தூர மணி இரசம்:— Incomplete.

நாபி, கெந்தகம், அரிதாரம், அப்பிரகம், சொர்ண
சுப்பம், பவழ சுப்பம், வங்க சுப்பம், வெள்ளி சுப்பம்,
தாம்பிர சுப்பம், லோக சுப்பம், வச்சிர சுப்பம், முத்து
சுப்பம், கற்பூர சிலாசத்து இவையெல்லாம் சரியெடை கூட்டி
கொடிவேலி சாயத்தில் ஏழுநாள் அரைத்து நொச்சிச்
சாற்றில் ஒருநாள் அரைத்து கருணை கிழங்கு சாற்றில்
ஒரு சாமம் அரைத்து, ஆலம் பாலில் மூன்று நாள்
அரைத்து, எருக்கம் பாலில் மூன்று நாளரைத்து, (சு... கள்.
பாலில் மூன்று நாளரைத்து) அதின் பிறகு காசிகுப்பியில்
விட்டு குப்பி வாயை (வலப்பக்கலிட்டு) அடைத்து
ஏழு சீலைமண் பூசி வாலுகா எந்திரத்தில் ஒன்பது
நாழிகை தீபாக்கினி, கமலாக்கினியில் எரித்து ஆறின
பிறகு எடுத்து முன்பு கூட்டின இரசத்திலே எட்டிலொரு
பங்கு வைத்து. காந்த சுப்பம் ...... சேர்த்து
ஏழு நாளரைத்து உலர்த்தி கொடிவேலி கஷாயத்தில்
இருபது நாழிகை ஊற போட்டு உலர்த்தி இஞ்சி சாற்றில்
ஏழு நாழிகை ஊறப் போட்டு உலர்த்தி அதின் பிறகு

கடுக்காய் கிஷாயத்தில் மூணு நாளரைத்து உலர்த்தி
எலுமிச்சம் பழச்சாத்தில், கொமட்டி, மாதளம் பழச்சாத்தில்
யும் ஏழு நாளரைத்து உலர்த்தி அதின் பிறகு இந்த
மருந்திலே நாலத்தொருபங்கு வெண்காரம் பொரித்து
கூட்டி முன்பு கூட்டின இரசத்திற்கு சரியாக நாபி
கூட்டி, அந்த நாபிக்கு சரியாய், சுக்கு, திப்பலி,
லிலங்கம், சாதிக்காய் இதுவகை ஒன்றுக்கு அந்த
நாபிக்கு சரியாய் கூட்டி கொம்மட்டி மாதளம் பழ
சாத்தில் அரைத்து பில்லையாக. பண்ணி வைத்துக்கொண்டு
திப்பிலி தேனும் வார்த்து இஞ்சி சாத்திலாவது சுக்கு
கஷாயத்திலாவது வெல்லத்திலாவது சக்கரையிலாவது
திப்பிலி அவின்னிலாவது . . ~~[illegible]~~ . . .

(49-ம் ஏடு தொடர் ஏடு சிதைந்துள்ளது)

50. அ. . . . . ண்டும் கிஷாயமிட்டு திப்பிலி கூட்டியாவது,
நொச்சிவேர் கிசாயத்தில் திப்பிலி கூட்டியாவது
பெய்புடல் கிசாயத்தில் திப்பிலியுடன் ஆவது கால்
பணவெடை. வாதஷேகம் கூட்டிக் கொடுக்க தீரும் வியாதி.
வியாதி காச்சல், குளிர், நெடும்காச்சல், முறைகாச்சல்
பயித்திய சுரம், சிலேஷ்ம சுரம், பின்னையும் உண்டான
உஷ்ண பான அனுபானத்தில் கொடுக்க தீரும் வியாதி.

பாரிச வாய்வு, அற்புத வாய்வு, சிரோவாய்வு, பக்கேதம்,
கிறுமயக்கம், ... வாய்வு, இரத்தமாய் வாந்தி
எடுக்கிற வாய்வு, நீர்கட்டி கட்டி விழுகிற வாய்வு,
வயத்தில் சீதகட்டு போலே . . . . வாய்வு, தளர்வாய்வு,

குறிப்பு: 49 ஆம் எண்ணுள்ள ஏடு, (அதே [illegible] [illegible]) [illegible] காணவில்லை?

~~கால் கை நோவெடுக்கிற வாய்வு, நடுக்கிற வாய்வு,
உடம்பு கால் கைகள் எங்கும் குமித்து - - - -
. . . . . . நீக்கிற வாய்வு, ஒருகால் ஒருகைய்
விழுந்து இருக்கிற வாய்வு, தமந்தமாயிருக்கிற வாய்வு
வாய் உடைபிறந்த உமர்தம் தீரும் - - - -~~
ஜபங்காயத்தில் . நடுக்க வயத்துவலி தீரும்

நீக்கவும்

(7)

51. அ. பிரணயான இரசம்:—

இரசம் பலம் ௩, கெந்தகம் பலம் ௨, நாபி பலம் ௩, வெண்காரம் பலம் ௩, மனோசிலை பலம் ௩, ~~வீரம்~~ இலிங்கம் பலம் க, ~~பாஷாணம்~~ பலம் க, தாம்பிரசுப்பம் பலம் ௨, பால்துத்தம் பலம் ச, லோகம் பலம் க, ~~யாதும்~~ கிடைக்கின ~~வெல்லாம் கூட்டி~~ நொச்சியில் சாறில் இரண்டுநாளரைத்து ஒருநாளரைத்து எருக்கம் பாலில் இரண்டுநாளரைத்து குப்பிவாயில் ~~(பலபக்க உல்த்தி~~ காசிகுப்பியயலிட்டு ~~குப்பிவாயிக்கு~~ விட்டு) அடைத்து ஏழு சீலைமண் பூசி வாலுகா எந்திரத்தில் முப்பது நாழிகை கமலாக்கினியால் எரித்து, ஆறினபிறகெடுத்து அதிலே புன்னிமண்கொம்பு, ~~யாதுகள் கூட்டி~~ சந்தனம் பல ரு, கோர்வளம் பல க, ~~யாதுகள் கூட்டி~~ நொச்சில் சாறு, இஞ்சி சாறு, எலுமிச்சம் பழச்சாறு, கொடிவேலி கஷாயம், எருக்கம் பால் ~~யாதுகளிலே~~ இலை ஒவ்வொரு நாளரைத்து உலர்ந்து ~~பிரமாணம்~~ அளவு குளிகை ~~பண்ணி~~ செய்து இஞ்சி சாற்றிலாவது, நொச்சில் சாற்றிலாவது கொடிவேலி கஷாயத்திலாவது ~~பின்னையும் உண்~~ ~~டாகி~~ தக்க அநுபானத்தில் ~~நடுக்க~~ கொடுக்க தீரும் வியாதி காஸ்

குறிப்பு எண்: 50 உள்ள ஏட்டு இவ்வளவு. (அதே மாதிரி)

கை குளிர்ந்து முகம் வெளுத்து உடம்பெல்லாம்
காய்ச்சலாயிருக்கிற விஷசுரம், தாபசுரம், தோஷ
சுரம், பழைய சுரம், சீதசுரம், முறைக்காய்ச்சல், தனுர்
வாதம், நடுக்கு வாதம் பொட்டில் பொட்டுப்போல்
கிடக்கிற தண்டு வாய்வு, அதிகா வாய்வு இவைகள்
தீரும். விஷகடிகள் தீரும். இதுக்கு பத்தியம்
ஆட்டுப்பால், பசுவின் பால், தயிர், மோர், இளநீர்
வாழைகிழங்கு, தண்ணீர், தேன், சர்க்கரை, குளிர்ந்த
தண்ணீர், சந்தனம், கர்ப்பூரம், பாக்கு வெற்றிலை,
காற்று நிலாவிலே இருக்கலாம். இவையெல்லாம் உதவும்.

௫௨. அ. முத்தாரகெச இரசம்:—

இரசம் வராகனெடை ௧, கெந்தகம் வராகனெடை ௪, அரிதாரம்
வராகனெடை ௬, மனோசிலை வராகனெடை ௩,
நவச்சாரம் வராகனெடை ஒன்று, சத்திச்சாரம்
வராகனெடை ஒன்று, வெங்காரம் வராகனெடை ௧,
~~காசிக்குப்பி வராகனெடை ௧~~, வளையல் உப்பு வராக
னெடை ௧, சயிந்தலவணம் மாடையிடை, பொட்டிலுப்பு
மாடையிடை, கல்லுப்பு மாடையிடை
இவைகளை பொடித்து காசிக்குப்பியிலிட்டு
குப்பி வாயை வெள்ளைக்கல்லிட்டு அடைத்து சீலை
மண் பூசி ஒரு தொண்டசட்டி அடியிலே ஒரு பணவெடை அளவு
~~அகப்பையினால் எடுத்து இஞ்சி சாற்றில்~~ அகலம் துவாரம்
விட்டு படிக்கம் போட்டு வாலுகா எந்திரமாக தொண்ணூறு
நாழிகை கமலாக்கினியால் எரித்து ஆறின பிறகு எடுத்து

இந்தி சாத்திலரைத்து இண்டுமணி பிரமாணம் இனிகை
பண்ணி திப்பிலி, சீரகம் வெந்நீரில் இருக்கவும்.

சோபத்துக்கு:—

சோபத்துக்கு ரோங்கிஷம் விரகாய் உஷ்ணிருக்கிறவனுக்கு
எதிருண்டாமென்றால் சிரமாங் இதைரோய் இருக்குமென்
ஒருபத்தங்களாய் மினித்திருக்குன்வர்களாய், கொழம்புச
சாறுகளாய் போசித்திருக்கிற படியினாலே மருதிக்கவிக்க
முண்டாம். வந்த விதம் வடிவினுடைய பித்ததினாலே
ஒன்பது பேதமாயிருக்கும். (1) வாத சோபமென்றும், (2) பித்த
சோபமென்றும், (3) சேத்தும சோபமென்றும் (4) வாத பித்த சோப
மென்றும் (5) சேத்தும வாத சோபமென்றும், 6 சன்னிவாதமென்றும்,
சேர்ம் வாத சோபமென்றும், சன்னிவாதமென்றும், (8) அபித்தி
யத்திலுண்டான சோபமென்றும் (9) விசத்திலுண்டான சோப
மென்றும் யிப்படி ஒன்பது வகைப்படும். அந்த விச்சபனீ
சோபமென்றும், அகோந்த சோபமே. இப்படி இரண்டுவகை
படும். அது யன்னியிலே யாருமென்று உயர்ச்சி வென்றும்
53. அ. அகலமென்றும் மூன்றுவகையான வருவை எருத்திருக்கும்
யிந்த ஒன்பது வகைபட்ட வீக்கமானது சாத்தியமென்றும்
அசாத்தியமென்றும் இரண்டு வகைபட்ட வீக்கங்களும்
களுஉள்ளில் அசாத்தியமேதென்னில் அசுத்தி.
அசுத்தி சத்தி வீக்க வயறு போக்கு முதல் வருகுமியும்.
யிதுமுதலான அனேகம் வகைபட்ட உபத்திரியங்கள்
கா—டி காலிலே வீங்கினால் புருஷனை கொல்லும்
வயிற்றிலே யகம் இயொதாளத்திலும் வீங்கினது

ஒன்னீர் பாரமந்து சழுதி நலாக மூத்திரமும் வீக்க
முண்டானால் பரிந்யைக் கொல்லும். விரிந்து பன்னீர்
பாயிந்து சத்தி நாறும். அதிசத்தமும், மேல் விரிப்பு
வைய்களோடே கூடியாருக்க வீக்கமும் வீங்கின
பமாகரமும் தினமும் உண்டாக அந்த வீக்கமும் தவிர்
சுரமும், அதிசாரமும் யிவைகள் விட்டபோது உண்டான
வீக்கமும் அசாத்தியமாம். யாதொருக்கு காலிலே
சிரசிலே வீக்கம், அரையிலே வீக்கமும், காலிலே வீக்க
மும், அவர்களை அசாத்தியமென்று சொல்லக்கடவன்.

இதுக்கு மருந்து :—

சிற்றணை வேர், ஆமணக்கு வேர், பஞ்சமூலம் இவைகளை
உள்ளோ) அசன்த்துடனே கூட்ட வாதத்தினாலுண்டான
வீக்கம் தீரும்.

சிற்றணை வேர், தேவதாரம், கடுக்காய், சுக்கு,
இவைகளை கஷாயம் இட்டுக் குடிக்க சோபந் தீரும்.

பெய்புடல் லோக பஸ்பம் :

பர்திராய், அதிமதுரம், கடுகுரோகணி, கடுக்காய்,
தேவதாரம். மஞ்சள். சந்தனம், காட்டாமணக்கு வேர்,
தும்மிட்டி வேர், திப்பிலி இவைகளின் கஷாயத்தில்
கொடுக்க பித்த சுரம் தீரும். அதிசுண்டான தண்ணீர் தாகம்,
கிறுகிறுப்பு தீரும்.

54. அ. கொன்னை பட்டையும், எண்ணெயும் பாகம் செய்து
கொள்ள சேர்த்து சோபந் தீரும். வெள்ளுருமம், கடுக்காயும்
களிபாக்கும் சாரணை வேர், மோர் இவைகளிட்ட
கஷாயம் கொள்ள விக்கந் தீரும். இஞ்சி நெருஞ்சில்
கடுக்காய், தேவதாரம், சாரணை வேர், உமிரிவேர்,
யிவைகளாலிட்ட கஷாயம் குடிக்க தீரும்.

செவ்வியம், சுக்கு, திப்பிலி, நெருஞ்சில் வேர், அதிசி
திப்பிலி, கொடிவேலிவேர் யிவைகளிட்ட கஷாயத்திலே
கொடிவேலி வேர், விழுதியிலை, கடுக்காய் பொடி கொண்டு
~~சேவிக்கத்~~ தீரும். வலி அக்கினி மாந்தம் தீரும்.

~~பிளவை இனம்:—~~

~~தாதுவேளை, நீர்முள்ளி இலை, பருத்தியிலை, முன்னு
யிலை, யின்னிதழ் - சாம்பல்.~~

பிளவை இனம்:—

(முதுகின் நரம்பில்)
முதுகிட மையிருந்தான் முள்ளந்தண்டில் பரிப்பது
← மாங்காய் போல் பிளவையும் பலகண்ணாகும்
மதிவரும் நதினாலும் மத்துள கருவியானும்
← விதியிது படியதென்ன அகத்தியமாமுனிவர் சொன்னார்
செப்புடன் இத்துடுச்சு உ/ செவிபாய உழுவைபோடும்
← தப்பிடா நாவறட்சி திருகிடா சலத்தின் வாதை
முப்புரு கண்ணோ போன்று முறைமையால் வியாதிதன்
← மிப்படி இனங்கள் தானெல்லாமிருவகை ~~பிளவை~~
பிளவையாமே //

மார்பினில் யீரல் தன்னை
மறுபடா தென்று கோலிபோல்
நேர்படா செம்மை யாக
நிற்பதே வாயு நெஞ்சில்
கார்செறி குழவி னாளே
கருவியால் நீணக் காரம்
பேர்பட கட்ட பக்க
பிளவையும் விட்டுப் போமே. 3//

முதுகினில் பூத்துறை யேபோல
முள்ளாந் தண்டும் தன்னில் தப்பி
யிதுவரில் மரண மில்லை
யென்ன வேகாங்க ளடைபடுமென்
னாத்திலே மேனி குளிர்சரமுத்
தவ்வ முழுவை கசிச்சதுடன்
னிதுதான் பக்க பிளவையது
தானினி கிரி யாடே. 3//

காரந் துளசி பாஷாணங்
கழைவில் குறையாயால்ச்
சேர பொடியாய் வெண்ணையுடன்
திரும்ப வரைத்து சிலையுடன்
ஆரந் தடியன் புண்சீலை
யாங்கும் தன்னி புண்ணிலிட
பார பிளவை கரைந்தருகி
பானி படவன் பறிந்திடுமே. 4//

பிள்ளைக்கு தயிரும் சோறும்:

← பளிந்திடும் புண்ணில்க் காரம்
பனதயிலன் பரித்து எறிய
← வைத்து அவிக்கி கட்டி
அவிழ்ந்ததுவே பார்த்து பின்னே
← சிறந்திடும் எண்ணை பண்ண
தெளிந்திடும் மருந்து சொல்லே //6

செப்பியே எண்ணெய் வைக்க
சிறந்த ஆவிரை வேர்நாரி
ஒப்புடன் துடரி பூலா
ஒன்றொன்று அதினில் பாதி
எப்பெருஞ் சரக்கு கூட்டி
யிடைறெண்டு யருப தாக
கையாப்புவேம் பாடல் கூட்டி
கக்குமோ எண்ணை வையே //7

எண்ணையும் தினை தானும்
யிடைவிடா பகலை காற்கும்
நன்று மாவிலை யைத்தான்
நயக்கவே புரட்டி கொண்டு
புண்ணின் மேல் வைத்து கட்ட
பொருந்துமாம் பிளவை புண்ணொன்று.
உண்மையாய் உரைக்க முன்னோர்
உறுதியாய் கண்டு சொல்வார் //8.

பத்தியம்:- கண்டதோர் கத்திகாய் பால்நெய்
கருத்திலே உத்த தைலமாம்
கொண்டிலா ருத்த மென்று
கூறினோர் முனிகள் முன்னோர்
விண்டிலா தாத மாங்காய்
விளம்பிய முருங்கை பிஞ்சு
பண்டமுன் பழு~~மாறு~~ நீக்கிடுமே
பத்தியம் தயாரு மாமே // 9.

56. அ. உழலை தவனம் பரிதாப
மிளகுச் சரங்கள் நாவுரட்சி
குமுறி வேர்வல் குறை கண்ணாய்
கொள்ள தனத்தனாய் மிகுத்தல்
அழகு செறியும் கொடியிடையாள்
அமரா வாதை யிதுகண்டால்
அளவில் லாத வாதையென்று
அதுதான் பின்வ தறியோமே // 10

பூச்சு மருந்து:-

நெல்லியுடன் நிலப்பனங் கிழங்குதானும்
நெற்பொரியும் மாவிரையின் கண்டமும்
சொல்லரிய வாறாவின் சேர்த்திதமாக
வீக்கத்தில் மேலே பூச
கொல்லிய தோர் பிணைதனில் காச்சல்குளிர்
~~குளிர்~~ குணை தெளிந்த வகைகண்ணாய்
வருங்காய்ச்சல்
மெல்லிய தோர் முலைபாலும் கூட்டிவிக்கம்
விதனமுடன் வலிதானும் விண்றும்போமே // 11.

பிளவு பூசு:—

ஆவிரை அல்லி நெல்லி
அதினுடன் பூலா வேரும்
கோவினில் வெண்ணெய் தன்னில்
குழைத்து வீக்கத்தில் பூச
யாமிருந் தனலே போல்வீக்கம்
வீக்க வெறினை கண்டித்த தாலும்
தாவி குழைத்து பூசிக்கவே.
நியாரும் கொள்ளு ளாமே. 1௨//

வஞ்சி கொடியாய் முலைப்பாலில்
வராகி னாங்கொடி வெண்ணை
செஞ்சோர் படியே அரைத்ததொன்னில்
திரும்ப வழித்து அதில்வைத்து
வஞ்ச பிளவை முகந்தன்னில்
மானே வழித்து வழித்தப்ப
கெஞ்சி சரமோ டழல்வீக்கம்
கெட்டு பட்டு போயிடுமே //13.

பிட்டுக் வகை:—

வெண்பால் சமந்த மெண்கொடியும்
வன்குறுவை நெல்லும் மாசிவந்த
அவ்விரை யினந்தாது துலையன
நீரை பெருந்து உரல்தனில் லென்றும்
பிட்ட தனையுண் பீரே
எண் கொரும் போது // 14.

பிளவை மேல் தாவ காரணம்:—

செவிறைய் எமதேர் பதியாகவே
வறுத்து தாளைச் செய்
தாவிறைவேர் தண்ணியா லரைத்து
மேல்பொடி யதாக்கி
நெருக்கிர் பிளவை புண்ணில்
யின்னமும் நெய்யை பூசி
தான்தனை தாவ வத்தி
சுறுதியாய் புலரும் புண்ணே // 15.

பிளவை குணம்:—

57. ஆ. வெட்டுபட்ட புண் ~~ணுக்கும்~~ கனிற்கும் காப்பாணுக்கும் மருந்து:—

வெட்டு பட்ட புண்தனக்கு
விரித்து முன்னோர் உரைத்தபடி
வட்ட படவே கின்பழத்தை
வரைந்து பாதி ரெண்டாக்கி
ச ~~கட்டி~~ தனிலே எண்ணெய்விட்டு
தழலி நவேமிக காய்ச்சி
யட்ட மருகும் மொத்திட்டு
வதுக்கு பின்னே எண்ணெயிடே // 1.

யிடவே எண்ணெய் யதுதனக்கு
யிலந்தை தளுக்காய் துடரிமுட்புல்
படரு கிலத்து குமிழ் ~~உ~~ ~~ங்கவ~~ உட்டு
பசித்த யாவாரை வசுவேரும்
கடவா தொளிக்க திறுக்குகடுக்காய்
களிக்காய் கரும்பை தூரிய நாயுருவி
யடைவே யிவையின் வேர்கொண்டே
யதின்மேல் லவைசேர் கடைச்சரக்கே // 2.

கோஷ்டம் மதுரம் வேம்பாடையில்
கொடியின் சிவந்த செவ்வள்ளி
யிட்டுமே கரிய இந்துருக்க
மியல்சேர் கையப்பு சதகுப்பை
58. அ. மேட்டில் வளரும் மேல்முள்ளி
மிகா மருந்த வில்வம்
கூட்டி தாளி யுடன்செய்து
கொள்ளீ றெண்ணை புண்ணுக்கே. 3//

குத்துபட்ட புண்ணுக்கு எண்ணையே —

குத்துக் குடனே யுடலை
குடந்தே யரத்த கள்ளிதனை
முத்து போலே விழுங்கறை
முறித்து அம்மா வகையது
சுத்துப் படவே குத்தளவாய்
துடைத்து துவர்ந்த சதைதன்னி
சித்தர் தளங்காய் தேசிக்காய்
சிறந்தே எண்ணெய் அடவொத்தே. 4//

ஒத்தே யிட்ட மூணாநாள்
ஒருபிர சலம்உள் ளாடியும்
மித்தோர் சிறியோர் தம்பலவேர்
மணக்கு மத்தி நன்னாரி
சித்த மேல மிலவங்க
தின்று கையப்பு வேம்படாயும்
மித்தோர் மதுரந் தான்கொண்டு
வடசி லெண்ணெ யுடன்தன்னை. 5//

நின்பதி லத்தை சொல்லுவது
நிலத்துக்கு யாழுந்துட ரொருவின்
பங்கரசன் தமிழ்த் தேரது
மிக்க தேவி தம்பலையுங்
கம்பி பிசினில் சேத்தே கொள்
கைப்பு மதுரம் வேம்படல்
லம்பு முதலாய் வெட்டியுண்டை
யாருமிவையோ ரெண்ணெய் செய்யே // 6.

ஆயுதத்தால் பட்ட வாத கரப்பானுக்கு:-

வல்லா யுதங்கள் பட்டவரை (ர்)
லங்க காயந்து வுடம்புலர்ந்தால்
சொல்லு நின்ப மதித்தோலை
சுடவே தண்ணீ ரதிலூறி
மென்ன விறுத்தி வேசன்னை
விடவே யடித்து கிறிபட்ட
நில்லாது மென்று முன்னோர்
நயந்தே யுரைத்த படியாமே // 7.

புண்ணும் வெளுத்து நீரத்து (வீழுந்து)
போத குத்தி வலிமிகுந்தால்
நன்மை படவே யொருகொள்ளுங்
கொள்ளா கிருக்கில் ஆரஞ் செய்யும்
தின்மை படவே செலவாங் கலங்கி
யரத்த மாகில் தீராது
59 அ நண்ணி க்ஷிறுயச் சீயிட விழுந்து
பின்னே நனைக்குஞ் செம்புண்ணாம் // 8.

அ. வீங்கி வருந்து உழையும்
விடாமல் திமிர்த்து தீங்கிருக்கும்
மாங்க புண்ணின் சலம்விருந்தால்
வந்தி கவுஞ்சொறி செய்யால்
திங்கி செல்வர் தீராது
நெடுநாள் படவே பிச்சிருக்கும்
தேங்காய் புரைத்தி டத்திடும்
வாத கரப்பா னிதே // 9.

நொந்துதான் கன்னி மிக்க
நோவுடன் புண்கள் தன்னில்
வந்துவலி ளாயு தங்கள்
வருவெறாதைக்கி டத்தில்
சந்துதான் மொழிபொருந்து ~~[illegible] [illegible]~~
தசைவுதா னங்க ளாகில்
வந்ததான் தொடுக்குஞ் சேதி
வாதமாங் கரைப்பான் தானே // ௰

கொண்ணை தாது நிலவேம்பு
குமிழ்வேர் கடுக்காய் விரைசென்று
யெணாங் காய் சூரியனுஞ்
சிவ்னார் வேம்பு கல்மிளகு
மொன்று முத்த கொணி
நோறு வெட்டு காயருவி
நன்னே கொள்ளும் முன்தனை
நன்னா பந்துடா கண்டே // 11.

கூட்டே யுள்ளி மிளகுமஞ்சள்
இலவும் மதுரம் வேம்பாடல்
நாட்டி பயிறும் வெண்கொட்டி
நிலங்கும் சென்ன காம்பழமும்
மாட்டாய் காணும் சாதிக்காய்
யதுகொள் கடுக்காய் தன்னிநெல்லி
கூட்டி அள்செவிலை யட்டு
கொண்டே எண்ணெய் கொதித்திடுமே // 12.

இருஞ்சா விலைய புளிகிலையாம்
கொடிசேர் கழச்சி யிலைதானாம்
மிஞ்சு வதாலி கடலாஞ்சி
அதுவும் புளிய தேக்கிலையும்
செறிந்த தாணி பாவட்டை
சேரும் பெரிய பூலியிலை
பரந்த பருத்தி யிலைதானும்
பாங்காம் வாத காப்பானுக்கே // 13.

60. அ. உள்ளி மிளகு சீரகமும்
உத்த கடுக்காய் திப்பிலியும்
தள்ளுஞ் சுக்கு மோதகமும்
சீலை யிதுவும் வெண்காரம்
பூவரங் கொன்று கடுகுரோகணியும்
கூட்டு தாதின் னிறாழி
கழஞ்சு செய்யும் கருஞ்சீரகம்
கழஞ்சேர் றெண்ணு தாண்றியதே // 14.

ஆ. மேகனாதரசம் பேதி மாத்திரை:—

இங்கிலிகம், நாபி, கெந்தகம் திரிகடுகு ஓமம், கோரோசனை ஓமம், வெங்காரம், பெருங்காயம், வாய்விளங்கம், தேகடை, தந்திவேர், மஞ்சள், சயிந்திலவணம் ~~யாதுவெல்லாம்~~ இவை சமபாகம். ~~இதுகளெல்லாம்~~ இவற்றை சமன் நேர்வாளம் கூட்டி கல்வத்தில் போட்டு ~~எலுமிச்சம் பழச்~~ ~~சாற்றில்~~ நாலு சாமம் அரைத்து குன்றுமணி ~~பிரமாணம்~~ அளவு குளிகை ~~பண்ணி~~ செய்து ஒரு குளிகை கொடுக்கவும் அனுபானம் ~~விசேஷத்தில்~~ வெந்நீர் ~~வெந்நீரிலிடவும்~~.

61. அ. ஆனந்த வயிரவம்:—

நாபி, இங்கிலிகம், கெந்தகம், வெண்காரம், திரிகடுகு யாது சமபாகமாக கூட்டி எலுமிச்சம் பழச்சாறுவிட்டு நாலு சாமம் அரைச்சு உளுந்து பிரமாணம் குளிகை பண்ணி ஒரு குளிகை இஞ்சி சாற்றிலிட பின்னையும் அனுபான விசேஷத்திலிட சகல சுரமும் தீரும்.

கெண்ட பேரண்ட இரசம்:—

சாதிலிங்கம் விராகன் ஒன்று, நாபி விராகன் அரை, கடுகுரோகணி விராகன் ஒன்று, யாது குளிர்ந்த தண்ணியிலே சாமம் அரைச்சு பயறுபோலே குளிகை பண்ணி இஞ்சி ரசத்தில் ஒரு குளிகை குடுக்க தநுர்சுரம் தீரும்.

பிரானசரம்:— இரசம் விராகனெடை க, கெந்தகம் விராகனெடை க, சுக்கு விராகன் உ, யாங்கிலிகம் விராகன் க௭, வெண்காரம் விராகனெடை க, தப்பு விராகனெடை க

மிளகு விராகனெடை உ, வாளம் விராகனெடை கவ,
கிழங்கை சமனாக கூட்டி காசனாஸ் கன்சாறு விட்டு மூன்று நாளை
அரைத்து பயறு போல மாத்திரை செய்து ஒரு மாத்திரை
தக்க அனுபானங்களில் கொடுக்க தனுர்சுரம் பொட்டென்று
நிற்கும். சிறுவர்களும் குழந்தைகளுக்கும் பெரியோர்களுக்
கும் உண்டாகும் மாந்த சுரங்கள், அஜீரண சுரம் இவைகள் தீரும்.
சீரகம் பலம் க, தாளிச பத்திரி பலம் க, சுக்கு பலம் கவ,
கடுக்காய் பலம் ச, தான்றிக்காய் பலம் உ, நெல்லிபருப்பு
பலம் உ, கடுகுரோகிணி பலம் க, சியக்காய் கொழுந்து
பலம் பலம் உ, எண்ணெய் சேர் உ, பசுவின் பால் சேருக,
எலுமிச்சம் பழம் ரூய. சதுரகள்ளிப்பால் பலம் ரு.

62. அ. சுரத்தில் புத்தநேத்திர சன்னி பிறந்தால் செய்யுங் குணம் :—

சுரத்தில் கண் அதைக்கும். உடம்பு வீங்கும்.
காது செவிடுபடும். பசி எடாது. தாகம் அதிகமாயிருக்
கும். இதற்கு மருந்து தேனிலே குன்றிமணிச்சூர்ணம்
செய்து நாக்கிலே தேய்க்கவும். தோஷம் நீங்கும்.

இதற்கு கஷாயம் :— விஷ்ணுகிரந்தி இலை, நீர்மருதையிலை,
நெருவியிலை, சிறுநெருஞ்சில், நீர்முள்ளியிலை இவைகளை கஷா
யமிட்டு கொடுக்க தீரும்.

சுரத்துடனே கண்டாங்குசிச் சன்னி பிறந்தால் செய்யுங் குணம் :— சுரத்தில் உடம்பு வீங்கும்.
மேல் தோல் உரியும். கண்டத்து மேலே இலந்தைபோல்
வீங்கும். நெஞ்சு புண்ணாயிருக்கும். காதுங் கையும்

குளிர்ந்து இருக்கும். மார்பு, முதுகு எல்லாம் உலரும்.
~~ஆலா மாலை~~ கொள்ளும். ~~இதுக்கு கிஷா~~
இதுக்கு கிஷாயம்:- நெய், முன்னைவேர், நிலதும்பை
வேர், நாய்துளசிவேர், சிவந்தி நாயகம்வேர், கொத்த
மல்லிவிரை, கண்டுபாரங்கி. கிஷாயமிட்டு சுக்கு, திப்பிலி
மிளகு கூட்டி இருக்கவும். சுரம் விடாமல் காயும்.
நல்ல சுரம் ~~போன்ற~~ போனபிறகு உடம்பு கால், கை
எல்லாம் கடுக்கும். உடம்பு வீங்கும். ஆலாமாலை
கொள்ளும். கண் வளையமிட்டு இருக்கும். முகம்
பழபழத்திருக்கும்.

இதுக்கு மருந்து:- முருங்க பட்டை, இஞ்சி, ~~மிளகு~~
முசுவிலை யிந்த மூணு சாறும் கூட்டி சுக்கு, மிளகு,
திப்பலி, கூட்டி மூணுநாள் குடிக்க தீரும்.

சுரத்தின் பேரில் காணமூலிகை சன்னி நேர்ந்தால்
செய்யும் குணம்:-

காதும் கீழே இரண்டு புறமும் வீங்கும். உடம்பு
களைவரும். யிதுக்கு மருந்து:-
நெய், முன்னை பட்டையும், அரிவகை கொடியும்
உள்ளி, வசம்பு, விளக்கெண்ணெயில் ஆக்கி ஒருகாசெடை
எண்ணெய் எட்டுநாள் உள்ளுக்கு இடுக்கத் தீரும்.

63. அ. பயித்திய சுரத்துக்கு செய்யும் குணம்:- உடம்பு
காயச்சே கால், கை, உடம்பெல்லாம் கடுக்கும்.
வேர்வை காணும். வேர்க்கச்சே உடம்பு அனலாக
சுரம் எழும்பும். தாகம் எடுக்கும். அரைக்கடி

எழுந்திருப்பான். சத்தம் பார்வை பார்வை பார்ப்பான். வாய் கசக்கும். பிச்சு எடுக்கும். ஆரோசிகம் பிறக்கும்.

இதுக்கு கிசாயம்:- சுக்கு, திப்பிலி, நாகேசரம், சீரகம், பர்படாகம், சிறு வழுதலை வேர், நொச்சியிலை முசுமுசுக்கை, விஷ்ணு கிராந்தி, சிறுகுறிஞ்சான் யாது வெல்லாம் கிசாயமிட்டு குடுக்க நலம்.

கெர்ப சுரம் குணம்:—

மாரிலே பாரமா இருக்கும். பிடி நரம்பை யிழுக்கும்.

இதுக்கு கிசாயம்:- ஆத்துமன்னி வேர், தூதுவேளை வேர், சிறுகாஞ்சோரி வேர், துளசியிலை, கஞ்சாங் கோரை, முக்கா வேளை, யிது கிஷாயமிட்டு சுக்கு, திப்பிலி, மிளகு கூட்டி குடுக்கவும்.

ஆ. சன்னி பாத குணம்:—

எழுந்திருப்பான். படுத்து கொள்ளுவான். தலையை பிரட்டுவான். தாகம் அதிகமாய் இருக்கும். புடவையாலே உடம்பை போர்த்து கொள்ளுவன். பேசான். வாயில்லை. யிதுக்கு எழுலங்கணம் பண்ணின பிறகு முக்காவேளை செவ்வியம், கொடிவேலி, எருக்கம் பட்டை, முருக்கம் பட்டை, மாவிலங்க பட்டை, நொச்சில் பட்டை வேப்பம் பட்டை, விளாம்பட்டை, கஞ்சாங் கோரை, துளசி வேர், கிஷாயமிட்டு குடுக்கவும். இதுக்கு தினையரிசி, கஞ்சி வார்க்கவும்.

உளது சன்னி குணம்:—

உளது சன்னிக்கு கண் வளையமிட்டிருக்கும். (ஆலமரமலை கொள்ளும்.) காதுங் கையும் குடைச்சல் எடுக்கும். சுவாசம் அதிகமாயிருக்கும். தாகம் எடுக்கும். தூக்கு கோவட்டம்பூ, வசம்பு, விஷ்ணுகிரந்தி, நிலையாவாரை, இவை கியாயமிட்டு ஊமத்தை திப்பிலி வைத்து அரைத்து கொடுக்கவும். கலிக்கம் இடவும்.

64. அ. பூதிகாத் தயிலம்:—

ஆயில் பட்டை பலம் ய, முக்கத்தாரி பலம் ரு, மிளகரணை பலம் ரு, நாயுருவி பலம் ரு, சங்கம் வேர் பலம் ய, ஆதண்டை பலம் ரு, கோரைக் பலம் ரு, சிறுகுமிழ் பலம் ரு, வன்புல்லாந்தி பலம் ரு, பேராமுட்டி பலம் ரு, கிழங்கு பலம் ரு, சித்தாமுட்டி பலம் ரு, நன்னாரி பலம் ரு, கொத்தகிழா பலம் ரு, தண்ணீர்விட்டான் பலம் ரு, உத்தாமணி சிறுவழுதலை பலம் ரு, கண்டங்கத்திரி பலம் ரு, வேப்பம் பலம் ரு, காட்டுமல்லிகை பலம் ரு, கீழாநெல்லி பலம் ரு, சங்கா பட்டை பலம் ரு, கன்னால். முருங்கைப்பட்டை பலம் ரு, வேர் பலம் ரு, இதுக்கு சரி தண்ணீர் வார்த்து ஐந்து நாள் கர்ச்சி வடித்து இருணியானால் நச்சா ஒன்பது சேர். எண்ணெய் சிறுக சிறுக விட்டு இது சாணிப்பதமானால் கடை மருந்து சுக்கு பலம் ௨, மிளகு பலம் க, திப்பிலி பலம் க, ஓமம் பலம் ௨, சதகுப்பை பலம் ௨. கொத்தமல்லி பலம் ௨, லவங்க பட்டை பலம் ௨, பத்திரி பலம் ௨வ, சித்திர மூலம் பலம் க, தும்பராஷ்டம் பலம் க, செவ்வியம் பலம் ௨, சண்டு பாராசுகி பலம் ௨. மஞ்சள் கஸ்தூரி மஞ்சள் பலம் ௨வ, வெட்டி வேர் பலம் ௨, விலாமிச்சி பலம் ௨, அரைச்ச சந்தனம் பலம் உ. நிலைச்சதை கள் யாடித்து போட்டு

கெள்ளி சூரணம் பசுவின் பாலில் பிசைந்து சிறுக சிறுக
தாவி மொறுகு பதமானால் ~~யீசுவர வேர் பலம்~~ இறக்கி
வடித்து குடத்தில் உலர்த்தி அதில் லிங்கம் ௨ வ, கிச்சிலி
கிழங்கு ௨, புனுகு விராகனெடை ௨, பச்சிலை ௫.
அபினி விராகனெடை ௧, கற்பூரம் பணவெடை ௨,
பொடி ~~பண்ணி~~ விடவும். இதற்கு தீரும் வியாதி பேதி சுரம்,
தலைநோவு, இருமல், கண் எரிச்சல், மூக்கு நீர் பாய்ச்சல்,
உண்ணாக்கு வளர்ச்சி இவைகள் தீரும்.

65. அ. இலைக்கள்ளி ~~கல்பம்~~ கற்பம் :—

இலைக்கள்ளி வேர் உலர்த்தி பொடிசெய்து ~~இந்த பொடி~~யும்,
கொழுவிந்த மஞ்சளும் வெள்ளாட்டு நெய்யில் குழைத்து
~~திணவு~~, வீணை, இருமல், சுவாசகாசங்கள் தீரும். இந்த பொடி
முலைப்பாலில் ~~இடக்க~~ கொடுக்க காமாலை கண் மாறும். இந்த பொடி
நெற்றியிலிட்டு செல்ல நினைத்ததெல்லாம் முடியும்.
இந்த பொடி சோறுடன் உண்ண பிள்ளையுண்டாகும்.
இந்த பொடி உள்ளங்காலிலிட்டு செல்ல கேட்டதெல்லாம்
வசமாம். இந்த பொடி பெண்சாதி தலையிலிட புருஷன்
வசமாவான். புருஷன் தலையிலிட பெண்சாதி வசமாவாள்.
இந்த பொடி புருவத்திலிட்டு செல்ல இவன் முகம் நோக்கி
னவன் பேர்களோ.

அமிர்த சஞ்சீவி :— பலம்

இலிங்கம் பலம் ௧, இரசம் பலம் ௧, சூலிதிர நாபி பலம் ௧,
கடுரோகிணி பலம் ௧, கந்தகம் பலம் ௧, வெங்காரம் பலம் ௧,
நேர்வாளம் பலம் ௧, சுக்கு பலம் ௧, மிளகு பலம் ௧, திப்பிலி பலம் ௧

பலம்

இஞ்சி பூலக, எலுமிச்சம்பழம் ய உ. இவைகளை சுத்தி செய்து கல்வத்தில் போட்டு இஞ்சிசாறு விட்டு ஒருநாளரைக்கவும். எலுமிச்சம் பழச்சாறு விட்டு ஒருநாளரைக்கவும். சிறுபயறு அளவு மாத்திரை செய்து இஞ்சிசாற்றில் சகல சுரத்திற்கும் கொடுக்கவும்.

66. அ. ஆனந்த வயிரவன் :—

சாதிலிங்கம், நாபி, வெண்காரம், மிளகு, திப்பலி, சமபாகமாக கூட்டி ஒருவிராகனெடை சுத்தி செய்து நேர்வாளம் கூட்டி எலுமிச்சம் பழச்சாறு விட்டு இரண்டு சாமமரைத்து குன்றுமணி அளவும் குளிகை செய்து இஞ்சிசாற்றில் கொடுக்கவும் அல்லது முலைப்பாலிலிடவும். சீதசுரம் விடும். தோஷசுரம் விடும். பத்தியம் புளிப்பு தவிர்க்கவும். உணவு:— பாலும் சோறும். உண்ணவும்

வேதிசுராங்கிருதம் :—

கடுகுரோகணி, நேர்வாளம், இருப்பைப்பூ இவை வகைக்கு ஒருவிராகனெடை சரியாய் கூட்டி முலைப்பால் [illegible].6 அரைத்து ஆடாதொடை சாறுவிட்டரைத்து குன்றுமணி அளவும் குளிகை செய்து எந்த சுரத்துக்கும் முலைப்பாலில் கொடுக்கவும். சுக்கு சாற்றிலிடவும் கொடுக்கவும். இஞ்சி சாற்றில் கொடுக்கவும். பேதி ஆகிமானல் மோரும், சோறும். கொடுக்கவும்

ஆ. அர்த்த நாரீசுரம்:—

சூலத்திர நாபி வி-க, கெந்தகம் விராகனிடை-க, நாகம் விராகனிடை-க, மனோசிலை விராகனிடை-க, நேர்வாளம் பருப்பு விராகனிடை-க, ரசம் விராகனிடை-க, சாதிலிங்கம் விராகனிடை-க இலைகள்ளி சத்தி நொச்சி சாறுவிட்டு ஒரு நாளரைக்கவும். மத்தக்காளி சாற்றில் வெண்ணெய் போல் அரைக்கவும். குன்றுமணி அளவு குளிகை செய்து வெயிலிலுலர்த்தி ஒரு குளிகை வெந்நீரில் யடவும். உரிய பசுவின் பாலில் ஒரு குளிகை யடவும். ஒரு புறங்காயும் சுரம் விட வேண்டுமென்றால் ஒரு குளிகை வெந்நீரில் கொடுக்கவும்.

67 அ. வீரணராயன் இரசம்:—

கெவுரி விராகனிடை-க, தாம்பிர பற்பம் விராகனிடை-க, வெள்ளை பாஷாணம் விராகனிடை-க, கெந்தகம் விராகனிடை-க, சூலத்திர நாபி விராகனிடை-உ, இரசம் விராகனிடை-உ, ஆக விராகனிடை-அ, சத்தி பன்றி துளசி சாறுவிட்டு ஒரு சாமம் அரைக்கவும். நொச்சி சாறு விட்டு ஒரு சாமம் அரைத்த பிறகு மிளகு அளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி பதினைந்து சன்னிக்கும், இஞ்சி சாற்றில் விடவும்.

பசுவின் கோமியம் படி க. செருப்படி சாறு அரைப்படி, அரசம் பட்டை சாறு உழக்கு, கூட்டி கலந்து கல்வத்திலிட்டு ஏழுநாளரைக்கவும். உளுந்து குன்றி மொச்சை போல மாத்திரை செய்

விளைவெய்ச் சிண்ணியில் வைத்து,
கிண்ணியை கவிழ்த்து சீரிய புடம் வைக்கவும்.
ஏழுநாள் உலர வைத்து உலர்ந்த பின்பு பஞ்சை
மாத்திரை மேலே வைக்க பஞ்சு பற்றிக் கொள்ளும்.

அ. அக்கினி குமாரன்:—

ரசம் விராகனெடை ௫, கெந்தகம் விராகனெடை ௫, மனோசிலை விராகனெடை ௨, அரப்பொடி விராகனிடை ௮, சூத்திர நாபி விராகனெடை ௩, வெண்ணிகாரம் விராகனெடை ௨, பத்திர தாளகம் விராகனெடை ௫, ஊசிகாந்தம் விராகனெடை ௫, பொட்டிலுப்பு விராகனெடை ௫, இந்துப்பு விராகனெடை ௫, கெவுரி பாடாணம் விராகனெடை ௫, எலுமிச்சம்பழம் நாற்பது சாறு பிழிந்து பசுவின் தயிர் அரைப்படி ஆறு மாதுளக்காடி அரைப்படி நாயுருவி சாறு அரைப்படி, விடத்தேரிவேர் சாறு அரைப்படி கத்தாழை சாறு அரைப்படி. விட்டு தண்ணீரிலேயே அரைக்கவும்

ஆ. சூரகுளிகை சன்னிபாதம் பதினெட்டுக்கும்:—

வெள்ளைப் பாஷாணம் விராகனெடை ௨, சிறுக உடைத்து உமத்தையிலை சாறு வார்த்து தினம் கழுவிப் போட்டு எட்டுநாள் உரைப்போட்டு கொம்பு பாகலிலைச் சாறு திப்பிலி விராகனெடை க, சுக்கு விராகனெடை க. மிளகு விராகனெடை க, இலவங்கம் விராகனெடை க. அக்கரகாரம் விராகனெடை க, வெங்காரம் விராகனெடை க. கூட்டி அரைத்து சிறுபயிறு அளவு குளிகை செய்யவும்.

இரசம் விராகனெடை 30, கொட்டாங்கச்சி கரிசுட்டது மூன்று விராகனெடை பனைவெல்லம் மூன்று விராகனெடை, தேங்காய்ப்பால் விட்டு மூன்றும் அரைத்து சிமிளில் வாங்கி வைக்கவும். மிளகு பிரமாணம் நாவில் தேய்க்கவும். ஏழுநாள் நல்லெண்ணெய் தவிர்க்கவும். இருந்த நீரில் ஒன்பதுநாள் முழுகவும். இருந்த நீர் ஆகாவிட்டால் வெந்நீரில் முழுகவும்.

69-அ ஊர்யத்துக்கு மேல் சட்டி பற்றின பற்பத்தை அரைப்பணவெடை காரிடை திப்பிலி பொடி தேனில் குழைத்து கொள்ளவும். பத்தியம் உப்பு, புளிப்பு கூட்டிக் கொள்ளவும். நல்லெண்ணெய் பிண்ணாக்கு தவிர எட்டுநாள் கூட்டிக் கொள்ளவும். விளக்கெண்ணெயிட்டு முழுகவும். நெய்யிட்டு முழுகவும்.

புகட்டி ஆறின பிறகு சீலை மண் விலக்கி சட்டியை வாங்கி மேல்சட்டி வெள்ளைவென்று இருக்கும் குப்பியை மெள்ள எடுத்து கொண்டு ஒரு சட்டியை கழே வைத்து குப்பியை தட்டித்து குப்பியை உடைத்து அதிலே இருக்கிற பற்பமெல்லாம் கொட்டிக்கொண்டு பொடித்து ஒரு சிமிளிலடைத்து வைத்து கொள்ளவும். ஆளைக்கு துப்பரசம் ஒருபலம் சீனிசக்கரை ஒருபலம். அந்த பற்பத்தை அரைப்பணவெடை ஏழுநாள் கொடுக்கவும். உப்பு, புளிப்பு, துவரை, கறை, முருங்கைக்காய் ஆகும். அகத்திக்கீரையாகும்

பெருங்காயங்கரி பத்து விராகனெடை நிறுத்துக் கொண்டு தேங்காய் பால் விட்டு

இரசமிளகு கரியும் சேர்த்து அரைக்கவும். ~~அதின்~~ பிறகு
மிளகு ~~பிரமாணம்~~ அளவு குளிகை ~~பண்ணவும்~~ செய்யவும். குளிகை
70. அ. எடுத்து வளையல் குப்பியில் இட்டு துளசி சாறு
குப்பியில் விடவும். அதின் பிறகு குப்பி வாயை
பஞ்சினால் அடைத்து ~~மூணுதிரம்~~ மூன்றுமுறை சீலைமண் செய்து
அதனை உலரவைத்து பிறகு எடுத்து சட்டியில்
நாலுவிரல் ~~பிரமாணம்~~ அளவு உப்பு விட்டு அதின் மேலே
குப்பியை வைத்து குப்பி கழுத்தளவு ~~பிரமாணம்~~
உப்பு விட்டு ~~அதின் மேல்~~ அதின் மேல் சட்டியை மூடி கட்டி வைக்க
~~மூணுதிரம்~~ மூன்று சீலைமண் செய்து ஒரு விறகாக மூணு
சாமம் எரிக்கவும். ~~பின்பு~~ அதன் அளவு ~~பிரமாணம்~~ அளவு சுக்கு, மிளகு,
திப்பிலி, சீரகம், தும்பைப்பூ கூட்டியிடவும்.
வாத சாரத்துக்கு இஞ்சி சாற்றிலிடவும். சுக்கு கஷா
யத்தினாலே இடவும். சீத சாரத்துக்கு பஞ்சமூல கஷா
யத்திலிடவும். தும்பராஷ்டை கஷாயத்திலிடவும். திப்பலி
வெள்ளுள்ளியிலிடவும். பத்தியம் நல்லெண்ணெய்,
புளி ~~தள்ளிக்கவும்~~. ஆகாது

ஆ. இரச பற்பம் :—

இரசம் விராகனிடை பத்து. விடத்தாரி வேர்ப்பட்டை
பலம் (பூ) க. குப்பை மேனியாலை சாற்றில் இருபத்தொருநாள
அரைக்கவும். தினம் வெயிலிலே வைக்கவும். செருப்படை
சாற்றிலொரு நாள் அரைக்கவும். துளசி சாற்றிலொரு
நாள் அரைக்கவும். கற்றாழை சாற்றிலொருநாள் அரைக்க
சீரகம், திப்பிலியிலி, லவங்கம், தும்பராஷ்டை இதில்

சரி பஸ்பம் இடவும். இச்சா பத்தியம்.

71. அ. கோடாசுழி மாத்திரை :—

இரசம் விராகனெடை க, சாதிலிங்கம் விராகனெடை க, கெந்தகம் விராகனெடை உ, அரப்பொடி விராகனிடை உ, நேர்வாளம் பருப்பு விராகனெடை உ, வெங்காரம் விராகனெடை வ, மிளகு விராகனெடை வ, சுக்கு விராகனெடை வ. அதிமதுரம் விராகனெடை வ, இலவங்கம் விராகனெடை வ. கோஷ்டம் விராகனெடை வ. அக்கரா காரம் விராகனெடை வ. இவற்றை எல்லாம் கல்வத்திலிட்டு பன்னிரெண்டு நாள் அரைத்து மாத்திரை செய்யவும். எலுமிச்சம் பழச்சாற்றிலரைத்து மிளகுபிரமாணம் மாத்திரை செய்யவும். கிழமைக் கொத்தாய் உஷ்ண சகல சுரத்துக்கும் இஞ்சி சாற்றிலிடவும். இச்சா பத்தியமாய் சாப்பிடவும். இது சகல சுர மாத்திரையாம்.

ஆ. கனக சிந்தாமணி :—

நாபி, சாதிலிங்கம், பெருங்காயம், வெங்காரம், மிளகு, இலவங்கப்பட்டை விராகனெடை உ. வெள்ளாட்டு பித்திலரைத்து கற்றாழை சாறுவிட்டு ஒருசாமம் அரைக்கவும். நாபி பசுவின் கோமியத்தில் அறுபது நாழிகை ஊற போடவும். மண்மருந்தில் கட்டி கொள்ளவும். அரைத்த மிளகு அளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தவும். இஞ்சி சாறு, சுக்கு, மிளகு வகைக்கு விராகனெடை உ. வெள்ளாட்டு கோமியம் படி உ பசுவின் கோமியம் படி உ யிதுவெல்லாம் காய்ச்சி

முறு நாளரைக்கவும். கற்றாழை சாற்றில் ஒருநாள் இயாந்தகரை சாற்றில் ஒருநாள் அரைக்கவும். மிளகு ~~பிரமாணம்~~ அளவு மாத்திரை ~~பண்ணி~~ செய்து வளையல் கெப்பியிலிட்டு ஒரு பானையில் நான்கு விரல் ~~பிரமாணம்~~ அளவு மணல் போட்டு

72 - அ. அதன் மேல் கெப்பியை வைத்து கெப்பி கழுத்தளவும் மணல் இட்டு மூடி கமலாக்கினி, தீபாக்கினி, ஒருசாமம் எரித்து எடுத்து கெப்பி ஆறவிட்டு மாத்திரை எடுத்து கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு ஒருநாள் ~~[illegible]~~ முழுவதும் அரைக்கவும். சங்கம் வேர் பட்டை சாறுவிட்டு ஒருநாளரைக்கவும். மாத்திரை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

ஆ. இச்சா பத்திய மாத்திரை:—

இரசம் வராகனெடை 2, துத்திர நாபி வராகனெடை 2, உருக்கு பஸ்பம் வராகனெடை 2, அரப்பொடி வராகனெடை 2, சாதிலிங்கம் வராகனெடை 2. வெங்காரம் வராகனெடை 2, அரிதாரம் வராகனெடை 2, மனோசிலை வராகனெடை 2, ஊசிகாந்தம் வராகனெடை 2. பொட்டிலுப்பு வராகனெடை 2. சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகுரோகணி, கோரோசனை, ஓமம், இலவங்கம், சாதிக்காய், சாதிப்பத்திரி, கஸ்தூரி மஞ்சள், கோரோசனை, அக்கரகாரம், அதிமதுரம், செவ்வியம் கோஷ்டம், தம்பராஷ்டம், சிறுகுறிஞ்சான் வேர்பட்டை, நாயுருவி விதை, நிலக்கடம்பு வேர், ஆகவிட்டு அரைத்து மிளகு ~~பிரமாணம்~~ அளவு குளிகை ~~பண்ணி~~ செய்து நிழலில் உலர்த்தி சுக்கு, திப்பிலி, சீரகம், இலவங்கம் இதிலிடவும்.

73. அ. சிவசிந்தாமணிக்கு சாறுவர்க்க தரைக்கிறது:—

கையெயாந்தகரைச் சாறு, சங்கம் வேர் பட்டை சாறு, நிலக் கடம்புச் சாறு, செருப்படைச் சாறு, துளசி சாறு இந்த சாறுகளை விட்டு அரைத்து மாத்திரை செய்யவும். நிழலில் உலர்த்தவும். சகல ரோகத்துக்கும் இஞ்சி சாற்றிலிடவும். தும்பராஷம் கஷாயத்தில் கொடுக்கவும்.

ஆ. சிவகசிந்தாமணி நித்திய சாரமாத்திரை:—

ரசோரம் விராகனெடை க, அதிமதுரம் விராகனெடை க, செவ்கனி கோஷ்டம் விராகனிடை க, திப்பிலி விராகனிடை க, எட்டி விராகனெடை க, மிளகு விராகனெடை க, செம்போத்து பித்து இரண்டு, கோழி பித்து இரண்டு, வெள்ளாட்டுப் பித்து இரண்டு, எலுமிச்சம் பழச்சாறு, வாழைகிழங்குச் சாறு, கற்றாழை சாறு.

வெள்ளை பாஷாணம் விராகனெடை பத்து ~~சுண்ணாம்பு~~ சுண்ணாம்பு காடியவொடந்த புடத்தில் கட்டி மூன்று நாள் எரிக்கவும். ~~சுத்தி பண்ணின~~ பிறகு கல்வத்திலிட்டு சங்கம் பழச்சாற்றில் மூன்று நாளரைத்து இரச செந்தூரம், சேர்த்து தாமரைப்பூ சாறு, முலைப்பால், இஞ்சிசாறு, ~~பிந்தவகை~~ இவைகள் சாற்றில் ஒன்பது நாளரைத்து மாத்திரை சிறு நெல்லிக்காய் அளவு மாத்திரை செய்து சகல வியாதிக்கும் தக்க அனுபானத்தில் கொடுக்கவும்.

74. அ. ஆனந்தவயிரவன் சிவசிந்தாமணி :-

உஷசி காந்தம் விராகனெடை கா, இரசம் விராகனெடை
பத்து, சாதிலிங்கம் விராகனெடை கா, கௌரி விராகனெடை
கா, கந்தகம் விராகனெடை பத்து. மனோசிலை விராக
னெடை ரூ, உருக்கு பஸ்பம் விராகனெடை பத்து.
வெள்ளை பாஷாணம் விராகனெடை கா, பொட்டிலுப்பு
விராகனெடை கா, மயிசாக்ஷி விராகனெடை கா, நாபி
விராகனெடை ரு, இங்குலிகம் விராகனெடை கு,
இலிங்கம் விராகனெடை கு, பொன், வெள்ளி, செம்பு
துத்தநாகம், காந்தம், பவழம், புஷ்பராகம், இரச
வர்க்கம், கெருடபச்சை, முத்து, கோமேதகம், நீலம்,
பொன்னூமத்தை விதை, திப்பிலி, இரசபற்பம், தாம்பர
பற்பம், அகில், சந்தனம், நல்ல சந்தனம், விளாம் பிசின்,
சாதிலிங்கம், நாபி, வெண்காரம், மிளகு, அவை வகை ஒன்றுக்கு
விராகனெடை போடவும். எலுமிச்சம் பழச்சாறு வார்த்த
ரைத்து உலர்ந்த அளவு குளிகை செய்து நிழலில்
உலர்த்தி வாதசாரத்திற்கு சர்க்கரையில் கொடுக்கவும். சீத
சாரத்திற்கு இஞ்சி சாற்றில் கொடுக்கவும்.

75. அ. சன்னி பாதம் பதிமூன்று, இன்னம் அறியும்படி :-

தாந்திரிக சன்னி குணங்கள் :- வயிறு நோகும்,
வாயுலர்ந்து வரும். உடம்பெல்லாம் நோகும். விக்க
லெடுக்கும். தாகம் பிறக்கும். சிலேத்தும முண்டாயிருக்கும்.
வன்மை குறைந்திருக்கும். நித்திரையில்லாமலிருக்கும்.
இது தாந்திரிக சன்னி குணம்.

அந்தக சன்னி குணம் :-

தாகமுண்டாயிருக்கும். பசிதாகமுண்டாயிருக்கும். மந்தமுண்டாயிருக்கும். அசும். தலைநடுக்கும். தேம்பி அலறும். அசாத்தியம்.

ருத்தாங்க சன்னிவாதகுணம் :-

மனம் வியாக்கூலமாய் இருக்கும். பிரண்டு பிரண்டு அசும். மேல்சுவாசம் வாங்கும். நோவுண்டாயிருக்கும். பிறமை பேச்சுண்டாயிருக்கும். உடனுக்குடன் எழுந்திருக்கும். உடம்பு எரிவெடுக்கும். கிறுகிறுப்பு இருக்கும். கழுத்து துவண்டு போகும். எசும்புக் கின்னே குத்தி இடையறாப்போலே இருக்கும். மனசு கலக்கமாயிருக்கும். தாகமுண்டாயிருக்கும். இருமலுண்டு. இந்த லட்சணமுண்டானால் ருத்தாங்க சன்னி எனப்படும். இது சாத்தியத்துக்கு வாராது.

சித்திரவிப்புருதி சன்னி குணம் :-

உடம்பு கரட்சசுண்டாய் தாகமுண்டாய் முகம்வாடி இருக்கும். பிறமை பேச்சுண்டாயிருக்கும். உமிழ்ந்து கொண்டிருக்கும். வயிறு இரையும். கண்விழி பிறளும் சிறிப்புண்டாயிருக்கும். பாடும். என்னேரமும் தூங்கும். இது சித்திரவிப்புருதி சன்னி என்றறியவும். இது சாத்தியத்துக்கு வாராது. அசாத்தியம்.

சிதாங்க சன்னி குணம் :- உடம்பு குளிர்ந்து இருக்கும். மேல்சுவாசமுண்டாயிருக்கும். விக்கலெடுக்கும். கைகளை போட்டு போட்டு போதலையிருக்கும்.

பேச்சு தப்பிதமாயிருக்கும். வெள்ளோக்காளமாயிருக்கும்.
இருமலெடுக்கும். அதிசாரம் பிறக்கும். தின்றும் அழும்.
இது சீதாங்க சன்னி என்றறியவும். சாத்தியத்துக்கு வராது.
அசாத்தியம்.

46.அ. சந்திக சன்னி குணம்:-

தமனையுண்டாயிருக்கும். தன் பேச்சு தன் வார்த்தையு
மாய் முண்டாயிருக்கும். ஒலியும் கூச்சலாயும் எடுக்கும்.
சிலேத்தும முண்டாயிருக்கும். தாகம் உண்டாயிருக்கும்.
உடம்பு முழுவும் குளிர்ந்து போம். நாக்கு தடித்து
முள்ளுப் போலே இருக்கும். உலர்ந்து எருமுட்டை
போலே இருக்கும். சிவந்திருக்கும். வயிறு கழியும்.
உடம்பு நடுக்கும். காது நோகும். இது சந்திக சன்னி சாத்தி
யத்துக்கு வராது. அசாத்தியம்.

கண்டாங்குப்தி சன்னி குணம்:-

தலை நோகும். பிடரி நரம்பு இழுப்பு தினவெடுக்கும்.
மூர்ச்சையுண்டாயிருக்கும். உடம்பு நடுக்கும். காய்ச்
சல் கடினமாயிருக்கும். இந்த லக்ஷணமுண்டானால்
கண்டாங்குப்தி சன்னி சாத்தியத்துக்கு வராது.
அசாத்தியம்.

தாண்டக சன்னி குணம்:-

தாகமெடுக்கும். காச்சலுண்டாம். கண் இரண்டும்
பிரண்டு வரும். எதுக்கும் இச்சைப்படும். பிடரி
இழுக்கும். சுவாசமெடுக்கும். உடம்பு நடுக்கும்.
பிரமை பிறக்கும். வாய் நீர் வடியும். தாகம் வரும்.

ஆ. காது கோணியிருக்கும். காதுங்கீழே வீக்கமிருக்கும். சுரமுண்டாயிருக்கும். குரல் கம்மும். சுவாசமெடுக்கும். கண் பொங்கி மூடிக்கொண்டிருக்கும். பிரமிக்கும். உடம்பு நடுக்கும். அழும். இதினுடைய குணம் கர்ணிக சன்னி. இது சாத்தியத்திற்கு வரும்.

இரத்தபிட்டிய சன்னி :—

உடம்பு காயும். வாந்தி பண்ணும். மூர்ச்சை போம். வயிறு இரைக்க வயிறு கழியும். விக்கலெடுக்கும். வயிறு எரியும். தலை சுற்றி வரும். மூச்சு அடங்கியிருக்கும். சுவாசமெடுக்கும். உடம்பு திரும்பிவிக்கும். நாக்கு கறுப்பாக தடிக்கும். இதின் குணம் அசாத்தியம். சாத்தியத்துக்கு வராது.

பிரலாப சன்னி குணம் :—

உடம்பு கருக்கும். பிலற்பிக்கும். தலை நோவும். ஒருத்தர் வீடு ~~உடம்பு~~ வாயிவு ~~பூரணமாயிருக்கும்.~~ அன்னத்திற்கு ஆசைப்படும். நிதானம் தப்பும். வாதரும் இதின் குணம் அசாத்தியம். சாத்தியம் வராது.

77. அ பசு நேத்திர சன்னி குணம் :—

மேல் சுவாசமுண்டாயிருக்கும். ~~ஆவா பித்தமாயிருக்கும்.~~ பித்தம் அதிகரித்திருக்கும். விக்கலெடுக்கும். நாக்கு தடித்து எருமுட்டை போலே இருக்கும். எந்நேரமும் நித்திரை போலேயிருக்கும். வயிற்றிலேயிருக்கிற நாக்கு பூச்சி வாயிலே வரும். காது கேளாது ~~பின்~~ வண்மையில்லாமலிருக்கும். உடம்பு மரத்திருக்கும். கண்ணிலே ~~தண்ணீர்~~ நீர் வடியும். அசாத்தியம், சாத்தியத்துக்கு வராது.

ஆசன்னி உவக குணம் :-

மூண்ணு வகை தோஷம் பிறக்கும். வெகு நித்திரை கொடுக்கும். மனதிலே சிந்தையாயிருக்கும். அவாசமெடுக்கும். வண்மையில்லாமலிருக்கும். நீர் கட்டும். நானா வகையாகப் படும். இதின் குணம் அசாத்தியம். சாத்தியத்திற்கு வாராது.

தாந்திரிக சன்னி ஏழு நாளையிலே குணம். அந்தக சன்னி பத்து நாளையிலே குணம். ருத்தாங்க சன்னி இருபது நாளையிலே குணம். பிரலாப சன்னி பதினாறு நாளையிலே குணம். ஜிம்பிக சன்னி பன்னிரண்டு நாளையிலே குணம். சந்தி சன்னி பதினைந்து நாளையிலே குணம். சித்த விப்பிரம சன்னி இருபத்தொன்று நாளையிலே குணம். சீதாங்க சன்னி பதினைஞ்சு நாளையிலே குணம்.

ஆ. தாந்திரிக சன்னி பதினெட்டு நாளையிலே குணம். கண்டகுப்ஜ சன்னி பதிமூணு நாளையிலே குணம். புக்ன நேத்திர சன்னி எட்டு நாளையிலே குணம். இரத்தஷ்டீவி சன்னி இருபது நாளையிலே குணம். கிடைக்கும். ~~அசன்னி உகபதிமூணில் சாத்தியம்.~~ அசாத்தியம்.

78-அ. நாகராதி சூரணம் :-

சுக்கு, சித்திரமூலம், பாடவெங்சூரணம், ஓமம், (ராசாங் செண்ம) சீரகம், அதிவிடயம், முதலை, தேனு, திப்பிலி, கொடசக்கை, கொடப்பாலை, யிலவன் பிசின், அவாதிப்பழம் ஏக. விளாம்பழம் ஒன்று குஞ்சுதிரளா மூலம், வில்வ பத்திரி பழம், சத்தை மாவு கொட்டை ஒன்று,

சயிந்தலவணம், கருஞ்சீரகம், மாதுளம் பிஞ்சு, இத்த
ணையும் சமபாகமாக சூரணம் செய்து மோரிலே யாவது
தயிரிலேயாவது நெய்யிலேயாவது கொள்ளவும்.
வியர்த்து பேதி, கிராணியும் போம். அதிசாரத்துக்கு
தேனிலே இடவும்.

79. அ. தன்வந்திரி கிருதம்:—

திசைமூலம், இதற்கு மருந்து
பெருவாகை, பெருங்குமிழ், முன்னை, பாதிரி, குவளை
சித்தாமல்லி, பேராமல்லி, சிறுவழுதலை, கண்டங்கத்திரி,
நெருஞ்சில் பாங்கு நெமது, தேவதாரி, கடுக்காய், சிகப்பு
சாரட்டை, உலிமரி, சித்திரமூலம், வெள்ளை சாரட்டை,
தந்தி சதிரகன்னி, வெள்வேல், வெள்ளை புங்கு, வில்வம்,
சோரம்கொட்டை, கச்சோலம், புஷ்கரமூலம், திப்பிலி
மூலம், இந்த மருந்தெல்லாம் பலம் ஆக
இருந்து தாணிநீர் வார்த்து குறுணியாகக் காய்ச்சி வடித்து
கொண்டு அந்த கஷாயத்திலே நெய் வார்த்து
ஏவல் இஞ்சடு பருத்திவிதை, உலவது இஞ்சாறு யாந்தமுனை
வகைக்கு பண்ணிரெண்டு இஞ்சாறு நாழி
நாகக் காய்ச்சி வடிகட்டி கஷாயத்தில் கலந்து யதிலே
சேர்க்க சேர்க்கும் திரவியம் பிரப்பங்கிழங்கு, கடுக்காய்,
தான்றிக்காய், நெல்லி பருப்பு, சிறுதேக்கு,
ஆனைத்திப்பிலி, சுக்கு, வாய்விளாங்கம், வசம்பு, ரம்பி
ரோகம் யிந்த மருந்தெல்லாம் கல்க்கமாயரைத்து
நெய்க்கு அரிலொன்று வைத்து கொண்டு

சிறுபக்குவமாக ~~அரிந்து~~ உண்ணவும். இந்த கிருதத்
~~கல்கொள் கொள்ளச்சே~~ தீரும் வியாதி விப்புருதி பிடகம்
அபஸ்பமாரம், உன்மாத்தம் இவையெல்லாம் விட்டு ஓடிப்
போகும்.

0. அ. இரச சூரணம் :- சுக்கு, திப்பிலிமூலம், சித்திரமூலம்,
செவ்வியம், பெருங்காயம், மிளகு, அதிவிடையம், வசம்பு,
வெள்ளுள்ளி, ஓமம், ஆனைதிப்பிலி, நேர்வாளம் அத்தி
செவ்வந்த, மஞ்சிட்டி, வெட்டிவேர், நிலவேம்பு, ஆயில்
பட்டை, சீரகம், கருஞ்சீரகம், குரோசாணி ஓமம், மஞ்சள்,
மரமஞ்சள், கடுகுரோகணி, சத்திசாரம், எவ்வாச்சா
ரம், வெண்காரம், சயிந்தலவணம், விடலவணம்,
சவாபிடலவணம், வளையலுப்பு, உப்பு, கடுகு. பேய்-
முசுட்டை, பெருங்கிழங்கு, முக்காவேளைவேர்,
சிகப்புசாறு, வேளைவேர், வெள்ளை சாறுவேளைவேர்,
நொச்சிப்பட்டை, கரிசலாங்கண்ணி, புங்கம்பட்டை
சாயவேர், பிரண்டைவேர், அம்மனாந்தண்டுகிழங்கு,
ஆமணக்கம்வேர், ~~நொச்சிப் பட்டை~~, ~~கரிசலாங்கண்ணி~~,
~~புங்கம்பட்டை~~, ~~சாயவேர்~~, ஆகவகை சமனுக்கு
வகைக்கு பலம் க. இந்த சூரணம் ஒருபங்கு சிவத்தைவேர்
மூன்றுபங்கு, அனுபானம் வெந்நீரிலே பத்தியம்.
உப்பு, புளிப்பு, மோர் ~~இருக்கு~~ தீரும் வியாதி மகோதரம்.
சயித்திய சூலை, மலபந்தம், பாண்டு சோகை, பஞ்ச
காசி, சீதசுரம் பூரணசுரம், சீகோரசுரம், பயித்திய
குன்மம், வாதபித்தம், வாதராஷதம், இரத்தபித்தம்.
பயித்திய சுரம், அன்னத்துவேஷம், கம்பவாதம், சேஷி
பகட்டு, அழுகு பயித்தியம், மகுளம், காமாலை, குலை
தாபசுரம், பாரிச சூலை ~~ஆரோக்கியம்~~. அரோசகம்.

நீர்க்கண்ட வோய்கள் ஸ்ரீ

81. அ. ....சாய........ நேர்க்கண்ட... டி :—

வெள்ளை வெங்காயம் பலம் ஒன்று, கடுகுவின்ன எள்ளு பலம் ஒன்று, இவையிரண்டையும் அரைத்து இதிலே முன்னாழி மோர் விட்டு கிளறி இதிலே சுக்கு, மிளகு, திப்பிலி, கொத்தமல்லி, திப்பிலி மூலம், இலை வகைக்கு பலம் க, சக்கரை பலம் வ, ஏலம் பலம் வ, சாதிக்காய் பலம் வ, பெருங்காயம் பலம் வ, பஞ்சலவணம் பலம் வ, யிவையெல்லாம் சூரணம் செய்து முன்சொன்ன மோரோடே போட்டு வெய்யிலிலே சூரிய புடம் வைத்து உதிரியாக வெல்லம் போல காயவைத்து எடுத்து பதினைந்து நாள் தானிய புடம் வைக்கவும். பின்பு எடுத்து காலை தாளிக்காய் அளவு கொள்ளவும். இச்சா பத்தியம் தயிரு மோரு ஆகாது. இதுக்கு தீரும் வியாதி 54 இருபதுவகை வாதம், நாற்பது வித பயித்தியமும், இருபதுவகை சேத்துமம் இருபதுவகை மேகமும் எட்டுவகை கோதாமும். ஆறுவகை மூலமும், ஐந்துவகை குன்மமும், பதினெட்டுவகை வாயு, பித்த கோபமும், அண்டவாதமும், சயம் இவைகள் தீரும்.

ஆ. வலி.......... :—

சிறுசாணிக் கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, முசுமுசுக்கை கிழங்கு, முடக்கொத்தான், இலுப்பைப் பட்டை, ஆடாதோடையிலை, நிரியரு சமூலமும், இவையெல்லாம் சிபாகமாகக் கொண்டுவந்து வகைக்கு ஓராழிசாறு பிழிந்து பசுவின் நெய் உ. நாழி வார்த்து வெள்ளாட்டுப்பால் நாழி-1 வார்த்து கலந்து எட்டிலொன்றாய் காய்ச்சி கடைசரக்கு ஏலம், இலவங்கம், நாகேசரம்,

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லி பருப்பு, அதிமதுரம், மோச்சம்பழம், சீரகம், கருஞ்சீரகம், வகைக்கு பலம் இடித்து சூரணம் செய்து நாகப்பூ இரண்டு பலம், வெள்ளாட்டுப்பால் வற்றத்தனைத்து இவை எல்லாம் கூட்டி கலந்து காய்ச்சி மெழுகு பதமாய் கிண்டி இருபது பலம் சர்க்கரை கூட போட்டு தூள் பக்குவம் செய்து ஒரு பல்லாகையாய் எடுத்து காலை இரண்டு தான்றிக்காய் அளவு சாப்பிடவும். இதனால் தீரும் வியாதி முயல்வலி, மெரகண்டவலி, கர்க்காய்வலி, கன்றுவலி, சோம்புவலி, மொத்தவலி, பஷ்வைவலி, பன்றிமாத்தை வலி, வீச்சுவலி, சுழல்வலி, அதுராவலி ஆக எண்பது வலியும், வாத வாய்வும் தீரும்.

82. அ. கலிக்க உருண்டை :—

வில்வ பத்திரி வேர், துளசிவிதை, சுக்கு, மயில்துத்தம், மிளகு, ஓமசன், திரிபலி இவை வகைக்கு பலம் வெள்ளாட்டுப்பாலில் அரைத்து உருண்டை பண்ணவும்.

ஆ. பஞ்சாக்க தயிலம் :—

எருக்கு, ஊமத்தை, கள்ளி, முருங்கை பட்டை, கையாந்தகரை இவை வகைக்கு சாறும், பசுவின் பாலும், ஆமணக்கெண்ணெய் .... கெண்ணெய், பசுப்பெண்ணெய், நல்லெண்ணெய் இந்த அஞ்சு வகையும் கள்ளிப்பால், எருக்கம்பால் .... திரவியம். வெள்ளுள்ளி, செவியம், திரிகடுகு, சுக்கு, மிளகு, திப்பிலி, காயம், தம்பராஷ்டம், மாவிலிங்கம் .... பட்டை,

?

புளியம் பட்டை, வேர் வெளமஞ்சள், திப்பிலி மூலம், சாதிக்காய், சயிந்தவலவணம், சேடாரு . . . . பொட்டுஏலம், தேத்தாங்கொட்டை, சோதிஷ்ட டாதிவித்து. அசித்திரமூலம், சாறட்டை அ . . . . கீழ்க்காய் விரை, வெப்பமுத்து, லவங்கம், வகைக்கு விராகனெடை ௩. தயிலம் பக்குவமாய் [நீக்கப்] வடிக்கவும்.

83. அ. பஞ்சகவியம்:—

கோரைக்கிழங்கு, ஏலம், கொடிவேலி, வாயுவிளங்கம், மஞ்சள், மரமஞ்சள், மஞ்சிஷ்டி, வெணைவேர், வட்டத் திருப்பிவேர், கடுகுரோகணி, கருஞ்சீரகம், கடுக்காய், தான்றிக்காய். நெல்லி பருப்பு, புத்திர சீவி விரை, வகைக்கு பல வ, பசுவின் நெய் ௩. பசுவின் பால் நாழி [நால்கு நாழி], பசுவின் கோமியம் நாழி [நால்கு நாழி], பசுவின் தயிர் நாழி [4 நாழி], பசுவின் சாணி தண்ணீர் ௪, இப்படி கூட்டி பதத்தில் வடித்து தினமும் இரண்டு கழஞ்சில் கொள்ளவும். பின்னையுண்டாம். சாவகை கிரணங்களும் தீரும். மேகவிரணங்களும் தீரும்.

ஆ. பஞ்சாரக்க தயிலம்:—

எருக்கம் வேர் பல ள, எருக்கிலை பல ய, எருக்கம்காய் பல ய, மாவிலங்கு எருக்கம் பூ பல ய, ஆயில் பட்டை, மாவிலங்க பட்டை, தழுதாழை வேர், கொடிவேலி வேர், புங்கம்பட்டை, நொச்சில் வேர், முருங்கை வேர், அமுக்கிரா வேர், [இலை] வகைக்கு பல ய, யிது உடனே எருக்கம் வேர், காய், பூ, இலை. பால் கூட போட்டு எட்டுமரக்கால் தண்ணீர் விட்டு இரண்டு படியாகக் காய்ச்சி இறுத்துக் கொண்டு

அந்த கஷாயத்திலே எருக்கம்பால் விட்டு தழுதாழை சாறு,
நொச்சி சாறு, உத்தாமணி சாறு, பசுமஞ்சள் சாறு, குதிரை
வாலி சாறு, பொடுதலைச் சாறு, சித்ரகள்ளி தண்ணீர்
இவை வகைக்கு உரி வெள்ளாட்டு கோமியம் படி ௨,
வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், புங்கெண்ணெய்,
நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், வகைக்கு நாழி.

கடைமருந்து: பெருங்காயம், அரத்தை, இந்துப்பு, ஏலம்,
இலவங்கபட்டை, இலவங்கபத்திரி, சிறுநாகப்பூ, கோஷ்டம்,
கடுகுரோகணி, சுக்கு, திப்பிலி, மிளகு, சிறுதேக்கு, கர்கட
சிங்கி, தாளிசபத்திரி, இவை வகைக்கு வராகனெடை ௨.

84. அ. முன் கஷாயத்தில், சாறுவகை, பால்வகை, எண்ணெய்வகை,
சகலமும் கூட விட்டு பதத்திலிறக்கி அதிலே வெள்ளை
குங்கிலியம், இரண்டு பலம் பொடி செய்து போடவும்.
வெள்ளை பூண்டு பலம் ௨ கூட அரைத்துவிட்டு சூரணம்
கூடப் போட்டு தயிலம் இறக்கி தானிய புடத்தில் வைக்கவும்.
சகல புண்ணுக்கு உடலில் தடவவும்.

ஆ. **பூதிகா தயிலம் :-**

ஆயில்பட்டை பலம் ௨. வில்வ வேர், தழுதாழை வேர்,
கொடிவேலி வேர், நொச்சில் வேர், முன்னை, கண்டங்கத்திரி
வேர், கொட்டை கரந்தை வேர், சிறு கரந்தை வேர், பேரா
முட்டி வேர், பெருமுன்னை வேர், செம்பிளிச்சம் வேர், அமுக்கு
ரா வேர், குமிளம் வேர், அரத்தை பலம் ௨, எருக்கம் வேர்,
ஆக வகைக்கு பதினைந்து பலம்
பலம் ய எட்டு மரக்கால் தண்ணீர் விட்டு
கஷாயம் நாழி படியாக இறுத்துக் கொண்டு இதிலே

விடுகிற சாறு நொச்சில் சாறு, துளசி சாறு, கையாந்தகரை சாறு, சம்பங்கிலை சாறு, சாரணை சாறு, தழுதாழை சாறு, பொடுதலை சாறு, பொன்னாங் கண்ணி சாறு, முசுமுசுக்கை சாறு, ஆக சாறுவகை ஒன்பது. வகைக்கு இருநாழி பசுவின் பால்கு, எண்ணெய் படி நான்கு, காசாயம் படி நாலு, கடைமருந்து மைசாஷி, செவ்வியம், அகில் பட்டை,

85. அ. அரத்தை, செம்பிளிச்சங் கட்டை, சடாமஞ்சில், அதிமதுரம், நறும்பாலை, நிலாங்கிழங்கு, பச்சையிலை, லவங்கபட்டை, லவங்க பத்திரி, சந்தனகட்டை, மஞ்சிஷ்டி, நன்னாரி, வேர், விலாமிச்சன் வேர், கஸ்தூரி, பச்சைகற்பூரம், கோரோசனை, இவை வகைக்கு விராகனிடை உ கூட்டி தூரணம் ~~சட்டம்~~ போட்டு காய்ச்சி பதத்தில் வடித்து அதின் பிறகு அந்த ஒன்பது வகை யிலைச்சாறு கூட்டி யடித்து தூரணம் ~~சட்டம்~~ போட்டு காய்ச்சி பதத்தில் வடித்து அதின் பிறகு கஸ்தூரி, குங்குமம், பச்சை கற்பூரம், கோரோசனை ~~யிது~~ ~~வெல்லாம்~~ பொடித்து தயிலத்தில் போடவும். தாணியபுத்தில் வைக்கவும். தீரும் வியாதி பீனிசம், தலையிடிப்பு, மண்டை குடைச்சல், நேத்திரம், பிடரி, கிசிவு, ஒத்த தலைவலி, கடச்சுனை. ~~இதுவெல்லாம்~~ தீரும்.

ஆ. அரக்கு தயிலம் :-

பெருகன் கிழங்கு பலம் நூய, சித்திரமட்டி, நன்னாரி, நெருஞ்சில் வேர், அமுக்கிராய் வேர், நரிப்பயற்றங்கொடி, குமிழம் வேர், தண்ணீர்விட்டான் கிழங்கு, கருப்பம் வேர், முசுமுசுக்கை வேர், இவை வகைக்கு பலம் க, கூட்டி தாமரை வணையம் பலம் க, கருக்காய் படி, அரைத்து தாணி தண்ணீர் விட்டு குறுணியாகக் காய்ச்சி யிறுத்து கொண்டு வல்லாரை

ஒரு பலம் இளநீர் படி ஒன்று. பசுவின் பால் படி ஒன்று, தயிர் ஒருபடி, நெல்லிசாறு ஒருபடி, எலுமிச்சம் பழச்சாறு அரைப்படி, முலைப்பால் அரைபடி அரக்கு பலம் ௰௨, ஒரு பானையில் போட்டு நான்கு மரக்கால் தண்ணீர் விட்டு நாலிலொன்றாய் காய்ச்சிய கஷாயத்துடன் கூட வார்த்து காய்ச்சி கடைச்சரக்கு சாதிக்காய், சாதிபத்திரி, மஞ்சிஷ்டி, கடுரோகணி, கசகசா, சிறுதேக்கு, இலவங்கம், கோஷ்டம், அக்கிரகாரம், இருப்பைப்பூ, கருஞ்சீரகம், நற்சீரகம், தாமரை, நெல்லி பருப்பு, கோரைக்கிழங்கு, கொத்தமல்லி விதை சதகுப்பை, இலவங்கபட்டை, இலவங்கபத்திரி, சந்தனக்கட்டை, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், ஒரு பலம் சிறுநாகப்பூ, பெருநாகப்பூ, திகைநிறு வகையொன்றுக்கு விராகனெடை நான்கு, இவைகளை இடித்து சூரணம் செய்து தயிலத்தில் போட்டு நல்லெண்ணெய் நான்குபடி வார்த்து காய்ச்சி நீர் சுண்டின பக்குவத்தில் இறக்கிக் கொள்ளவும். அனுபானம்: ஆறுமாதத்தை கடந்தயில்லாவது, பசுவின் பாலிலாவது உள்ளுக்கு கொள்ளவும். மேலுக்கும் பிடிக்கவும்.

மகா அரக்கு தயிலம் :—

நில சந்தன கட்டை பலம் ௩, விலாமிச்சம் வேர் பலம் ௩, வெட்டி வேர் பலம் ௩, கோரைக்கிழங்கு பலம் ௫, நன்னாரி வேர் பலம் ௫, சித்திரமூட்டி வேர் பலம் ௰௨ இவைகளை இடித்து தாள் செய்து நூற்றியிருபது படி தண்ணீர் விட்டு நாலிலொன்றாகக் காய்ச்சி எண்ணெய் படி ௫, பாலப்படி ௫, இளநீர் படி க, சிறுகீரை சாறு படி (க), தண்ணீர்விட்டான் கிழங்கு சாறு படி உ, பொன்னாங்காணிச் சாறு படி ௨, இதற்கு கடைச்சரக்கு

இலவங்கம், இலவங்கபத்திரி, சிறுநாகப்பூ, சடாமாஞ்சி, மஞ்சிஷ்டி, குங்கும பட்டை, பூலாங்கிழங்கு, சிறுதேக்கு, கஸ்தூரி மஞ்சள், செண்பகப்பூ, சாம்பிராணி, குங்கிலியம், கொத்தமல்லி, செவ்வள்ளிகொடி, மஞ்சள், சுக்கு, திப்பிலி, மிளகு, ஏலம், அஞ்சனகல் இவை சமபாகம் பொடித்து காய்ச்சி யிறக்கி பிழிந்து பிறகு போடுகிற வாசனைப் பொருட்கள் [illegible], மல்லிகைப்பூ, இருவாட்சி செங்கழுநீர்ப்பூ, போடவும். இதுக்கு தீரும் வியாதி இருபதுவகை மேகம், பிரமியம், தேகத்திலே உஷ்ணங்களெல்லாம் தீரும். உடம்புக்கும், தலைக்கும் இட்டு முழுகவும்.

67 அ. <u>வாதகிராணி சங்கிரக கிராணிக்கு :-</u>

திப்பிலி பலம் ரூ, மிளகு பலம் சா, சுண்ணம் வறுத்து வெல்லம் பலம் யசா. நெட்டி பெருமரட்டி இலை சாறு நாழி, வெல்லம் சாற்றில் கரைத்து மிளகரணை பட்டை பலம் சா அரைத்து சாற்றில் கரைத்து கடைமருந்து பொடித்து மெழுகுபதத்தில் இறக்கி சிறு புன்னைக்காயளவு இரண்டு வேளையும் உள்ளுக்கு கொள்ளவும். பத்தியம் அறைக்கீரை, துவரை பருப்பு, மிளகுநீர், முருங்கைக்காய் கூட்டவும். எட்டு நாளைக்குப் பிறகு பசுவின்பால், நெய் கூட்டவும். இச்சா பத்தியம்.

ஆ. <u>விஷமுஷ்டி தயிலம் :-</u>

வெள்ளெருக்கு, சீழ்க்காய் வேர், பொடுதலை, முடக்கொத்தான், [illegible], வெள்ளை சாரணை, குப்பைமேனி, கொடிக்கள்ளியிலை, கள்ளி, சதுரக்கள்ளி, முன்னை வேர், பாதிரிவேர், விழுதி, ஆடாதொடை வேர், பன்னைவேர்,

சிற்றாமுட்டி, பேராமுட்டி, பொன்னாங்கண்ணி, சிறுக்
கீரை, செருப்படை, நொச்சியிலை, தழுதாழையிலை,
வேம்பு, அமுக்குரா, உத்தாமணி, நல்லவேப்பம்வேர்,
மிளகரணை, முக்கத்தரி, நெருஞ்சிவேர், கீழாநெல்லி வேர்,
குமிழம் வேர், நரிப்பயறு சமூலமும், வெள்புல்லாந்தி, நீர்
புல்லாந்தி, குட்டிப்புளா வேர், சிறுகுறிஞ்சான், பெருங்குறிஞ்சான்,
புங்கம் வேர், அழிஞ்சில் வேர், மூலி, சங்கு, ஆதண்டன்வேர்,
கண்டங்கத்தரி, சிறுவழுதலை, விஷ்ணுகிராந்தி, கொட்ட
கரந்தை, தூதுவேளை, முக்காவேளை, தாழம் விழுது,
அம்மையார் கூந்தல், மாங்கள்ளி, முருக்கில் வேர்,
உளாந்தண்டு, வெப்பாலை வேர், மாவிலிங்கு, எட்டிப்
பழம், நன்னாரி வேர், பெருவிளா, நரிவிளா, உசிபாலை,
~~பெருமாய~~ தபசி முருங்கை, விசிறிவேர், சீந்தில் வேர்,
கோவைத்தண்டு, உமத்தை, சங்கம்குப்பி, முருங்கை,
காட்டுமுருங்கை, துமட்டி வேர், ஆடுதின்னாப்பாளை,
துளசி, எருக்கம்பால், சதுரக்கள்ளிபால், கொடிக்கள்ளி
பால், வெள்ளாட்டுப்பால், பசுவின்பால், சித்திரக்கலம்,
ஆயில்பட்டை, பெருமரப்பட்டை, மரமஞ்சள், செவ்வியம்
தம்பராஷ்டகம், திப்பிலி மூலம், ஆனைதிப்பிலி, வாய்
விளங்கம், சிறுநாகப்பூ, தாளிசபத்திரி, லவங்கபத்திரி,
சுக்கு, சீரகம், ஓமம், கடுகுரோகணி, ஏலம், மைசாட்சி,
கற்பூரசிலாசத்து, கோஷ்டம், சந்தனம், கொத்தமல்லி,
அகில்கட்டை, மிளகு, ரேணுகம், மஞ்சிஷ்டி, சடா
மாங்கிஷி, கேசரம், லவங்கப்பூ, கடுகுரோகணி, ஓமம்,
பலிங்கம், சாதிக்காய், சன்னா நாககேசரம், தான்றிக்காய்,

விலாமிச்சம் வேர், வெட்டிவேர், கருங்காலி, புனுகுசட்டம்
கூ, நல்லெண்ணெய் கூ, தண்ணீர் படி, ~~அஞ்சு~~ ஐந்து சுகான் நில
புடம், ~~அஞ்சு~~ ஐந்து சுகான் அருப்புமேல் காயயாறுத்து ஆறுநாள்
எண்ணெய் வார்த்து, தயிலம் பக்குவம். ~~அஸ்திக்குச்சாடம்~~ மண்டலம் கொள்ளவும்,
~~விடியாமை கூ~~ காலையில் ஒரு சாமம் சாடம், அருப்பிற் ~~எரியாது~~ கொள்ளவும். சகல ரோகங்களும்
குணமாம்.

89. அ. மேகவியாதிக்கு:—

முசுமுசுக்கை சமூலமும், நரிப்பயற்றங் கொடி சமூலமும்,
பொன்னாங்கண்ணி சமூலமும், சோத்தி வேரும் யிலையும்,
சிறுகீரை சமூலமும், நாருந்தாளி சமூலமும், நீர்புலா
வேர் யிலை, வராப்புலா வேர் யிலை, நெய்தல் வேர் யிலை,
குதிரைவாலி சமூலமும், தண்ணீர்விட்டான் கிழங்கு, ~~தாமரை~~
தாமரை வளையம், நிலப்பனை கிழங்கு, சீந்தில் தண்டு,
அமுக்கிரா, வள்ளிக் கிழங்கு, வெள்ளரிக்காய்ச் சாறு,
கரும்புச் சாறு. கடைச்சரக்கு:— அதிமதுரம், கோஷ்ட
டம், லவங்கபட்டை, சாதிக்காய், சாதிபத்திரி, செண்பகப்பூ,
காரம்பூ, திப்பிலி, சிறுமூலம் ~~யாதவெல்லாம்~~ இவைகளை கூட்டி
வெட்டி மருந்து ~~வேரிலை தண்ணீர் வார்த்து~~ நீர் விட்டு இரண்டு பங்கு
வர காய்ச்சி ~~முதல் கியாயம் காய்ச்சி~~ வைக்கவும். கடைசரக்கு
வகை ஒன்பதுக்கு காசிடை கூட்டி முத்கால் கஷாயம்
வார்த்தரைத்து ~~யாதுடன்~~ இவைகளுடன் சந்தனம், கலைக்கொம்பு, விளாம்
பிசின் வேர், ருத்திராஷ்சம் வகை ஒன்றுக்கு கொட்டைபாக்க
ளவு முன் கஷாயம் வார்த்தரைத்தரைத்து கூட கலந்து
நெய்நாழி, பசுவின் பால் குறுணி, முன் கஷாயம் வார்த்து
காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து அதின் பிறகு நாழிநெய்க்கு
எட்டு விராகனெடை சர்க்கரை கூட்டி வடித்து ஆவாரை

காம்பு, காய், பூ இலை கொண்டுவந்து தேங்காயளவு தவைத்து
அதிலே இருநாழி தண்ணீர்விட்டு பிசைந்து வடித்து அரைப்
படியாக காய்ச்சி அதின்பிறகு அந்த உரி கஷாயத்தில்
காலை நாலு காசிடை நெய்விட்டுக் கொள்ளவும்.
பிறகு எட்டு காசிடை நெய்விட்டு கொள்ளவும். இதுக்கு
தீரும் வியாதி இரத்தபிரமியம், சுக்கில பிரமியம்,
நீரடைப்பு, வெகுமூத்திரம், யதுவெல்லாம் தீரும்.

90. அ. வெகுமூத்திரத்துக்கு மாத்திரை :—

ஆலம் விழுது, அரசம் பட்டை, வேம்பாலம் பட்டை,
ஒதியம் பட்டை, சிறுநாவல் பட்டை, பெருநாவல் பட்டை,
கடப்பம் பட்டை, மருதம் பட்டை, முருக்கம் பட்டை,
நந்தியாவட்டம் பட்டை, செம்பம் பட்டை, மாம் பட்டை,
விளா பட்டை, தும்பி பட்டை, ஆவரை பட்டை, பூவரசம்
பட்டை, வெள்ளுதியம் பட்டை, வகைக்கு பலம் க, வில்வம்
கம் வில்வங்க பட்டை, சிறுநாவல் பூ, சாதிக்காய்,
சாப்த்திரி, சுக்கு, திப்பலி, வகைக்கு விராகனெடை
ஒன்று கஷாயம் போட்டு மாத்திரை (வெய்து) சாப்பிடவும்.

ஆ. சூதகவாயுவுக்கு தாளி சூரணம் :—

தாளிச பத்திரி விராகனெடை பத்து, மிளகு விராகனெடை
அ, சுக்கு விராகனெடை சு, திப்பிலி விராகனெடை ௬,
வில்வங்கம் விராகனெடை க, வில்வங்க பட்டை விராகனெடை
௨, ஏலம் விராகனெடை ௨, இவைகளை இளவறுப்பாக வறுத்து சூரணம் செய்யவும் சர்க்கரை விராகனெடை
நடு உ, சேர்க்கவும். இதுக்கு தீரும் வியாதி பித்தியம், காமாலை.
இச்சா பத்தியம். புகை ஆகாது.

நல்லவெல்லம் பலம் க, கற்றாழைச் சோறு பலம் க, சீரகம் விராகனிடை க, பொட்டிலுப்பு பலம் க, இவை கூடப் பிசைந்து மூன்று நாள் கொடுக்கவும். இப்படி மூன்று முறை கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளிப்பு நீக்கவும். துவரம் பருப்பு, முருங்கைக்காய், இலைக்கறையும் சேர்க்கவும்.

91. அ. பறங்கிப் பட்டை சூரணம் :—

திப்பிலி, திப்பிலி மூலம், செவ்வியம், சித்திர மூலம், சுக்கு, இலவங்கப் பட்டை, இலவங்கப் பத்திரி, சிறுநாகப்பூ, ஏலம், இலவங்கம், அசமதாகம், சாதிக்காய், சாதிபத்திரி, மிளகு, தேவதாரம், அரத்தை, கோஷ்டம், வாய்விளங்கம், கண்டு பாரங்கி, தாளிசபத்திரி, இந்த இருபத்தொரு கடைமருந்தும், சமபாகமாய் கூட்டியடித்து வஸ்திரகாயம் செய்து இதற்கு சரி பறங்கிப்பட்டை யடித்து வஸ்திர காயம் செய்து கலந்து வெண்ணெயில் கொள்ளவும், தோல் நோய் தீரும். பத்தியமாய் இருக்கவும்.

ஆ. சூதக வாயுவிற்கு :—

திப்பிலி, திப்பிலி மூலம், செவ்வியம், சித்திர மூலம், சுக்கு, இலவங்கப் பட்டை இலவங்கப் பத்திரி, சிறுநாகப்பூ, ஏலம், இலவங்கம், ஓமம், சாதிக்காய், சாதிபத்திரி, மிளகு, தேவதாரம், அரத்தை, கோஷ்டம், வாய்விளங்கம், கண்டு பாரங்கி, தாளிசபத்திரி, ஆக வகைக்கு இருபது வராகனிடை இதுக்கு பறங்கிப்பட்டை விராகனிடை உய, இராயபுரி சர்க்கரை, விராகனிடை சய, இவைகளை பொடித்து வெண்ணெயிலாவது, தேனிலாவது நெய்யிலாவது, மூன்று விரல் கொண்டது கொள்ளவும். இச்சா பத்தியம்.

93. அ. கூஷ்பாண்ட கிருதம் :—

பூசணி பழம் கொண்டுவந்து மேலே புறணி சீவி போட்டு உள்ளே இருக்கிற குடல் வாங்கிப் போட்டு அந்த பூசணி பழத்தை அரிஞ்சு அதை உரலிலிட்டு இடித்து தண்ணீர் பிழிஞ்சு போட்டு சட்டியில் விட்டு அதிலே நீர் ஒருபடி, பசுவின் பால் படி, ௧. இது இரண்டும் காச்சி சுருகின போது உரி பசுவின் நெய்விட்டு தேன் ஒருபடி சக்கரை ஒருபடி திப்பிலி பலம் ௧, சீரகம் பலம் ௧, கொத்தமல்லி பலம் ௧, ஏலம் பலம் ௧ இலவங்கம் விராகனெடை ஒன்று, கோஷ்டம் விராகனெடை ௧. மிளகு விராகனெடை ௧, நாகம் வறுத்து பொடித்து பொடி பண்ணி நன்றாய் கரண்டியாலே துழாவி சிவந்த பதத்திலே யிறக்கி வெருகடி பிரமாணம் உண்டு கொள்ளவும். இதினால் தீரும் வியாதி: பரிகாரம், ஆறுவகை பிரமியம், தாதுயாவும் அக்கினி மாந்தம், மருந்தரு, சூனியம், மூத்திர கிரிச்சம், மூத்திர பாணம், யிதுவெல்லாம் குணமாம். சீந்தில் சக்கரை ஒரு பலம் சீந்தின மருந்தில் கூட்டி கொள்ளவும். இச்சா பத்தியம்.

94. அ. பௌசவிசை, நீர்வல்லை, மகோதரம், நீர் கோவை, இது முதலான வியாதிக்கு:—

முத்தின தெங்காய் அந்து பால் பிழிந்து சட்டியில் விட்டு அதிலே கால்படி, இந்துப்பு கால்படி, சயிந்த வெண்ணம் கால்படி, பொட்டுலுப்பு கால்படி, வளையலுப்பு கால்படி, உவர் மண் நீர் போட்டு காய்ச்சின தண்ணீர் கால்படி, கள்ளிக் கொழுந்து வாட்டி பிழிந்து கால்படி சதுரக்கள்ளி வாட்டி பிழிந்து சாறு கால்படி யிதுவெல்லாம்

சட்டியிலிட்டு கடைசரக்கு பெருங்காயம் பலம் ௧. திப்பிலி பலம் ௨, சுக்கு பலம் ௨, மிளகு பலம் ௨, சிவதைவேர் பலம் ௧, கப்பல் சிவதை பலம் ௧, சாதிக்காய் விராகனிடை ௧, சாதிபத்திரி விராகனிடை ௧, இலவங்கம் விராகனிடை ௧, கடுகுரோகணி பலம் ௧, கடுக்காய் கா, ~~யாதுமெல்லாம்~~ இவைகளை இடித்து சூரணம் ~~பண்ணி~~ செய்து முந்தின மருந்தெல்லாம் ஒன்றாகவிட்டு துழாவி கருகுதிரண்ட பதத்திலே ~~தயிலமான பதத்தில்~~ தயிலமான பக்குவத்தில் வடித்து கொண்டு உள்ளுக்கு அரை காசெடை கொள்ளவும்.

ஆ. மிஞ்சினால் மாற்று பச்சை பயிறு, பச்சரிசி கஞ்சி காய்ச்சி ~~குடிக்கவும்~~. சர்க்கரை போட்டு குடிக்கவும்.

மகோதரத்திற்கு :—

மிளகு, மஞ்சள், வெள்ளுள்ளி, சீரகம், வெந்தயம், கருவேப்பிலை, பெருங்காயம், வெங்காயம் விராகனிடை ௧, கல்லுப்பு விராகனிடை ஒன்று சித்திர கள்ளிமேல் கொழுந்து மூன்று கண்டம், தண்ணீரில் (விளைசி) கழுவி போட்டு குழம்பாக காய்ச்சி நெய்குத்தி தாளிதம் ~~பண்ணி~~ செய்து ஒரு நாளைக்கு ௨. இரண்டு ~~நாளைக்கு~~ நாளைக்கு ௪, மூன்று நாளைக்கு ௬ ~~யிந்த~~ இப்படியாக காய்ச்சி தலைமாட்டிலே வைத்துக் கொண்டு எழுந்த படுக்கையிலே தின்னவும். பத்தியம் தயிர், மோர் கூட்டவும்.

95. அ. பலேந்திர சன்னி, கல்லெரிவுக்கு கையெரிவுக்கு :- (விர்த்தி) (விர்த்தி) தீர்ப்பபுல்

பசுவின் பால் படி ௧, கழுதை லத்தி சாறு படி ௧, தேம்பின் சாறு படி ௧, கொட்டைக் கிரந்தை சாறு படி ௧, நல்லெண்ணெய் படி ௧, சித்திர மூலம் பலம் ௨, தழுதாழை வேர் பட்டை பலம் ௨, புங்கம் பட்டை பலம் ௨, ஆயில் பட்டை பலம் ௨, சங்கம் பட்டை பலம் ௨, மிளகரணை வேர் பட்டை பலம் ௨, எண்ணெயும், சாறும் கொதிக்கையில் முன்சூரணம் போட்டு கருக்கிரண்ட பதத்தில் தைலம் பதத்தில் வடித்து உள்ளுக்கு ஒரு கரண்டி கொடுக்கவும் உடம்பும் தேய்க்கவும். நசியம் பண்ணவும். பத்தியம் 21 துவரம் பருப்பு, ~~உப்பு~~, மிளகுநீர், அகத்திக்கீரை, முருங்கைக்காய் ஆகும்.

சுரதிப்பிலியாதி இலகம் :- பலம்

திப்பிலி பலம் ௨, சுக்கு பலம் ௧, மிளகு பலம் ௧, செவ்வியம் பலம், திப்பிலி மூலம் பலம் ௧, வாயுவிளங்கம் பலம் ௨, கொத்தமல்லி பலம் ௨, ஓமம் பலம் ௨, தேசாவரம் பலம் ௨, ~~........ பலம் ௨~~, சக்கரை பலம் ௯, தேன் பலம் ௪, தண்ணீரும், சக்கரையும் காய்ச்சி பாகுபதத்தில் சூரணம் போட்டு ஆறின பிறகு தேன்விட்டு கிளறி சிறுநெல்லிக்காய் அளவு கொள்ளவும். ~~இதற்கு~~ தீரும் வியாதி: வாதம், சகல சுரம் ... சேத்துமம், அஸ்திசுரம், ~~இதெல்லாம்~~ தீரும்.

96. அ. திக்த கோசாதி :-

சுக்கு, மிளகு, திப்பிலி, அதிமதுரம், அக்கரகாரம், செங்கல்வ கோஷ்டம், தும்பராஷ்டம், ஓமம், ஆயில்பட்டை .... பற்பாடகம், தான்றிக்காய், கடுக்காய், நெல்லி பருப்பு, கொடிவேலி,

திப்பிலி மூலம், சீரகம், க- .... மூலக
வனமூலிகை, முசுமுசுக்கை சாறு நாழி, தூதுவளை சாறு
நாழி, சாறுவேளை சாறு நாழி, அம்மான் பச்சரிசி ...
..... யத்தன் சாறு நாழி, அகத்தியிலை சாறுநாழி,
ஆடமணக்கிலை சாறு நாழி, கரிசலாங்கண்ணி சாறுநாழி,
ம........ன் பால் நாழி. உத்தாமணி
சாறு நாழி, நொச்சியில் சாறு நாழி. [illegible] திரும் வியாதி
கபால சூலை, பாரிச சூலை. ..
[illegible]ம் பயித்தியாதிகம் [illegible] வையபாம் சாந்தியா
தீக்கு வரும்.

பித்த கோசாதித் தயிலம் :-

நல்லெண்ணெய் ௪, புங்கெண்ணெய் ௨, வேப்பெண்ணெய் ௨,
பேய்பீர்க்கம் விதை, பேய்பீர்க்கு சமூலமும் நொச்சில். த
.... ம்பு உத்தாமணி, பொன்னாங்கண்ணி,
சிறுக்கீரை, முசுமுசுக்கை, நிலயாலை, குப்பமேனி, சாறுவே
ளை, நிரிபயறு; ...... நந்தினாயகம்,
செருப்படை, வல்லாரை, சவிரிபழம்பி, உப்பிரிநாரி
விலாம் மிச்சை, மிளகு .... ம்
வாய்விளங்கம், தம்பராஷ்டகம், ஆயில்பட்டை,
கடுக்காய், தான்றிக்காய், சித்தமேல்; .. இலவங்க
பட்டை, லவங்க பத்திரி, லவங்கம், பெருங்காயம்,
சாதிக்காய், கொம்புமேப்பூ, வெட்டிவேர் ....
.... கோஷ்டம், அக்கரகாரம், அதிமதுரம்,
நாகேசரம், ஒன்றுபடி [illegible], [illegible] திரும வியாதி பீனிசம் ஒன்பது

வகை சயித்தியம், ~~ரோத்திரம்~~ . . . .

ம், தலைநோவு, சன்னிபாதம், யாதுமெல்லாம் தீரும்.

யச்சா பத்தியம்.

97. அ. பால சஞ்சீவி :—

கெவுரி கிராக்கனைடை உ, சுண்ணாம்பு கிராக்கனைடை உ, களிப்பாக்கு கிராக்கனைடை உ, தகைமாறு வெள்ளை கிராக்கனைடை உ, ~~யாதி~~ இவைகளை சுண்ணாம்பு ~~தண்ணி~~ நீர் விட்டு அரைத்து மாத்திரை ~~பண்ணி~~ செய்து சீத சாரத்துக்கு கொடுக்கிறது.

எருக்கம்பூ இரண்டு நெருஞ்சில்க்காய் ஒரு, சீரகம் கிராக்கனைடை வ ~~யாதி~~ இவைகளை அரைத்து ஒரு மாத்திரை இடவும். சீதம் ~~ரோக்கும்~~. ~~வகை~~ ... ~~பின்னை~~ ~~ஒரு மாத்திரை~~ இடவும். சகல சாரத்துக்கு திப்பலி, மிளகு, சீரகம், வெம்பகப்பூ வ ~~கராய்~~ ~~பண்ணி~~ அரைத்து ஒரு மாத்திரை இடவும். ~~இதற்கு~~ பத்தியம் கச்ச கருவாடு ஆம். கத்திரி பிஞ்சு, முருங்கை பிஞ்சு ஆம். பிளாக்காய் ஆம். கீரை ~~யாம்~~ தள்ளு.. ~~அரக்கீரை~~ ~~ஸ்நானம்~~ ~~பண்ணுகிற~~ மெய்யறு தீ போது நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், நெய். இதிலே புகையிலை, சாறுவார்த்து கஞ்சி ~~ஆரோக்கிய ஸ்நானம் பண்ணு~~ தள்ளவும்.

ஆ. பலவகை குண்டிவாதி கிரகம் :—

சங்கம் வேர் தூக்கு ஒன்று, கண்டங் கத்திரி வேர் தூக்கு ஒன்று, வில்வ வேர் தூக்கு ஒன்று, தழுதாழை வேர் தூக்கு ஒன்று, நெருஞ்சில் வேர் தூக்கு ஒன்று, முக்கிரட்டை வேர் தூக்கு ஒன்று, கொடிமுன்னை வேர் தூக்கு, எருக்கம் வேர் தூக்கு, சிறுகுறிஞ்சி வேர் தூக்கு, ஆடாதொடை தூக்கு,

சிறுகாஞ்சொறி வேர் அக்கு உ, ஆயில்பட்டை அக்கு உ,
விஷ்ணுகிராந்தி அக்கு உ, ஊசித்தகரை அக்கு உ,
கொடிவேலி அக்கு உ, செம்பிளிச்சை அக்கு உ, மிளகரணை
பட்டை பலம் உ, ஒடிமராந்தி பட்டை பலம் உ, பிரண்டை
வேர் பலம் ரு, குப்பைமேனி, கருநொச்சி, தேள்கொடுக்கு,
கையான் தகரை, துளசி, உத்தாமணி, பொடுதலை ~~யாது~~
இலைகளை ~~ஆகியவற்றை~~ சிறுக சிறுக நறுக்கி பானையிலடைத்து
எட்டு மரக்கால் தண்ணீர் விட்டு குறுணியாகக் காய்ச்சி
இதில் போடுகிற சரக்கு ~~திரவியம்~~, இலவங்க பத்திரி பலம்
சிறு நாகப்பூ பலம் ௩, தாளிசபத்திரி பலம் ௩, ஆனைதிப்பிலி
பலம் ௩, கைகிறு பலம் ௩, நவச்சாரம் பலம் ௩, கோஷ்டம்
பலம் உ, சாதிக்காய் பலம் ௩, திப்பிலிமூலம் பலம் ௫, ~~யாவையும்~~
இவைகளை ~~யாவும்~~ சூரணம் செய்து ~~பண்ணி~~ பாகுபதத்தில் கிளறி யாக்கி ~~கல்~~
கலசத்திலிட்டு தேன்படி ௩ விட்டு காறி கலசத்தில்
விட்டு தானியம் புடம் வைத்து இதில் லேக செந்தூரம்.
ஒரு பலம் போட்டுடவும்.... (சந்திரோதயம் ஒருவிராகன்
எடை போடவும்.) இதற்கு தீரும் வியாதி. சோபம்
யம், சுவாசகாசம் ௩, வாந்தி, அரோசிகம், மூலம்
பாண்டு~~வம்~~, அஸ்தி சுரம். வாதபித்தம். ~~சோபம் யாது~~
~~யாது~~ ~~வெல்லாம்~~ தீரும். இதற்கு பத்தியம் ~~இருத்தல்~~
~~மான பதார்த்தம் வேண்டாம்~~. கத்தரி பிஞ்சு, முருங்கை
பிஞ்சு, அரைக்கீரை, துவரை பருப்பு, மிளகுநீர்,
கா______ட்டலாம்.

ஆ. சுகவிரேசனம் :-

சூதத்திர நாபி விராகனிடை ௧, இரசம் விராகனிடை ௧, ரெஞ்சன் பொடியில் மர்த்திக்கப் நெல்லிக்காய் கந்தகம், சுத்தி ஐயமும். நாலு விராகனிடை சுக்கு சுண்ணாம்பு, நேர்வாளம் போட்டு தேய்த்து பதினாறு விராகனிடை சுத்தி செய்த நாலு விராகனிடை எல்லாவற்றையும் கல்வத்தில் விட்டு எரிந்த நீர் விட்டு நெகிழ அரைத்து சிறுபிளகு அளவு மாத்திரை செய்து நல்ல வெயிலில் உலர்த்தி, வெண்ணெய்யில் இவ்வாறு [illegible] ஒரு மாத்திரை கொடுக்கவும். சுரத்திற்கு மேல் விரேசனம் தேன், திரிபலையில் கொடுக்கவும். எரிந்த நீர் குடிக்கவும். எரிந்த நீர் கால் கழுவவும். இஞ்சியினால் குடிக்கவும்.

11. அ. நீலகண்ட இரசம் :-

சூதத்திர நாபி விராகனிடை ஒன்று இரசம் விராகனிடை கந்தகம் விராகனிடை இணையானவை சுத்தி செய்தது சாதிக்காய் விராகனிடை ௧, இலவங்கம் விராகனிடை ௧, நாகமாறு வித்தினை உய இணையானவை கல்வத்தில் விட்டு ஒரு சாமம் அரைத்து பூசனிக்காய் நிழலில் அடைத்து சகல சுரத்திற்கும் ஒரு பணவெடை இஞ்சிசாற்றில் சுக்கு கசாயத்தில், கொடுக்கவும். பாலும் சோறும் ஆகும்.

ஆ. நீர்குண்டி தயிலம் :-

நொச்சிச் சாறு ௩. நல்லெண்ணெய் ௩. பசுவின் பால் ௩, இலவங்கம், இலவங்க பட்டை, இலவங்க பத்திரி, தான்றிக்காய், அதிமதுரம், கோஷ்டம், ஏலம், வாய் விளங்கம், செவ்வியம், சித்திரமூலம், இந்துப்பு, கஸ்தூரி மஞ்சள், வெள்ளறுகு, நொச்சி, கரிசலாங்கண்ணி இடித்து திப்பிலி மூல கல்க்கம் கட்டி குடிக்கவும். அவுரி இலையை அரைத்து எலுமிச்சங்காய் அளவு பசுவின் பாலிலே கலக்கி குடிக்கவும். தீரும் வியாதி, தலை நோய். பக்கவலி வாய்வு.

100. அ. கல்க்க மாத்திரை செய்முறை :-

இலவங்கம் விராகனெடை ௧, திப்பிலி விராகனெடை ௧, சீரகம் விராகனெடை ௧, சுக்கு விராகனெடை ௧, சுத்தம் விராகனெடை ௧, துளசி விராகனெடை ௧, அதிமதுரம் விராகனெடை ௧, ஏலம் விராகனெடை ௧, கரிசலாங்கண்ணி சாறு, வெள்ளை சாரணை வேர், துவரம்பருப்பு எலுமிச்சம்பழம் சாறு தாளகம், சோமம் அரைத்து பயன்படுத்த மாத்திரை செய்யவும். சூதக வாயு மேகவல்லை சூரணம்:-

இந்துப்பு விராகனெடை ௧, சீரகம் விராகனெடை ௨, இந்துப்பு விராகனெடை ௧, திப்பிலி ஓமம் விராகனெடை ௩, சுக்கு விராகனெடை ௧, கடுக்காய் விராகனெடை ௫, விராகனெடை ௫, காலை மாலை சூரணம் செய்து தேனில் கொடுக்கவும்.

101. அ. பிறபாதி இரசாயனம் :-

திப்பிலி, கண்டு பாரங்கி, நறுக்குமூலம், ஆனைதிப்பிலி
தும்பராஷ்ட்டம், சடாமாங்கிஷம், ஏலம், லவங் . . . .
. . . . ரி லவங்க பட்டை, வாய்விளங்கம்,
கொத்தமல்லி, கொடிமூலம், சுக்கு, மிளகு, சீரகம்,
கருஞ்சீரகம், ... யா, தாணிக்காய்,
கற்கடசிங்கி, கொடிவேலி, செங்கழுநீர், கோஷ்டம்,
தேத்தா . . . . சிறுநாவல்பூ, அதிம
தூரம், அதிவிடயம், கோரோசனை, பாங்கிபட்டை,
இஞ்சி, ... நாரத்தம் பழம்,
எலுமிச்சம் பழம், வெல்லம், சக்கரை, தேன், வனமூலிகை,
. . . . பலி, விஷ்ணு
சித்தா மூட்டி . . . .
கிராந்தி, கரசினாங்கண்ணி, முசுமுசுக்கை வேர், நரிபயறு
வேர், வட்டதிருப்பு வேர், எலுமிச்சி . . . . . .
. . . . வேளை வேர், கத்தாழை,
கோரைக்கிழங்கு, சீவிவேர், நேசல்கிழங்கு, மிளகரணை,
பட்டை, முக்காவேளை, பறபாட . . . .
. . . . . அமுக்கிராய், முருங்கை பட்டை, சிறுகுறுஞ்
சான் வேர், கருவேப்பிலை, கண்டங்கத்திரி, சிறுவழுதலை,
மாவில . . . . தாரி, கொடிவேலி
நெல்லி பருப்பு, பூனை காஞ்சாறி.

(முருங்கை பெருங்குமிழ் நீக்கம்)

102. அ. அசுவகெந்திரதி சூரணம் :-

அமுக்கிராக் கிழங்கு, சடாமாஞ்சில், அதிமதூரம்,
கோஷ்டம், கோரைக்கிழங்கு, நிலைப்பனைக்கிழங்கு,
சீரகம், கொத்தமல்லி விதை, தக்கோலப்பட்டு, ~~கொ~~
கருவேப்பிலைசக்கு

நல்ல சந்தனம், செம்பிளிச்சம் பட்டை, சீந்தில் சர்க்கரை,
வாழை கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு, பேரீச்சம்
பழம், கல்நார், கல்மதம், கிச்சிலிக் கிழங்கு, தாமரை
கிழங்கு, சர்க்கரை, சமபாகம், சாதிக்காய், இலவங்கம்,
சேர்த்து சூரணம் செய்யவும் அளவு – ஒன்று 3வேளை
அநுபானம்; பச்சரிசி கழுநீர் தேன், நெய். ~~மிதுக்கம்~~
தீரும் வியாதி உடம்பெரிப்பு, ~~உடம்பு~~ கடுப்பு,
கல்லெரிப்பு, கை எரிவு, ~~பயித்தியக்ஷயம்~~, இரத்த
பிரமியம், நீர்எரிப்பு, ~~கல்லெரிப்பு~~, காமாலை, இரத்த
மேகம், பித்தமேகம், ~~ஆரோசகம்~~ அரோசகம், ~~மிதுகள்~~ தீரும்.

ஆ. பித்தப மார்த்தாண்ட இரசம்:—

நாபி விராகனெடை க, வெண்காரம் விராகனெடை உ,
நேர்வாளம் விராகனெடை ரு, இங்கிலிகம் விராக
னெடை ங. ~~மிதுவெல்லாம்~~ இவைகளை சுத்தி ~~பண்ணி~~ செய்து எலுமிச்சம்
பழச்சாறு விட்டு அரைக்கவும். அரைத்து மாத்திரை சிறுபயறு
~~பிரமாணம்~~ அளவு ~~பண்ணி~~ செய்து நிழலில் உலர்த்தி ~~உலர்த்தி சகல~~ எல்லாவகை
~~சார்த்துக்கும்~~ தீர்க்க ~~இடவும்~~ கொடுக்கவும். கல்மத்துக்கு ~~தீர்க்க~~ ~~இடவும்~~. திப்பலி
மிளகு, சுக்கு, சீரகம். சேர்த்து ~~இதிலேயிடவும்~~ கொடுக்கவும். ~~இரத்த~~
~~திரிக்கி~~ இரவு பஞ்சமூல கிஷாயத்தில் ~~இடவும்~~ கொடுக்கவும்.

103. அ. சூலைக்கு மருந்து:- ~~சுகி விரையம்~~:-

வெள்ளை வெங்காயம் விராகனெடை யஉ, இந்துப்பு
விராகனெடை உ, பெருங்காயம் விராகனெடை க,
விளக்கெண்ணெய் பலம் - 5 ~~பலம் க~~, ~~பிடி~~ இவைகளை கூட்டி சூலைவந்த
பேருக்கு சாப்பிட ~~பண்ணவும்~~ கொடுக்கவும்.

சுக்கிலப்பிரமேயம்:- சுகவிரோகம்

நேர்வாளம், விராகனெடை ச, இலிங்கம் விராகனெ
டை க. வெங்காரம் விராகனெடை க, ஆமணக்கு
பருப்பு விராகனெடை க, இவைகளெல்லாம் சத்தி ஐந்து
அரைத்து அதிகாலையில் குடிக்கவும். அதிகமாக கழிந்தால்
வெந்நீர் சாப்பிடவும். உடம்புக்கு வெந்நீரிட்டு
புளியிட்ட சாறுஞ் சோறும் சாப்பிடவும். இராத்திரிக்கு
கஷாயம் போடவும்.

ஆ. மேககாங்கை:- மேகசாந்தைலம்

நல்லெண்ணெய் நாழி, பசுவின் நெய் நாழி, வெள்ளைப்பூண்டு
பலம் ச, விளக்கெண்ணெய் நாழி, குப்பமேனிச்சாறு நாழி
இவைகளெல்லாம் காய்ச்சி பதத்திலிறக்கி காலையில் விராகனெடை
சாப்பிடவும். உப்பு அரைவாசி கூட்டவும். தவறாம்
பருப்பு கூட்டவும். இதற்கு தீரும் வியாதி கல்லடைப்பு
கல்லடைப்பு, நீர்க்கட்டு, நீர்க்கடுப்பு இரணம் ஆறும்.

104/அ ஒக்கிலி கிருதம்:-

வேப்பம் பட்டை, ஆடாதோடை, சீந்தில் கொடி, பேய்
புடல், கண்டங்கத்திரி, ஆக வகைக்கு பலம் ய. இதற்கு
பத்து மரக்கால் தண்ணீர் வார்த்து எட்டிலொன்றாக் காய்ச்சின
கஷாயத்திலே எட்டு பலம் மைசாக்ஷி அதிலே போட்டு
வேகவிட அதிலே இளநீர் தண்ணி இருக்கப் போத
வடிகட்டி தண்ணி வார்த்து கசுவி போட்டு முன் கஷாயத்தி
லே விடவும். பசுவின் நெய் நாழி விடவும்.

கடைமருந்து:- வட்டத்திருப்பி வேர், வாய்விளங்கம்,
தேவதாரி, சத்திசாரம், ஆனைதிப்பலி, சுக்கு, வசம்பு,
பொஸ்த்தக்காய், திப்பிலி மூலம், மஞ்சிஷ்ட்டி கிழங்கு,
சாதி அதிவிடையம், ஓமம், இலவங்கம், சாதிக்காய்,
சாதிபத்திரி, சீரகம், கல்நார், கல்மதம், கல்உப்பு,
104 அ கற்பூரசிலாசத்து, ஏலம், ~~லவங்க~~ மிளகு, சிறுகிலவங்கப்
பட்டை, கருங்குங்கிலியம், இவை வகைக்கு விராகனெடை
க. ~~இதுவெல்லாம்~~ இவைகளை ~~பொடிபண்ணி~~ சூரணம் செய்த நெய்யாலே போட்டு
மெழுகு பதமாய் கிண்டி இருக்கவும். மேகம் இருபது, யோனி
தோஷம், யோனி நோவை, ~~அரோசகம்~~ அரோசகம், எலும்புருக்கி
மூத்திர கிரிச்சரம், பகந்தரம் இவை இணைமாட்டம். சுவாச
காசம், உப்புசம், கிராணி, இருமல். ~~இதக்கி பத்தியம்~~
பால், நெய், துவரம்பருப்பு, பச்சைபயறு, முளைக்கீரை,
முருங்கைகாயை, ஆகும். புளிப்பு, மோர், கடுகு, பூசணிக்
காய், கொள்ளு, அகத்தி இவைகளாகாது.

105. அ. வில்வாதிலேகியம்:-

வில்வ பத்திரி வேர் பலம் ஒரு, பழைய வெல்லம் பலம் ஒரு,
எட்டு மரக்கால் தண்ணீர் வார்த்து ~~காச்சி~~ ~~அரைப்~~ பாகமாக
காய்ச்சிய ~~காச்சின~~ கஷாயம் இறுத்து வெல்லம் பலம் ஒரு,
விட்டு பாகுபக்குவத்தில் கடை ~~திரவியம்~~ சரக்கு சுக்கு, மிளகு,
திப்பலி, இலவங்கம், இலவங்க பட்டை, இலவங்க பத்திரி,
ஏலம், சிறுநாகப்பூ, கோரைக்கிழங்கு, கொத்தமல்லி,
சீரகம், தாளிச பத்திரி. இவை வகைக்கு பலம் ஒரு சூரணம்

கலக்கவும். தேன் சேர்த்து தீரும் வியாதி அரோசகம், பயித்தியரோகம், மார்நோவு, மார்கோவை கிராணி அவை தீரும். இதற்கு பத்தியம் கீரை, துவரம்பருப்பு, நெய், பால், ஆகும்.

ஆ. சாறுவேளை சூரணம் :—

சாறுவேளை மலர், அரிந்து குறுணி பசுவின் பால்வார்த்து தேயாமல் காய்ச்சி வெள்ளை சீலையில் உலர்த்தி இடித்து சூரணம் செய்து சீலைவடிக்கொண்டு அந்த சூரணத்தில் கடை சேர்க்க சுக்கு, திப்பலி, மிளகு, ஏலம், லவங்கம், தச்சோலம், வெதுப்படக்கி, சித்திரமூட்டி, நெருஞ்சில், தண்டில், வெண்ணெய், சீரகம், சாதிக்காய். இவை சமன் சூரணத்தில் கூட்டி பொடிசெய்து முன்சொன்ன சாறுவேளை சூரணத்தில் ஒரு கூறும் இவையெல்லாம் ஒரு கூறும் கூட்டி சீலைவடிகொண்டு, வராகனெடை தேனில் கொள்ளவும் தீரும் வியாதி: மகோதரம், காச சுவாசம், எட்டுவகை குன்மம், அறுபத்து நான்கு வாயு, மலபந்தம் இவை தீரும்.

106. அ. மேகவியாதிக்கு கிஷாயம் :-

முக்கிரட்டை வேர், நீர்முள்ளி வேர், சோரைக்கொடி, நெருஞ்சில் வேர், (நூகனை வேர்) பனம்வேர், மிளகு, சுக்கு, சீரகம். இவைகளை கிஷாயம் காய்ச்சி இறுத்து கொண்டு அதிலே தேன் சர்க்கரை போட்டு வெண்காரம் பொரித்து. கலக்கவும். இதனால் தீரும் வியாதி. நீர்கட்டு, கல்லடைப்பு, சதைகட்டு, கிராணம், இவை. இந்த கிஷாயம் அஞ்சு நாளைக்கு குடிக்கவும். இதுக்கு இச்சா பத்தியம்.

ஆ. ரத்திர வாயுவிற்கு

ஜடமத்தை அரைத்து கரைத்து வடிகட்டி குடிக்க மார்நோவு தீரும். வாயு அறும். பிரண்டை வேர் அரைத்து பசுவின் பாலில் கரைத்து குடிக்க மார்நோவு, வாயு அறும். பெருங்காயம் விராகனெடை, திப்பிலி விராகனெடை, மிளகு விராகனெடை, இது மூணும் கொண்டுவந்து பொடிதனை சாறுவார்த்தரைத்து மூன்று உண்டை செய்து காலைக்கு பசுவின் நெய்யில் குழைத்து மூன்று வேளை சாப்பிடவும். இதின் தீரும் வியாதி ரத்திர வாயு, பயித்திய வாயு, சயித்திய வாயு, மார்நோவு தீரும்.

107 அ. விஷபாண்டுவிற்கு மருந்து :—

அ. நயிநகுண்டடி கிளகம் - லவாதி சூரணம்

வெம்காவளி சேர் ௨, சுக்கு பலம் ௧, திப்பிலி பல ௧¼ மிளகு பல ௧¼ ஏலம் பல ௧¼ தேசாவரம் பலம் ௧¼ அரத்தை பல ௧, சிறுதேக்கு பல ௧¼ செவ்வியம் பல ௧¼ சித்திரமூலம் பல ௧¼ பெருங்காயம் பல ௧¼ கொஷ்டம் பல ௧¼ தேத்தாங்கொட்டை பல ௧¼ கடுக்காய் பல ௧¼ அக்காரகாரம் பல ௧, நாகசிந்தூரம் பல ௨ யாது யோக வகை.

ஏலம் பல ௨, மிளகு பல ௧¼ திப்பலி பல ௧¼ சுக்கு பல ௧¼ மதூரம் பல ௧¼ சாதிக்காய் பல ௨, சாபத்திரி பல ௨ லவங்கம் பல ௨, அரத்தை பல ௧¼ சிறுதேக்கு பல ௧¼ சக்கரை பல ௫, தேன் பல ய, சிந்தூரம் பல ௧¼ யாது யோக வகை.

151. அ. பெருவெக்கைக்கு மருந்து :-

கழுதைக்கொடி கொழுந்து, கோழியவரை கொழுந்து, கெருட பஞ்சி இலை, உள்ளி, வசம்பு, சுக்கு, மிளகு, திரைகடலசுகு சிறுநீரில் நசியம் செய்யவும். (கொதுபுட்டி வாசலிலே புரைச்சுப் போடவும்.) கை கண்டது.

அத்திபிஞ்சு, நெல்லுமாக இடித்து நெல்லரிசியை உமிறு போட்டு மாவிடித்து இரண்டும் ஒன்றாய் கலந்து புளித்த மோரிலே குழப்பி போட தீரும். கை கண்டது.

நாசியால் இரத்தம் கூட்டு மருந்து: தழுதாழை இலை, விழுதியிலை, ஆதண்டன் வேர்பட்டை இடித்து மோரிலாவது, காடியிலாவது போட தீரும். துளசி சமூலமும் வேரில்லாத கோத்தான் சமூலமும், உள்ளி, வசம்பு, சுக்கு, மிளகு, அரைத்து காடியிலாவது மோரிலாவது போடத் தீரும். முள்ளிக்கிழங்கை பட்டையை யிடித்து காடியிலாவது, பாலிலாவது போட தீரும்.

ஆ. எல்லாவகை வெக்கை சூட்டுக்கும் மருந்து :-

மிளகு சீரகம் எடுத்து அரைத்து வெந்நீரில் கரைத்து போட தீரும்.

சீந்தில் தண்டு சமூலமும், ஆதுவேளை சமூலம், துரிஞ்சில் பட்டை, கழுதைக்கொடி சமூலம் வனைக்கத் ஒரு கொடுங்கை கொண்டுவந்து வைத்து கருக்கிய் கூட சிறுநீர் குறுணி விட்டு பிசைந்து வடிகட்டி இரகு ஒன்றாக காய்ச்சி உப்பாக விளைந்த உடனே எடுத்து அந்த உப்பில் உத்தம தண்ணி சாமத்தில்து

அந்த நோய்க்கு நாவிலே வராகனெடை மூன்று நாள் ஆறு பொழுது நாவிலே தேய்க்க வியாதி நீங்கும். யாத காரு கை கண்டது.

152. அ. தொடை வாழை விப்புருதிக்கு மருந்து:-

கொன்னை இலையைத் துவைத்து சிறுநீர் விட்டு பொன் வறுவலாக வறுத்து ஆறு நாளைக்குக் கட்டவும்.

நன்னாரி வேரை அரைத்து ஒரு கொட்டைப் பாக்கு அளவு பசுவின் பாலிலே குடிக்க இந்தபடி மூன்று நாள் ஆறுபொழுது குடிக்கவும். வெள்ளை சாறுவேளை வேரும் தூதுவேளை வேரும் பொடித்து வலித்திர காயம் பண்ணி மூன்று நாளைக்கு பசுவின் பாலிலே காலமே குடிக்கவும். இரத்தமும், சீழும் வெளித்தள்ளி போம். இதற்கு பத்தியம் வெண்ணெயும் சோறும். கை கண்டது.

ஆ. மேற கண்ட வலிக்கு பரிகாரம்:-

குப்பை மேனி சாறும், ஒருத்தலை வெள்ளைப் பூண்டும், நசுக்கி மாசு கண் மாறு மூக்கும் நசியம் விடவும். வியாதி தீரும். கை கண்டது.

கெவுரி பாஷாணம், குன்றிமணி பிரமாணம் உமத்தங்காயில் வைத்து புற்று மண் சீலைமண் செய்து நாயுருவி விறகில் சுட்டு எடுத்து இப்படி பாகல்காயில் சுட்டு புற்று மண்ணில் இப்படி சுட்டு எடுத்து பேய் கரும்பின் சாறுவிட்டு மெய் அழுக்கிரா கட்டி அரைத்து உருண்டை பண்ணி இடவும். பிரியாத யாத கை கண்டது. இதற்கு மாற்று தயிரும் சோறும்.

153. அ. கண்ட மாலைக்கு அஸ்வ கந்தாதி சூரணம்:—

பாவட்டம் வேர், முன்னை வேர், குமிழம் வேர் அரைத்து பசுவின் பாலில் கலந்து குடிக்கவும். (வெளிப்பருத்திவேர் பிரங்கி வந்து வெங்காயமும் வசம்பும்.)

அமுக்கரா வேர் பல உய, அரக்கு பல ச, திப்பிலி பல ச, மிளகு பல ச, உசி காந்தம் விராகனிடை ச, நாககேசரம் பல உ, சீந்தில் கொடி பல ச, கோஷ்டம் பல க, அரத்தை பல உ, சித்திரமூலம் பல உ, நெல்லி பருப்பு பல உ, சீரகம் பல உ, தேவதாரி கட்டை பல க, கடுகுரோகணி பல ரு, கருஞ்சீரகம் பல க, யாது யோகம்.

ஆ. பூதிகாதைலம்:— பலம்

ஆயில் பட்டை பல சய, அரத்தை பல சய, சித்தாமுட்டி பல ரு, பேராமுட்டி பல ரு, வில்வ வேர் பல ரு, தழுதாழை பல ரு, பாதிரி வேர் பல ரு, கண்டங்கத்திரி வேர் பல ரு, சிறுவழுதுணை பல ரு, சின்ன நெருஞ்சில் பல ரு, ஆனை நெருஞ்சில் பல ரு, நொச்சி பல ரு, கருநொச்சி பல ரு, பெருங்காயம் பல உ, கிரந்தி நாயகம் பல க, சுக்கு பல க, திப்பிலி பல க, மிளகு பல க, காட்டாமணக்கு வேர் பல ரு, கோஷ்டம் பல க, சாம்பிராணி பல ரு, [illegible] பல ச, பால் சேர் ச, எலுமிச்சம் பழம் சய. எண்ணெய் சேர் யகா, பொன்னாங் கண்ணி சாறு ?, கரிசலாங் கண்ணி சாறு, நொச்சி சாறு, பிரமி சாறு, துளசி சாறு, ~~யாது யோக வகை~~. இலை கொண்டு தைலம் காய்ச்சு

154. அ. நாசிகா பரணம்:— பலம்

பொன்னரிதாரம் பல வக்கு, சுண்ணாம்பு கல்லில் சுத்தம் செய்து குப்பை மேனி சாறு, வேளை சாறு,

பொருதலை சாறு, கொட்டை கிரந்தை சாறு, வகைக்கு ஜலத்து நாசி அரைத்து நாசிகா பிராணம் செய்ய சலதோஷம், சிரோபாரம், சொரதோஷம் மாறும். கை கண்டது.

தென காமேசுபரம் :-

அப்பிரகம் பல வ, கடுக்காய் பல ஒ, தான்றிக்காய் பல ஒ, சுக்கு பல ஒ, திப்பிலி பல ஒ, மிளகு பல ஒ, நெல்லிபருப்பு பல ஒ, கோஷ்டம் பல ஒ, அமுக்கிராங்கிழங்கு பல க, சீந்தில் பல ஒ, நிலப்பூசணி பல க, நிலப்பனை கிழங்கு பல ஒ, கொட்டை கிரந்தை பல க, நெருஞ்சில்காய் பல க, வாழைக்கிழங்கு பல ய, தண்ணீர்விட்டான் கிழங்கு பல ய, காஞ்சுருக்கு விதை பல ஒ, கீரமுள்ளி விதை பல ஒ, சாதிக்காய் பல உ, சாதிபத்திரி பல வ, லவங்கம் பல வ, லவங்கபட்டை பல வ, லவங்க பத்திரி பல வ, முந்திரி பழம் பல க, பேரீச்சம் பழம் பல உ, கசகசா பல ஒ, சாரைபருப்பு பல ஒ, சர்க்கரை சேர் உ, கஞ்சா பல உ, எள்ளு பல க, உளுந்து பல க, கோரைக் கிழங்கு பல க, சித்திரமூட்டி பல க, கச்சோரம் பல க, இந்துப்பு பல வ, கற்கடகசிங்கி பல வ, சிறுதேக்கு பல வ, ஏலம் பல ஒ, சீரகம் பல ஒ, கல்கண்டு பல க, நெய் சேர் க, தேன் சேர் க.

155. அ. அர்த்தநாரீசுவரர் இரசம்:-

நாபி வராகனெடை உ, கெந்தகம் வராகனெடை உ, பத்திரி தாளகம் வராகனெடை உ, மனோசிலை வராகனெடை உ, நேர்வாளம் பருப்பு வராகனெடை உ, இரசம் வராகனெடை உ, சாதிலிங்கம் வராகனெடை உ, ~~யாதுவெல்லம்~~ இவைகளை நொச்சி சாற்றுடன் ஒருநாளரைக்கவும். மணத்தக்காளி சாற்றில் ஒரு நாளரைக்கவும். செருப்படை சாற்றில் ஒரு நாளரைக்கவும். அரைத்து குன்றிமணி அளவு குளிகை செய்து நிழலிலுலர்த்தி ஒரு குளிகை வெல்லத்தில் கொடுக்கவும். ~~இதற்கு பத்தியம் கசப்பு புளிப்பு தவிர்க்கவும். இதற்கு பாசம் சோறும்.~~ சுரம் விட வேண்டினால் ஒரு குளிகை வெந்நீரில் கொடுக்கவும் இதற்கு பத்தியம் கசப்பு புளிப்பு தவிர்க்கவும். இதற்கு பாசம் சோறும். இந்த மருந்துக்கு நாபிக்கு சுத்தி கொடுத்திரம். கெந்தகம் சுத்தி பாலில், பத்திர தாளகம் சுத்தி சுண்ணாம்புகல், மனோசிலை சுத்தி சுண்ணாம்பு நேர்வாளம் சுத்தி அவரை சாறு, இரசம் சுத்தி செங்கல் பொடி, ஒட்டடை, செங்கல் பொடி, ஒரு நாழிகை தேய்க்கவும். சாதிலிங்கம் சுத்தி முலைப்பாலில் நாழிகை ஊற போடவும். இது சுத்தி வகை. இந்தபடி கூட்டினால் அர்த்தநாரீசுபர இரசம்.

156. அ. கெண்டாத்திரிகர் சூரணம்:-

இஞ்சி சாறு பல ..., இராயபுரி சர்க்கரை பல ..., மிளகு பல கஐ, திப்பிலி பல க, திப்பிலி மூலம் பல க, சாதிக்காய் பல ..., ஏலம் பல ..., சித்திர மூலம் பல ...,

இலவங்கம் பல ஐ, இஞ்சி மேல் புறணி சீவி சிறுக நறுக்கி பசுவின் நெய்யால் வறுத்து இவைகளுடன் சேர்த்து யிடித்து சர்க்கரையும் கலந்து தின்னவும். தேன், நெய், வெந்நீரில் கொள்ளவும். வியாதி தீரும்.

இருமலுக்கு :— பொன்னரிதாரமும், மனோசிலை, மயில்துத்தம், மிளகு, இவை நான்கையும் எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து துணியில் திரிபரத்தி புகை பிடிக்கவும். இருமல் தீரும்.

ஆ. கெண்டா ஆமல லேகியம் :—

இஞ்சி பல உ ள, நெல்லிக்காய் சாறு இவ்விரண்டும் கலந்து காய்ச்சி இதனுடன் கடை சேர்க்க திரவியம் தாளிசபத்திரி பல ஐ, மிளகு பல ஐ, சீரகம் பல ஐ, கருஞ்சீரகம் பல ஐ, இந்துப்பு பல ஐ, சித்திரமூலம் பல ஐ, ஏலம் பல ஐ, இலவங்கபட்டை பல ஐ, இலவங்க பத்திரி பல ஐ, சிறுநாவல்பூ பல ஐ, கடுகு பல ஐ, அரேணுகம் பல ஐ, திப்பிலி மூலம் பல ஐ, சடாமாஞ்சில் பல ஐ, செவ்வியம் பல ஐ, சுக்கு பல ஐ, கொத்தமல்லி பல ஐ, முந்திரி பல ஐ, திப்பிலி பல ஐ, அதிமதுரம் பல ஐ, இலவங்கம் பல ஐ, சாதிக்காய் பல ஐ, இவைகளை சூரணம் செய்து பசுவின் நெய் சேர்கவிட்டு பதத்திலிறக்கி உள்ளங்கை கொண்டது கொள்ளவும். இதனால் தீரும் வியாதி ஆமை வாதம், க்ஷய ரோகம், மலபித்தம், மந்தாக்கினி, ரத்த வாயு, வாதசேத்துமம், பயித்திய குன்மம், மூர்ச்சை, வாயு, காமாலை, பாண்டு

விஷதோஷம், மேகம் உஷ்ண, மூலவாயு
முதலா வாய்வு தீரும். கை கண்டது.

157. அ. நாசிகாபரணம்:—

கொட்டை முட்டை சுட்டு வஸ்திரகாயம் செய்து
எருக்கம் பால்விட்டு ஏகமாய் கலந்து திரியுருட்டி
நாசியில் நசியமிடவும். நாசிகாபரணம்.

ஆ. ஆனந்த பைரவம்:—

சாதிலிங்கம், நாபி, வெண்காரம், மிளகு, திப்பிலி,
யிந்த வகை அஞ்சும் சமபாகமாக கூட்டி இடித்து சலி
சத்தி செய்த நேர்வாளம் கூட்டி எலுமிச்சம் பழச்சாறு
விட்டு இரண்டு சாமம் அரைத்து சிறு குன்றிமணியளவு
குளிகை செய்து திரியுருட்டி இஞ்சி சாற்றில் இடவும்.
முலைப்பாலில் இடவும். சுக்கு கஷாயத்தில் இடவும்.
சீதசுரம், தோஷசுரம், சந்த தோஷமும் தீரும்.

158. அ. பிளவைக்கு:— ரெவட்டை உரித்து கொண்டுவந்து
நன்றாய் பொடி செய்து புண்ணில் பொடி போட்டு அதின்
மேலே வெள்ளை சீலை மூடிப்பாய் மடித்து மேலே
போட்டு கட்டவும். அடுத்த நாள் அவிழ்த்து பார்க்கவும்.
புழு விழும். அந்த பொடி நல்லெண்ணெயில் போட்டு
வசம்பு வெள்ளுள்ளி போட்டு சூரிய புடம் வைத்து
புண்ணில் சீலை போடவும். தீரும்.

ஆ. சகல பிணிசத்துக்கு பருவகைக்கு:—

நல்லெண்ணெய், வெள்ளுள்ளி பூண்டு ஒன்று
மிளகு யாருபது சுக்கு ஒன்றும், மஞ்சள் ஒன்று வசம்பு

வசம்பு இன்றியளவு, நல்ல வேளைவேர் இரண்டும் ஆகிய புடம் ஒருநாள் வைக்கவும். பத்தியம் உப்பு அரைவாசி, துவரம் பருப்பு, மிளகு நீர், அகத்திக்கீரை, முருங்கைக்காய் இவை பத்தியமாகும்.

பருவுக்கு:- வாழைப்பழம் புண்ணில் வைத்து கட்டவும். அதே நாள் கொள்ளுக்காய் வேளை பிடித்து கட்டி இருக்க விடாது நீரும் உறாமல் வர்க்கவும். அறுபது நாழிகையில் பார்க்கவும். புழுவிழும். ஈயம், எட்டி கொட்டை, சிவனார் வேம்பு கூட விளக்கெண்ணெயில் கொதிக்க வைத்து இடவும்.

159. அ. கண்ணில் பூவிற்கு:-

செவ்விகொட்டை சுட்டு சுப்பலில் துருசு நாலிலொன்று கூட்டி அரைத்து மிளகு பொடி கண் புழுவெட்டு தீரும். காசம், பூ தீரும். புழுக்கடிக்கு எண்ணெய் அரைத்து இடவும். எருக்கம்பால் மெல்லிய சீலையில் உலர்த்தி எருமை வெண்ணெயில் தடவி திரியாகத் திரித்து எருமை நெய்யில் நனைத்து புதுசட்டியில் மை பிடித்து திரியும் மையும் துத்தம் துருசு கூட்டி அரைத்து எருமை வெண்ணெயில் குழைத்து கல்பம் செய்து மை சிமிழில் அடைத்து கண்ணிலிட பிறந்த கண் முதலாகும் தீரும்.

இரணத்திற்கு:- கடுக்காய் இடித்து கொட்டையுடன் சிறுவேப்பிலை கூட்டி நாழி தண்ணீரில் காய்ச்சி உரியாக்கி கோது எடுத்துவிட்டு காய்ச்ச தயிலமாம். இந்த தயிலம் கண்ணோவு, புழுவெட்டு, நேத்திர வாயு, நீர்முட்டுதல், சிகப்பு, வலிப்பு முதலான பல குற்றமும் தீரும்.

160. அ. மேகநாத குளிகை :-

சாதிலிங்கம், வெங்காரம், சுக்கு, மிளகு, சயிந்தலவணம்,
சிவதை வேர், வசம்பு, கொட்டாமணக்கம் வேர், பெருங்கா
யம், வாய்விளங்கம், வகைக்கு வராகனெடை 1
இதற்கு சரி நேர்வாளம் கூட்டி எலுமிச்சம்பழச்
சாற்றில் நாலு சாமம் அரைத்து இரண்டு குன்றிமணி
அளவு குளிகை செய்து வைத்துக்கொண்டு இந்த
குளிகைக்கு :- தீரும் வியாதி பஞ்ச குன்மம், சோகையும்,
பாண்டு, காமாலையும், கிராணியும் எண்பது நாலு
வாதமும் குணமாம். கை கண்டது அனுபவம்

ஆ. நீலகண்ட ராம இரசம் :- இரசம், கெந்தகம்,
லோகம், நா.பி, சித்திரமூல வேர், புத்திர தாளகம்,
வாய்விளங்கம், அரேணுகம், முத்தக்காசு, ஜவாசி,
கொரந்திக்காரம், நாககேசரம். திரிகடுகு, திரிபலை,
நேர்வாளம், தாமரை பூக்கிழங்கு இந்த இருபதும் சரியாய்
கூட்டி இதற்கு இரட்டிப்பு வெல்லம் கூட்டி நன்றாய் அரைக்க
வும். கடலை அளவு குளிகை செய்து கொடுக்க
தீரும் வியாதி. காசம், சுவாசம், குய குன்மம்,
பிரமேயம், விஷசுரம், கிருஷ்ண தோஷம், கிராணி
பித்த ரோகம், பாண்டுரோகம், மூத்திர கிரிச்சரம்,
வாதரோகம், திமிர் ரோகம், மந்தாக்கினி, பீனிச
ரோகம், அதிசாரம், வெண் குஷ்டம், கயம்,
முகசன்னி, கர்ந்த இசிவு, விக்கல், பறந்த வாதம்,
161. அ. உன்மாதம், அந்திர வாதம், சன்னிபாதம் அவை முதல்
எந்த ரோகமும் தீரும். இதற்கு இச்சாபத்தியம் இல்லை.

162. அ. அகஸ்தியர் வாகடம்

கிருஷ்ண சகாயம் உண்டாவதாகவும். தேவி சகாயம்.

163. அ. ஆனந்த வயிரவம், ஆதி ஆனந்த வயிரவம் :-

சாதிலிங்கம் அரிசுடன் நாபியும் தரித்த
திப்பிலி காரம் சமனொடும்மி தயிர்ந்த தோர்
சாறுடன் மிகவரைத்து மிளகென உண்டைகொள
போதி வந்த நெர்ச்சித் துளசியும்
மொரு ஆடா தோடை காசனாம் கண்ணியுங் கரந்தையும்
முதபிட்டு சாத்திலே கடுகரைண்டு தண்ணியிலே
கிரியத (அத்ரகம்) தசாரம் சன்னி பாதமும்
நிலைகு லைந்துவிட் டோடுவ திண்மையே//

ஆதி ஆனந்த பயிரவரம் :-

நாபி சூதம் மனோசிலை கெந்தகம்
சாதி லிங்கம் வெண்காரம் சமனொடு
நீதில் (புழுங்கப்பழ) கின்பழச சாற்றி லரைத்திட
ஆக யதனை அவ்வரை செய்திடும்
கூவு கின்ற சன்னி வாதமும் தனக்கிசி
கோல மனைசடங் கத்தி விட்டுடு
மேவு கின்றகுளிர் இஞ்சி சாற்றிலும்
மிக்க சன்னி முலைப்பாலில் தெய்த்திடு
ஆவி தன்னை தளராமல் காத்திடும்
ஆதி ஆனந்த தண்ட விதே//.

பிரலய கால பயிரவம்:-

பொன்னூமத்தை வித்து
பூசணி வசம்பு சுக்கு
தம்மொத்த காரம் நாபி
தம்பல புருதன் நாறி
நிமர்ந்த தம்பழம் சாற்றில்
நேரரைத் துண்டை பண்ண
உழுந்தை பருமன் சேர்த்து
உரைத்திடும் சோத்து நீரில்
குளிர்சுரம் தண்ணீர் தாகம்
குலைகுலைந் தோடு மெண்ணே 1//

164. அ. கிராணி ஆனந்த பயிரவம்:-

நாபி லிங்கம் திரிகடுகு
நல்ல விடையம் சமன்கூட்டி
நீதில் நின்பழ சாற்றிலரை
நேரே பயற்றள வுண்டைசெய்து
இஞ்சி சாற்றில் இரண்டுண்டை
யிடவே தாப குளிர்சுரம்போம்
பித்த சுரத்துக் கொருவுண்டை
பேணி யிடவே முலைப்பாலில்
உடம்பு கடுத்தால் இரண்டுண்டை
உரைத்தே முலைப்பால் தன்னிலிடு
கிராணி யான பேருக்கு
கிளர்ந்த விடையம் சாதிக்காய்
தயிர்த்தேன் தண்ணீர் கொள்வோர்க்கு
சிறந்த கிராணி தான்போமே //. ௨.

பிரளய
(பிரணய) கால பயிரவம்:-

காந்தம் இரதம் அரிதாரம்
கடுகு ரோகணி நாபியிவை
சமனே நின்பழச் சாத்துடனே
அரைத்து கடுகுபோலே உண்டையண்ணி
பண்ணியாடு குமரி சாறுதன்னில்
யில்லா திரக்கில் முலைப்பாலில்
வியர்ந்து வெச்சன் வச்சிடவே
விடாத சுரமும் விட்டிடுமே //
நாலு நாளிலே விடும்.

அழகிய சொக்கன்:-

சோதிசுட மூங்கனி மகந்தகம்
தூய திப்பிலி ரோகணி அய்ந்துடன்
பாதிசேர் நேர்பாளம் கூட்டியே பாகல்
பச்சிலை சாத்தி லரைத்திவை
நிதி யாகவே வழித்து வாங்கியே
நினைவி தண்டை நிழலில் உலர்த்தியே
பேதியாக யருசுர மாளவே
பேர்கள் இதரேகம் அழகிய சொக்கரே //

165. அ. பிரதாப லிங்கேசுபரன்:-

கத்தாழை கோமியம் புளியிலை சாத்தில் சுத்தி
பண்ணிய நேர்வாளம் கடுகுரோகணி இரசம் கெந்த
கம் மிளகு பழம் வெண்காரம் சமபாகம் சுக்கு யாதுக்கு சுவனா
பஞ்சதாரை கூட்டி (மின்பிச்சில் அரைத்தல் சுத்தல்
மின் பிச்சில் மூன்று நாளரைத்து சிமிழில் வைத்து
சுரங்களுக்கு இஞ்சிசாத்தில் சுக்கு சாத்தில் மூன்றுகாள
இடவும்.

அன்றாடம் குளிகை இட்டபின்பு ~~காய்ச்ச தண்ணீர்~~ [சூடான நீர்] குளிர் ~~ஆத்தி~~ [ஆற்றி] குடிக்கவும். பத்தியம் மோரும் சோறும் ~~இடவும்~~. இதுக்கு பித்தசுரம், உஷ்ண சுரம், சேத்தும சுரம் ~~இதுகள்~~ தீரும்.

ஆ. திருமூர்த்தியார் இரசம்:-

சாதிலிங்கம், அப்பிரகம், காரிய பஸ்பம், சவ்வாது கூட்டி நாவல் பட்டை சாறுவிட்டரைத்து கடலை ~~பிரமாணம்~~ [அளவு] உருண்டை ~~பண்ணி~~ [செய்து] சர்க்கரை அனுபானத்திலிட ~~இதுக்கு~~ தாபசுரம் விடும். சீதளமாம். பத்தியம் மோரும் சோறும். கறி சிறு வழுதலங்காய் கத்தரிக்காய் ஆம். தாகம், உழலை ~~உடனே~~ நீக்கும்.

அக்கினி குமாரன் இரசம்:-

இரு கழஞ்சு தாம்பிர பஸ்பம், யிரு கழஞ்சு நாபி நாற்கழஞ்சு, திரிகடுகு பன்னிரெண்டு கழஞ்சு, திரிபலை பன்னிரெண்டு கழஞ்சு ~~இதுவெல்லாம்~~ [இவைகளை] அம்மியிலிட்டு நொச்சி சாறு, கையாந்தகரை சாறு, கண்டங்கத்திரி சாறு, ஒவ்வொரு சாற்றில் ஒருநாளரைத்து உருந்து ~~பிரமாணம்~~ [அளவு] உருண்டை ~~பண்ணி~~ [செய்து] நிழலில் உலர்த்தி ~~கொடாசாலை~~ [கோடகசாலை] அனுபானத்திலிடவும். சுரம் போம்.

166. அ. அர்த்த நாரசுரம்:-

இரசம், அப்பிரகம், துத்தநாகம், வெண்காரம், அரிதாரம், சாதிலிங்கம், தாம்பிர பஸ்பம், கல்நார், ஆடுதின்னாப் பாளை வேர், வெச்சம் பழம் தின்னில் சமன் கூட்டி வாழையிலை சாறுவிட்டு அரைத்து தீயில்

புடமிட்டு எடுத்து எருக்கம் பால், கள்ளிப்பால் சமன் கூட்டி வார்த்தரைத்து பொடியாக்கி காலை கால்பண எடை வெந்நீரில் இட்டால் வலப்புறம் சரம் விடும். குளிர்ந்த தண்ணீரில் இட்டால் இடப்புறம் சரம் விடும். எல்லா சுரமுந் தீரும். பத்தியம். துவரைச் சாறு, முருங்கைச் சாறு, நொய் அரிசி கஞ்சியாம்.

(எமதந்திரி காசம் :-) சர்வ சன்னி சாத்திரு [illegible]

இரசம் கழஞ்சு, கெந்தகம் இரு கழஞ்சு, அரிதாரம் முக்கழஞ்சு, நேர்வாளம் நாற்கழஞ்சு, யாவை கட்டாஞ்சுவேர் கஷாயத்தில் ஒரு நாளரைத்து குன்றி அளவாம் உருண்டை செய்து நிழலில் உலர்த்தி சர்க்கரை வெந்நீரில் ஒரு குளிகை கொடுக்க வாத பித்த சேத்தும சுரம் ஒரு சாமத்தில் விடும். பத்தியம் நொய் அரிசி கஞ்சி.

இரசம் பத்து கழஞ்சு, நாபி, அரிதாரம், [illegible] கெந்தகம், வெங்காரம், நேர்வாளம் [illegible] ஆறு கழஞ்சு [illegible] லோகபஸ்பம் எல்லாம் கூட்டி திரிபாலை விதையும் கொடிவேலியும் கஷாயமிட்டு பக்குவத்தில் சுருக்கி அந்த நீர் விட்டரைத்து பொடியாக்கி குன்றியடை குளிகை செய்து இளநீர், சர்க்கரை, இந்த அனுபானத்திலிட சர்வ சுரமும், சன்னியும் தீரும்.

167. அ. சன்னி சுரத்துக்கு குளிக்கம் :-

சுக்குடன் திப்பிலி துய்ய கெந்தகம்
ஒக்க ரோகணி கெந்த மிளகுடன்
தக்க நின்பழச் சாத்துடன் நேரறை
அக்கு பூண்ட ஆனந்தன் அஞ்சனம்.

இது எல்லா சுரத்துக்குமாம். கோர்வாளம் இருபத்து மிளகு முப்பது இந்திர கோப புழு நாலு யாவையும் ஆட்டுக்கிடா பிச்சியும் இஞ்சி சாத்தும் எலுமிச்சம் பழச்சாத்தும் அரைத்து சிமிளில் வைத்து கண்ணிலிட இதுக்கு சன்னிசுரம், பிசாசு போம்.

ஆ. பிரதாப லிங்கேசுவரன் :-

இரசம் கழஞ்சு, மிளகு கழஞ்சு, சங்கு பஸ்பம் இரு கழஞ்சு, லோக பஸ்பம் முக்கழஞ்சு, நாபி நால் கழஞ்சு, கெந்தகம் ஆறு கழஞ்சு, அப்பிரக செந்தூரம் எண் கழஞ்சு, காட்டெரு முட்டை பஸ்பம் எண் கழஞ்சு யாவையெல்லாம் சுக்கு கிஷாயத்தில் அரைத்து குன்றி பிரமாணம் குளிகை பண்ணி நிழலில் உலர்த்தி சர்வ சுரத்துக்கும் சுக்கு கிஷாயத்திலிடவும். உரி சன்னிக்கு உமத்குருவி சாத்திலிடவும். பெத்த சன்னிக்கு இஞ்சி சாத்தில் சுக்கு சாத்திலிடவும். கொள்ளு கிஷாயத்திலிடவும். அதி சுரத்துக்கு அதிவிடையம் சீந்திக்காய், காசு கட்டியாலிடவும். தாப சுரத்துக்கு இரசம் கழஞ்சு, கெந்தகம் கழஞ்சு கோர்வாளம் மூணு கழஞ்சு, அப்பிரகம் கழஞ்சு யாவை நாலும் வெத்திலை சாறு விட்டரைத்து குன்றி பிரமாணம் குளிகை பண்ணி நிழலில் உலர்த்தி முலைப்பாலிலிடவும். பத்தியம் மோரும் சோறும் இடவும்.

168. அ. இராமசாம நைவாநலகன் :-

வெள்ளை பாஷாணம், இரசம், அரிதாரம், வெங்காரம், திரிகடுகு இவை சமன் கூட்டி இதற்கு சமன் நேர்வாளம் சுத்தி செய்து கூட்டி முருக்கிலை சாற்றில் அரைத்து கடலை அளவு குளிகை செய்து நிழலில் உலர்த்தி இஞ்சி சாற்றில் விடவும். பத்தியம் மோர்கஞ்சி குடிக்கவும். குளிர் வாதம் விடும்.

வெள்ளை பாஷாணம் பங்கு ௧, சாதிலிங்கம் பங்கு ௨, பொன்னூமத்தை சாற்றில் அரைத்து பயறளவு உருண்டை செய்து முலைப்பாலில் விடவும். குளிர் சுரம் விடும். பத்தியம் மோர்கஞ்சி, பசுவின் பால்.

குஞ்சாம் கோரை சாறு நாழி, அதின் விதை அரைத்து எருமிச்சங்காயளவு மிளகு அம்மாத்திரம் அரைத்து அதற்கு சமன் நாழி நல்லெண்ணையில் எரித்து உள்ளுக்கு ஒரு கரண்டி கொடுத்து மேழுமிட சுரம் போம்.

ஆ. இராமபாணம் :-

கௌரி சுத்தம் அரிதாரம்
கிளர நிறுத்தங் கொருங்கிறையாய்
அகூஞ = மத்தை சாற்றன்னில்
அரைத்து பயறள வுண்டைபண்ணி
தளரில் லரத ஆவின் பாலிட
தணியா சுரமுந் தான்தணிந்து
வினையும் சேத்தும உழலைகளும்
விடுமே இராம பாணமிடில் //

இராசாதி குளிகை :-

நலம்தரும் கெவுரி நாரு
நாறுதீ ரகமே ஒன்று
துலங்குதெ துரிசி ஒன்று
துத்தமும் மொக்க
பலந்தனில் உறையும் உண்டை
பயறுநல் மிளகு சுக்கு
கலந்து வெந்நீரில் கொள்ள
கருங்குளிர் சுரங்கள் போமே //

(எலிப்பாடாணம்)
எலிப்பகை தன்னைக் கொண்டு
எருக்கம்பால் தன்னில் விட்டு
சலிப்பற நாறு நாளும்
சாந்தபின் னெடுத்துப் பாலில்
பலிப்பிற அரைத்து உண்டை
பயறுபோல் உருட்டி கொண்டு
நலிப்பிற மோரி விட்டால்
நாலு நாளையில் குளிர்தான் போமே //

துருசு மனோசிலை வெண்காரம்
சூதம் துத்தம் எலிமருந்து
சமனே மிளகு பிரமாணம்
மிகவே நிழலில் வைத்துணர்த்தி
இளநீர் தன்னில் ஒருகுளிகை
யிட்டால் பத்தியம் பாலும் சோறும்
குடித்தால் குளிர்தர ஜுன்னசுரம்
கொடிய தாபம் உள்ளவையும்
காலந் தனிலே கொள்வோர்க்கு
ஓடுகை போகும் கண்டீரே //

169. அ. இராசாதி குளிகை :-

சாதி லிங்கம் அரிதாரம்
தக்க மனோசிலை பாஷாணம்
சமனே நிறுத்து பாகலிலை
சாறுவிட் டரைத்து உழுந்துபிரமாணம்
உருட்டி ஒருகுளிகை பழந்தண்ணீரில்விட
பத்தியம் பயத்தம் கஞ்சி
இராசாதி தனக்கு நடுக்கிவரும்
சுரம்விட் டகலும் - -

இராமசரம் :-

வெள்ளை பாஷாணம் கழஞ்சு
மிகவே கெவுரி யருகழஞ்சு
கொம்பு பாகல் தன்சாற்றில்
இருக வரைத்து பயறளவு
உண்டை யெய்கொள் உரைத்து
உரைத்து மோரில் கொள்ள
நடுக்கும் குளிரும் சுரம்தீரும்
இராம சாமம் யட்டிடவே //

இராமபாணம் :-

சாதிலிங்கம் அரிதாரம்
தக்க வெள்ளை பாஷாணம்
பாகிலை சாற்றில் நேரரைத்து
பயறு போலே உண்டையெய்கொள்
மோரில் இரண்டு உண்டைகொள்ள
மூணு நாளும் அப்படியே
நடுக்கும் குளிரும் சுரம்தீரும்
நாளா மறல் விட்டகலும்
மோரும் சோறும் பத்தியங்கொள்
தீர்க்கும் இராம பாணமென்னே //

170. அ. இரசச் செந்தூரம் :-

நீதியாய் ஆகார மேபருக்கும்
ஆன மதுரம் உண்டாகும்

நீராகாரம் கொள்ளார் (நீர்) எருமைப்பால் போதக்
கொண்டுவந்து தண்ணீர் படாதபால் கொதியிட்டு
ஆடை எடுத்துப் போட்டு ஆற்றி புரைகுத்தி தயிர்க்
கடைந்து வெண்ணெய் எடுத்துச் போட்டு அந்த
மோரிலே இந்துப்பு ஒரு காசிடை மோரில் கலந்து
தெளியவிட்டு நீர்வடித்துப் போட்டு அந்த மோர்
வண்டலை கட்டி உலர்த்திவைத்துக் கொண்டு யதில்
பத்து காசிடை வண்டலுக்கு நாலு காசிடை இந்துப்பு
இரண்டு காசிடை துருசியும் எலுமிச்சம் பழச்சாற்றில்
அரைத்து செப்பு செம்பில் பூசி பசுமையாகுமளவும்
மத்தித்து நல்ல பச்சை நிறமானால் நிழலில் உலர்த்தவும்.
இரசம் சுத்தி பண்ணினது (செய்தது) வெண்டியது கொண்டுவந்து
மாதளம்பூ சாறு அம்மியில் பிழிந்து இரசம் விட்டு
அழிந்சில் கொண்டு மத்திக்க வெண்ணெய் பதமாகின்
மத்திக்கவும். பின்பு வங்காள இப்பியில் வெற்றிலை
சுண்ணாம்பு கூட்டி யடித்து பிழிந்து கொண்டு அந்த
சாறு குப்பிக்குள்ளே விட்டு மத்தனம் பண்ணி தப்படி
மூன்று நாழிகை பிழிந்து மத்தனம் செய்து இப்படி
காரம் தெக்கத் கொடுத்து மூன்று நாழிகை பிழிந்து
உலர உலர மூன்று நாழிகை மத்திக்கவும். பின்பு
அதில் மருந்து அடைத்து குப்பி வாயிலே ஓடிட்டு
மூடி மூடின வாய்க்கு கையவழி மண்வளையால் ஒரு
சிட்டம் சீலை துணி கூட்டி அரைத்து குப்பிவாய்

இலை சீலை மண் செய்து குப்பிக்கும் ஏழு மண் செய்து
காயவைத்து ஒரு சட்டியில் நாலைந்து விரல் உயரம்
மணல் பரப்பி அதன் நடுவில் குப்பி வைத்து வாலுகா
எந்திரத்தில் பன்னிரெண்டு சாமம் எரிக்க செந்தூரமாம்.
வயித்திய பாகத்துக்கு எல்லாம் ஆகும். இப்படி பன்னி
ரெண்டு சிலவு வைத்தால் வித்தைக்கு வரும்.

171. அ. இரச செந்தூரம் வைக்க :-

இரசம், கெந்தகம், தாளகம் ஓரொன்று பதினொரு
கழஞ்சு சுத்தி செய்து
பேய் பீர்க்கையிலை சாற்றில் இரண்டு சாமம் அரைத்து
கருவை குப்பிக்கு ஏழு சீலைமண் செய்து வாலுகா
எந்திரத்தில் நான்கு சாமம் எரித்து நன்றாய் ஆறவிட்
டெடுத்து பார்க்க மாடப் புறாவின் கழுத்து போலே
நிறமாகும். அதை பொடி செய்து பரணியிலடைத்து
சகல ரோகைக்கும் அநுபானத்திலிட ஒரு பணவெடை
செந்தூரம், திப்பிலி, கிராம்பு பொடி செய்து தேனிலிட
சர்வ ரோகமும்
அம். இப்படி இருபத்தொரு நாள் இட
போம். பத்தியம் கடலை பருப்பு போட்டு பொங்கி
சாப்பிடவும். பசுவின் பால், தேன், கசப்பு, புளிப்பு
தவிர்க்கவும்.

172. அ. அரிதார பஸ்பம் :-

அரிதாரம், காவேளை வேர் பட்டை ஒருபிடி நொச்சிச்
சாறுவிட்டரைத்து வேறே வாங்கி கொண்டு அரிதாரம்
நொச்சி சாறுவிட்டரைத்து பின்பில் ரசம்
சாம்பல் கழஞ்சு, அரசம் சாம்பல் கழஞ்சு, காவேளை

அரைத்து ~~பசை போலும்~~ அதில் அரைத்த அரிதாரமும்
கூட்டி அரைத்து அடை ~~தட்டி~~ பிடித்து அதை ஒரு
கிடத்தில் விரல்கொண்டு குத்தி எருக்கம் பால் மூன்று
~~பிரகாரம்~~ முறை தடவி உலர்த்தி வைத்து பிலாசம் விறகும்,
அரசம் விறகும் பசுமையாக சுட்டு இரண்டுவகை சாம்பலும்
சமன் கூட்டி மூன்றாகப் பிரித்து ஒருபுது சட்டியில் இரு
கூறு சாம்பலிட்டு பரப்பி அதின் மேலே இரண்டு
எருக்கம் பழுப்பு வைத்து அதின் மேல் அடை வைத்து
அதின் மேலும் இரண்டு எருக்கம் பழுப்பு இலை மூடி அதின் மேல் ஒரு
கூறு சாம்பலிட்டு மூடி அதற்கு தக்க சட்டிகொண்டு
மூடி மூன்று சீலைமண் செய்து அடுப்பில் வைத்து இரண்டு
சாமம் காலாக்கினியால் எரியிடவும். பின்பு காடாக்கி
னியால் பதினாறு சாமம் எரிவிட்டு எடுத்து அடைம
பிட்டால் உள்ளே மஞ்சள் நிறமாயிருந்தால் மறுபடி
இடவும். அல்லாதிருந்தால் பொடிசெய்து குடுக்கை
யில் வைக்கவும். அநுபானம் வாதநோய்க்கு நொச்சில்
சாறு, வெற்றிலை சாறு; ~~இதில்~~ ஒரு பணவிடை
நித்தம் இருபத்தொரு நாளாகிலும் பன்னிரெண்டு
நாளாகிலும் கொடுக்கவும். பினை, இருமல் உப்புசத்துக்கு
திப்பிலி பொடியில் ஒரு பணவிடை தேனிலிடவும்.
பத்தியம் வாழைக்கச்சல், முருங்கைக்காய், கீரைத்தண்டு,
அவரை பருப்பு, முன்னிக்காய், பால், மோர், நெய்,
தேன் கூட்டவும். உப்பு விடவும்.

173. அ. அரிதாரம் சுத்தி:-

அரிதாரம் சீலைதனில் பொட்டலங் கட்டி ஒரு கலசத்திலே சுட்ட சுண்ணாம்புகல் போட்டு அரிதாரம் வைத்து மேலும் சுண்ணாம்புகல் போட்டு கொதி நீர் விட்டு வேகவைத்து எடுத்து ஒருபடி சிறுபயிறு இருநாழி தண்ணீர் விட்டு அதில் வைத்து நீர் வற்றும் மட்டும் எரிக்கவும். பிறகு எள்ளிசும், முக்கிரியாசும் பெரும் பயிற்றும், கொன்றைத் தழையாசும், பூசணிக்காய் சாற்றும் சுப சுத்தி செய்த இம்மி சாற்றில் ஒரு சாமம் பின்பு உளமத்தையிலை சாற்றில் ஒரு சாமம், அம்மான் பச்சரிசி சாற்றில் ஒரு சாமம் அரைத்து சிறுக சிறுக வில்லை போலே வில்லை செய்த உலர்த்தி எடுத்து காயுருவி சாம்பல் நாலுபடி கொண்டுவந்து இரண்டு படி சாம்பல் சட்டியிலிட்டு அதன்மேல் இந்த அடையெல்லாம் பரப்பி அதின் மேலும் இரண்டுபடி சாம்பல் கொட்டி மூடி சீலைமண் செய்து கீழ்அக்கினியாக மூட்டித் இரண்டு சாமம் எரிக்கவும். பின்பு ஆறவிட்டெடுத்து பரணியிலடைத்து கொண்டு தேவை பண்ணுமிடத்தில் தேனில் ஒரு பணவெடை கொள்ளவும். பிடிப்பு கால் மண்டலம் கொள்ளவும். கருவில் இட்டிருந்து நாற்றம்பு சாற்றில் அரை பணவெடை கொள்ளவும். இருமலுக்கு அக்காரகாரம் இளவெண்ணீரில் கொள்ளவும். தேனில் மாத்திரை சொல்லுகள் அண்டபுத்தும், ஆறா சூட்டியம் புண், புருஷக் கிராந்தி தீரும். ஆணி கட்டடங்கு தீரும். நல்லெண்ணெயிலட இருமல் தீரும். பித்த வியுதும் தீராத கிராந்தியும் தீரும். கையாந்தகரை சாற்றிலட

வெண்குஷ்டம் தீரும். இப்படி தேனிலே பயித்திய
பாண்டு ரோகந் தீரும். / கையாந் தகரை சாற்றிலே
174 அ பாண்டு ரோகம் தீரும். நாரத்தை சாற்றிலே வெண்
குஷ்டம் தீரும். கற்றாழை சாற்றிலே செவ்வட்டை
கடி வகை தீரும். அக்கார காரத்திலே காது மந்தம்
தீர்ந்து கேட்கும். மிளகு வெண்ணெயிலே மேல்
சுவாசம் தீரும். பிரமரசம் சாம்பலில் யிட பெரும்பாடு
இரத்த பிரமியம் தீரும். ஆட்டுப் பாலில் யிட்டு
பெருவயிறு தீரும். உஷ்ணம் மிகுத்தால் பூசணி
காய் சாற்றிலே யிடவும். இப்படி மண்டலம் கொள்ளவும்.
இது முறிக்க பூசணி பழச்சாற்றில் முக்காவேளை கொள்
யத்தில் யிட சுத்தி தீரும். திரிகடுகு பொடியில் தேனி
லிட வாத குன்மம் தீரும்.

ஆ. பூபதி:-

இரசம் கெந்தகம். நாபி இவை சுத்தி செய்து
லோக செந்தூரம், தாம்பிர பற்பமும் யாவை ஒன்றாய்
கழஞ்சு கூட்டி செருப்படை சாற்றில் அரைத்து
அன்பது நாழிகை அரைத்து பின்பு காசிக் குப்பியிலிட்டு
ஏழு சீலைமண் கட்டி வாலுகா யெந்திரம் தீபாக்கினியாக
இரண்டு சாமம் எரிக்கவும். ஆறின பின்பு குப்பியில்
வாய்க்கி மருந்து எடுத்து குக்கில் நாலில் ஒன்று
மெழுகும், நாலில் ஒருபங்கு நாபியும் கூட்டி சித்திர
மூல கியாழத்தில் அரைத்து இப்படி நாள் சாம
அரைத்து உலர்ந்து அளவாக குளிகை செய்து

இஞ்சி சாற்றில் திப்பிலியால் கட்டி கொடுக்கவும். இப்படி சன்னி சுரத்திற்கும், வாத சன்னி சுரத்திற்கும் இடவும்.

175-அ. இரச பூபதி:- இரசம் பத்து கழஞ்சு, நெல்லிக்காய் கந்தகம் பத்து கழஞ்சு, நாபி பத்து கழஞ்சு, தாம்பிரபஸ்பம் பத்து கழஞ்சு, வெண்காரம் பத்து கழஞ்சு எல்லாம் சுத்தி செய்து ~~பண்ணி~~ ~~மூலைகட்டி~~ செருப்படை சாறுவிட்டு மூன்றுசாமம் அரைத்து ~~யாப்பு~~ ~~பிரமாணம்~~ ~~அரைத்து~~ காசிகுப்பியிலிட்டு ஏழு சீலைமண் செய்து உலர வைத்து வாலுகா எந்திரத்தில் கமலாக்கினியாக பதினாறு சாமம் எரிக்கவும். பின் சொன்ன நாபி அரைகழஞ்சு குப்பியால் கட்டவும். பின்பு செந்தூரத்தை சரித்தெடுத்து பொன் பழுப்பு, மினுக்கம் சரியாக எடுத்து வைத்து நாபி அரைகழஞ்சு கூட்டி நன்றாய் மத்திக்கவும். பின்பு பரணியிலடைத்து அநுபானம் தேனியபுடம் இட்டு இரண்டு நெல்லெடை அநுபானம் ~~இதற்கு~~ கொள்ளவும். மாத்திரை அருந்திடவும். ~~இதனால்~~ தீரும் வியாதி சுவாசகாசம், காமாலை, பாண்டுரோகம், கபந்தலை வாத ரோகை, சன்னிவாதம், சுரம் ~~இவையெல்லாம்~~ தீரும்.

தாம்பிர பற்பம் ~~பஸ்பம்~~:-

தாம்பிரத்தை தகடடித்து சமன் நெல்லிக்காய் கந்தகம், எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து தகடு இருபக்கம், சிறுக நறுக்கி தகட்டில் பூசி ஒரு செம்பில் வைத்து அதில் மீண்டும் ~~பின்னையும்~~ சாறுவிட்டு அக்கினிவாய் ~~ஓடு~~

ஒருபோட்டு மூடி சீலைமண் செய்து நனையாதவாத்தில் ஒருமுழம் குழிவெட்டி புதைத்து அரைமண்டலம் சென்றபின் எடுக்க பஸ்பமாம். வியாதி அறிந்து தக்க அநுபானத்தில் கொடுக்கவும். (யாது வித்தைக்குமாம்)

176. அ. கருவங்க செந்தூரம் நீரிழிவுக்கு:-

நீரிழிவு:-

காரீயம் பலம் 5. சட்டியிலிட்டு உருக்கி உருக்கின உடனே ஒருபலம் மூன்றாம் காய்ச்சல் பொட்டிலுப்பு கூடப்போட்டு இரும்பு சிட்டுவாங்கி துழவ சிட்டம் போலே ஆம். அதில் கையாந்தகரை சாறு விட்டு துழாவி யருக்க சிவக்கும் அதிலே பலவழக்காகல் மனோசிலை கழஞ்சு பொடி செய்து போட்டு மணத்தக்காளி சாறுவிட்டு வறுக்க செந்தூரமாம்.//. வாழைக் கிழங்கு வெட்டி பிழிந்து உழக்கு சாற்றில் பணவெடை செந்தூரமிட்டு கொடுக்க வெகு மூத்திரம் நிற்கும்.

நீரிழிவு தாகத்துக்கு:-

அத்தி, இத்தி, அரசு, போரசும் ஆவாரை இந்து அம்பட்டு பட்டையும் (சவன்) கூட்டி யடித்து உலர்த்தி வைத்து ஒருபிடி உமியைப்போட்டு உழக்குநீர் வடித்து பணவெடை கொடுக்கவும். நீரிழிவுக்கு வாழைப்பழத்தில் கொடுக்கலாம். தேனிலும் வெண்ணெயிலும் சர்க்கரையிலும் கொடுக்க நிற்கும். இந்த செந்தூரம் உடம்பு நொந்து போனால் பணவெடை தேனில் இரண்டு நேரமும் கொடுக்க உடம்பு தெளியும். இந்தபடி வெண்ணெயில் கொடுக்க உடம்பு பருக்கும்.

இன்மத்துக்கு சுக்கு, மிளகு, திப்பிலி, (அசமதாகம்) சீரோன்று கழஞ்சு கூட்டி பொடிசெய்து நித்தம் ஒரு பணவெடை செந்தூரம் கூட்டிக்கூட காரத்தில் தேனில் கால் மண்டலம் கொடுக்க இன்ம வியாதி இணமாம்.

177. அ. காரிய செந்தூரம் :-

காரியம் (மயிலிறபவை) நெய்யால் அக்கசுதிரம் உருக்கி சாச்சு சத்தி பண்ணி இரண்டு பணவெடை இரசமும் ஒட்டறை தாளம்பொடி செய்து சட்டியிலிட்டு குமரிச் சாறு நாழிவிட்டு தொண்ணூறு நாழிகை விடாமல் வறுக்க, பனை மட்டை சாறு தொண்ணூறு நாழிகை வறுக்க செந்தூரமாம். இந்த செந்தூரம் சகல கழிச்ச லுக்கும் ஒரு பணவெடை தேனில் கொள்ளவும். சீனைத்தால் ஒரு பணவெடை இரண்டு நேரமும் கொடுக்கவும். இத்தக்கு இருபது வகை கல்மமும், இன்மமும் இரி வலி கூடின சகலமும், சிலேத்துமமும் போம். பத்தியம் சம்பா அரிசி, பசுவின் பால், நெய், தயிர், சர்க்கரை, புடலங்காய் ஆம். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

ஆ. காந்த செந்தூரம் :-

காந்தம் பொடிசெய்து நாவல்பட்டை சாத்தில் ஒரு சாமமரைத்து அறுபது நாழிகை ஊற வைத்து பின்பு முசுபத்தி இரண்டு சேர்காரம் தண்ணீர் விட்டு கழுவி உலர்த்தி பொடி நாவல்பட்டை சாத்தில் உலர்த்தியடித்து சீலையில் வடிகொண்டு அந்த பொடியிலிட்டு இரண்டு சாமம் வறுக்க பின்பு நாவல்பட்டையும்

சொர்ணத்தை பொடியும் நீரிலே தெத்திளவும் வாதக்கவும்
செந்தூரமாம். அவிழ்தங்களுக்கு கூட்டலாம்.

178. அ. காந்த பற்பம் :-

~~காந்தம் கெந்தகம், இருபலமும் இ~~

காந்தம் கெந்தகம் இருபலமும்
கடிய சூதம் அரைபலமும்
செந்த அரைப்பொடி ஒருபலமும்
செய்ய (அரி)தாரம் காலபலமும்
வெள்ளும் குமரி சாற்றினில்
மிகவே அரைத்து அடைபிடித்து
காலம் பிறவே கலத்திலிட்டு
கதிரோன் முன்னே வைத்துவிட
அலங்கை கிட்ட தீயது போல்
எரிந்து பஸ்பம் மானதனை
நாளொன் றுக்கு பணவெடையை
நல்ல திப்பிலி தேனுடனே
கொள்ள உதிப்பிலி ~~கைகப்புகை பாண்டுவுடன்~~ கைகப்புகை பாண்டுவுடன்
கைகப்புகை பாண்டுவுடன்
பெரிய கவிசை குடல்வாதம்
உண்டால் நெஞ்சில் புளித்தேப்பு
ஒட்டுக் கிராணி இன்மவனை
இஞ்சி சாற்றுடனும் தேனுடனும்
இரண்டு பணவெடை இருநேரம்
கொண்டால் வியாதி பலவும்போம்
கொடிய மகோதரம் பலவும் போம்
பண்டே நமனார் தன்வரினும்
பதியே இருக்க கடவோமே //

நாறு கழஞ்சு அரைப்பொடியும்
நல்ல கெந்தகம் யிருகழஞ்சு
[ரசம் உகழஞ்சு]
காலை சூத மிருகழஞ்சு
காந்தம் பதினஞ்சு கழஞ்சு
ஏலம் குமரி சாறுதனில்
எழைய அரைத்து வாங்கியபின்
காலம் பிறவே - வெயிலில்வைக்க
கனலாய் எரியும் கண்டீரே //

நாளொன் றுக்கு பணவெடைதான்
நல்ல தேனில் கொள்வோர்க்கு
அஞ்சு குன்மம் பெருவயறு
அருவைப் வெப்பு பாவையுடன்
பாண்டு, சுவாசம், புளித்தேக்குப்பம்
பழைய பொருமல் மகோதரங்கள்
இஞ்சி சாறு தனில்கொள்ள
எல்லா பிணியும் யகைந்திடுமே //.

179. அ. அக்கினிமுக பஸ்பம் :-

நாறு சூதம் சிலையிரண்டு
நல்ல கெந்தகம் நாலிரண்டு
காலு காந்தம் பதினாறு
கனையால் லோகம் அதின்றெட்டி
ஏலம் குழலிற் அம்பிதனிற்
யினைய குமரி சாற்றரைத்து
தாலம் தனிலே எடுத்திட்டே
தணலாய் எரியும் கண்டீரே //

சுயமாக்கினி!-

கண்டீர் குன்ம மாமிலிவை
கெறும் பித்த பாண்டுரோகம்
உண்டால் மெய்யாய் புளிதேப்பு
ஒட்டு கினிரும் உடல்சூரமும்
கொண்டால் யாஞ்சி சாறுதன்னில்
- குணமே யாகும் இருவருளே/

இரசம் சுத்தி:-

இரசம் சுத்தி வெந்நீர்; கெந்தகம் சுத்தி பால், நெய்;
மனோசிலை சுத்தி, சர்க்கரை சிவநீர்; ஈ.காந்தம்,
கொள்ளிலே அவித்து கையாந்தகரை சாற்றில் ஒரு
புடம், தென்னைக்கு சாற்றில் ஒருபுடம்; அரப்பொடி
கொடியத்தில் ஊறவைத்து மறுநாள் எடுத்து பிசைந்து
கழுவி போட்டு கையாந்தகரை சாற்றில் இரண்டுபுடம்
போட்டு அவித்தால் சுத்தி கட்டவும்.

பத்திரதாளகம் சுத்தி:-

சாணிப்பாலில் மேற்கொதி.
கொதிக்க வைத்து எடுத்து உலர்த்திப்பருப்பு வேகவைத்த
அந்த தண்ணீரில் கழுவ சுத்தி. வைத்த சுண்ணாம்பில்
நடுவே வைத்து தண்ணீர் விட சுத்தி. திரும்பி எடுத்து
சுண்ணாம்பு வேறே கரைத்து அதிலே போட்டு
கொதியிட சுத்தியாம். வடி சுண்ணாம்பும் வெற்றி
லைகாம்பும் சுத்தி பண்ணின தாளகமும் சரியாய்
வைத்து எருக்கம் பால்விட்டு அரைத்து பசையானவு
குளிகை ஐயத்தில் இளவெந்நீரில் ஒரு குளிகை
கொடுக்க கனிர்சுரம் நாக்கம் மாறல்காய் யாத்திய
பாண்டுரோகம், இரத்த பித்தம், பலவியாதிக்கும் இந்த
மருந்து கொடுத்தால் குணமாம்.

ஆ. தாம்பிர பூபதி:-

இரசம் கெந்தகமும் சரியாய் கூட்டி ~~பாதிக்கு காலத்~~ இதற்கு காலில் ஒருபங்கு
~~தொன்று~~ நாபி கூட்டி ~~பாதி பெண்ணுக்கும்~~ ஏல பெண்ணுக்கும் பதினாறு பங்கு
தாம்பர பஸ்பம் கூட்டி செருப்படைச் சாற்றில் ~~மூணு~~ மூன்று
நாளரைத்து குளிகை ~~பண்ணி~~ செய்து காசிகுப்பியிலிட்டு
வாலுகா யந்திரத்தில் தீபாக்கினியால் கமலாக்கினி,
காடாக்கினி எட்டு சாமம் எரித்து ஆறின பிறகு
எடுத்து இந்த ~~மருந்துக்கெல்லாம் சரியாய்~~ மருந்துக்கு சமஅளவு சிவநாபி
கூட்டி இஞ்சி சாற்றில் அரைத்து அகலிலிட்டு மூடி
சீலைமண் பூசி ஒரு குக்குட புடம் போட்டு ஆறவிட்
டெடுத்து ~~பின்னையும்~~ பின் இந்த ~~மருந்துக்கு நாலத்தொன்று~~ மருந்துக்கு நாலில் ஒருபங்கு
நாபியும் நாபிக்கு சரியாய் மிளகும் கூட்டி கொட்டை
கரந்தை சாற்றில் ஒரு சாமம் அரைத்து குன்றி ~~பிரமாணம்~~ அளவு
குளிகை ~~பண்ணி~~ செய்து இஞ்சி சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும்.
தீரும் வியாதி அக்கினி மாந்தம், சுரவாதம், சேத்துமம்,
சோபை, பாண்டு, மேகம், குன்மம், மூலம், சன்னிபாதம்
~~இதுகள்~~ தீரும்.

அக்கினி குமார பூபதி:-

இரசம், கெந்தகம், நாபி, தாம்பிர பஸ்பம், எமாக்கிகம்,
மனோசிலை, அரிதாரம், ~~இதுகள் சரியாய்~~ சமஅளவு கூட்டி,
செருப்படைச் சாற்றில் இரண்டு சாமமரைத்து குன்றி
மணி ~~பிரமாணம்~~ அளவு குளிகை ~~பண்ணி~~ செய்து காசிகுப்பியிலிட்டு
சீலைமண் பூசி வாலுகா எந்திரத்தில் தீபாக்கினியால்
கமலாக்கினியால் எட்டுசாமம் எரித்து ~~ஆறின்~~ பிறகு
எடுத்து ~~இதுக்கு~~ இதற்கு ~~நாலத்தொன்று~~ நான்கில் ஒருபங்கு நாபிகூட்டி நாபிக்கு

சித்ராங்கியின் பூபதி

இரசம், கந்தம், வர்ணகம், ரூபம், ~~ஸ்பரிசம்~~ ஓசை

~~[illegible]~~ கூடிய எக்கியை சாத்திரம் சாமம்

அனைத்தும் வசீகரமான ~~[illegible]~~ பாவை

எத்திசையும் நிலைக்கின்ற வெளிச்சத்தில்

காட்சிகளின் ஒரு கலம் எங்கே திரைமறைவு

எத்து அன்றி சாத்திரம் சமையத்து உள்ளம்

~~[illegible]~~ அமர ஒளிக்க ~~[illegible]~~ ஒழுங்கு தேவ சங்கமம்

~~[illegible]~~ திடம்.

சரியாய் மிளகு கூட்டி இஞ்சி சாத்தில் சாமம் அரைத்து உழுந்து பிரமாணம் குளிகை பண்ணி கொடுக்க தீரும் வியாதி: வெப்பம் சுத்த ரோக திபாண்டை. அரோசிகம், அஷ்டபடலி, கிராணி வாய்வு, சோகம் சுவாச காசம், சகல ரோகமுந் தீரும்.

மகா அக்கினி குமார பூபதி:-

இரச பஸ்பம், தாம்பிர பஸ்பம், நாபி, வெங்காரம், யாதிகா சரியாய் கூட்டி நொச்சியில் சாறு, கொடிவேலி சாறு, கண்டங் கத்திரி சாறு. சிறுவழுதுணை சாறு வகை சாத்தில் இருபத்தொரு நாளரைத்து குன்றிமணி பிரமாணம் குளிகை பண்ணி கொடுக்க தீரும் வியாதிகள்: சன்னிபாதம், சூதிக வாதம், வாயடைத்து போனது யாதிகள் தீரும்.

சொர்ண பூபதி:-

இரச பஸ்பம், கெந்தகம், சொர்ண பஸ்பம், வெள்ளி பஸ்பம், யாதிகா சரியாய் கூட்டி செருப்படை சாத்தில் எட்டு சாமமரைத்து குன்றி பிரமாணம் குளிகை பண்ணி காசிகுப்பியிலிட்டு சீலைமண் பூசி வாலுகா எந்திரத்தில் தீபாக்கினி, காலாக்கினி, கமலக்கினி ஆறு சாமம் எரித்து ஆறின பிறகு எடுத்து இஞ்சி சாத்தில் சாமமரைத்து பணவெடை பிரமாணம் குளிகை பண்ணி இஞ்சி சாத்தில் கொடுக்க. கொடுக்கவும்.

182. அ. சித்தாக்கினி பூபதி:- மார்த்தாண்ட பூபதி

இரசம், வெங்காரம், கெந்தகம், தாளகம், மனோசிலை யாதிகா சரியாய் கூட்டி செருப்படை சாத்தில் எட்டு சாமமரைத்து காசிகுப்பியிலடைத்து சீலைமண் பூசி

விருகா எந்திரத்தில் தீபாக்கினி, காடாக்கினி, கமலாக்
கினியால் ஆறு சாமம் எரித்து ஆறவிட்டு எடுத்து
நொச்சிச் சாற்றில் ஒரு சாமம் அரைத்து குன்றி பிரமாணம்
குளிகை செய்து இருக்க பதினெட்டு வகை சன்னியும்
தீரும். திப்பிலியால் இருக்க க்ஷயம், திரிதோஷம்,
பதினெட்டு வகை சன்னி, அஸ்தவாதம், அதிர்வாதம்
தனுர்வாதம் மகாவாதம் ஆமைவாதம் சர்வ
வாதமும், அந்தகாரமான யாஷ்டியிலே சூரிய உதயம்
ஆனாற்போலே இருக்கும்.

183. அ. சர்வசுர பூபதி :-

இரசம், கெந்தகம், தாம்பர பஸ்பம், நாளகம், வகை
ஒன்றுக்கு பலம் 1, எலிபாஷாணம் பலம் 2, இவைகளை கட்டி
சித்திர மூல கிஷாயத்தில் இரண்டு சாமம் எரித்து ஆற
விட்டு எடுத்து இந்த மருந்துக்கு நாலத்தொன்று [illegible]
சிவனார்வேம்பு கூட்டி நாபிக்கு சரி பிரமாணம் கூட்டி
நொச்சிச் சாற்றில் ஒரு சாமம் அரைத்து உலர்த்தி
பிரமாணம் குளிகை செய்து இஞ்சி சாற்றில் ஒரு குளிகை
கொடுக்க பதினெட்டு வகை சன்னியும் [illegible]
[illegible], திரியாக்கியம் சாந்தும் தீரும்.

ஆ. இரசபஸ்பம் :-

இரசம் சுத்தி செய்து பண்ணி. பில்லு காணான் நிறுக்கி
பிசிங்கு அரைச்சு பச்சை இலையால் விட்டு சீலை
மண் செய்து காயவைத்த சன்னிச் சட்டியில் சாண்
உசரம் பரப்பி அதுமேலே உமிகாந்தல் சாண் உசரம்
வைத்து அதுமேலே மருந்து வைத்து மேலும் உமிகாந்தல்

காணவைத்து மேல் என்ற சேந்து வைத்து புடமிட்டு ஆறவிட்டு எடுக்க பற்பமாம். அவிழ்தங்களுக்கு கூட்டலாம். தனியே கால் பண வெடை சுர வாதங்களுக்குத் தருக்கலாம்.

184-அ. நாரசிம்ம பூபதி :-

இரசம், கெந்தகம், தாளகம், வெண்காரம், நாபி எல்லாத்துக்கும் சரியாய் எவ்வாசாரம் சரியாய் நாக செந்தூரம் கூட்டி எருக்கம் வேர் பட்டை சாத்தில் சாமம் இஞ்சி சாத்தில் சாமம் அரைத்து குன்றுமணி பிரமாணம் இளிகை பண்ணி காசி குப்பியிலிட்டு சீலைமண் பூசி வாலுகா எந்திரத்தில் தீபாக்கினி, கமலாக்கினி, காடாக்கினியால் நாலு சாமம் எரித்து ஆறினபிறகு எடுத்து இந்த மருந்து மூணு பலமும், நாபி ஒரு பலமும் திப்பிலி ஒரு பலமும் கூட்டி கொட்டை கரந்தை சாத்தில் மூணு சாமம் அரைத்து துவரை பிரமாணம் இளிகை பண்ணி கொடுக்க சன்னி பாதம் சந்நி வாதம், சுவாச காசம், க்ஷயம் பிரமம் மூர்ச்சை, கிராணி இரத்த தோஷம், பாண்டு தீரும்.

இரசம் சுத்தி :-

அபிங்கி பட்டை. மதுளையில் இரசத்தில் உள்ள விஷம் போகும். கொடிவேலி பட்டை சூரணத்தில் மத்திக்க இரசத்தில் உள்ள கொச்சிட்டம் போகும். கொன்னைவேர் பட்டை சூரணத்தில் மத்திக்க இரசத்தில் உள்ள

வேதம் தீரும். கத்தாளம் வேர் சாரணத்தில் மர்த்திக்க இரசத்தில் உள்ள எழு புரையும் தீரும். இந்தப்படி இரசம் சுத்தி. பின்பும் இரசம் செங்கல் பொடியில் மர்த்திக்க பிறகு கொன்னை பட்டையால் மர்த்திக்க பிறகு கற்றாழை சாற்றில் மர்த்திக்க பிறகு வெள்ளை சீலையில் கொட்டி பிழிய சுத்தியாம.

185. அ. நேர்வாள சுத்தி :-

நேர்வாளம் ஒரு நஞ்சு வாங்கி பொட்டணமாய் கட்டி எருமை சாணி காடியால் கரைத்து உள்ளே போட்டு சாமம் எரித்து கழுவி கற்றாழை சாற்றில் இரண்டு சாம புடம் எரிக்கவும். கழுவி சோற்று தண்ணீரில் புடமிடவும். வெல்லத் தண்ணீரில் புடமிடவும். பசுவின் பாலில் புடமிடவும். நெய்யில் புடமிடவும். புடத்துக்கு ஒரு நாள் கழுவவும். சுத்தியாம. சுத்தியானது நேர்பாளை சுக்கு பொடி போட்டு கட்டி வைக்கவும்.

ஆ. இரசம் சுத்தி :- இரசத்தை கல்வத்தில் வார்த்து இரண்டு நாழிகை அரைக்கவும். ஒரு விராகனெடை இரசத்துக்கு ஒரு பணவெடை ஒட்டடை கலந்து வெயிலில் வைக்க இரண்டு நாழிகை உலர்ந்தால் மெல்லிய சீலையால் அரித்து கொண்டு கல்குழியில் வார்த்து நல்ல சந்தன சாறு, வெற்றிலை சாறு, பாகற்காய் சாறு, கிளைபனை சாறு, கோவையிலை சாறு, நுணாபட்டை சாறு, கொடிவேலி பட்டை சாறு, பொன்னாவாரை வேர் பட்டை சாறு, பொன்னுமத்தை பட்டை சாறு,

கையாந்தகரை சாறு, வெள்ளை சாறு யாந்த இலைபட்டை சாற்றில் அரைக்க எருப்புரையும் ஆறும்.

186. அ. பச்சை நாபி சுத்தி :-

நாபியை பாக்கு பிளவு போலே வெட்டி ஆட்டுமூத்திரம், பசுவின் கோமியம் இதில் மூன்று நாள் ஊற வைத்து தினம் கோமியம் மாற்றி விடவும். சுத்தியாம். உலர்த்தி ஒருநாள் எலுமிச்சம் பழச்சாற்றில் ஊற வைத்து கழுவி உலர்த்தி பின்பும் கோமியத்தில் ஒரு நாள் ஊறவைத்து கழுவி உலர்த்தி சிறுக்கீரை சாற்றில் ஒருநாள் ஊற சுபசுத்தியாம்.

ஆ. ~~சாதிலிங்கம் சுத்தி :-~~ அரிதார சுத்தி :-

அரிதாரத்தை ஒன்று இரண்டாய் பொடி செய்து மெல்லிய சீலையில் முடிந்து அதன் மேல் இரட்டை மடிப்பு சீலையில் முடிந்து கோமூத்திரத்தில் மூன்று நாள் கமலாக்கினியாய் எரிக்க. அரிதாரம் சுத்தியாம்.

மனோசிலை சுத்தி :-

இரட்டை மடிப்பு சீலையில் முடிந்து ஆட்டுமூத்திரத்தில் தோலாயந்திரத்தில் இரண்டு நாழி காலாக்கினி எரிக்க சுத்தியாம்.

சாதிலிங்கம் சுத்தி :- முலைப்பாலில் எலுமிச்சம் பழ சாற்றில் அரைக்க சுத்தி.

187அ. எலி பாஷாணம் சுத்தி :- ஒருநாள் சுண்ணாம்பு தெளிவில் தோலாயந்திரமாக கட்டி சாமம் எரிக்க சுத்தியாம்.

கெளரி சுத்தி :-

எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து உருட்டி இரண்டை மடிப்பு சீலையால் முடிந்து சுண்ணாம்பு தண்ணீரில் துளை ராத்திரத்தில் இரண்டு சாமம் எரித்து எடுக்க சுத்தி. பஞ்ச பாஷாணத்துக்கும் இப்படி சுத்தியாம். பின்னும் எருக்கம் பால் நாலு நாள் விட்டு அரைக்க சுத்தியாம்.

வெண்கார சுத்தி :-

எலுமிச்சம் பழச்சாற்றில் அரைக்க சுத்தியாம்.

பச்ச சுத்தம் சுத்தி :- தயிர் பிழிந்த தண்ணீரில் அரைத்து அடை பிடித்து புதுசட்டியில் காய வைத்து பின்னும் பின்னும் சுட சுத்தி.

பால் துத்தம் சுத்தி :- பொடியாக்கி இரட்டை சீலையால் முடிந்து சுண்ணாம்பு நீரில் துலா ராத்திரத்தில் இரண்டு நாழி எரிக்க சுத்தி.

188. அ. கெந்தகம் சுத்தி :- ஆமணக் கெண்ணெயால் கெந்தகத்தை பொடியாக்கி போட்டு கரைந்த மட்டிலே பசுவின் பாலில் உறைத்து சுத்தியாம். நாலு நாழி, மூணு நாழி இரண்டு நாழி ஒரு நாழி சட்டியால் வார்த்து மேலே துணிகட்டி அதின்மேல் கெந்தகம் தண்ணீர் பத்தா விட்டால் மறு தண்ணி விட்டு இறக்க சுத்தி.

பசுவின் பாலைவைத்து காடி, மோர், கோமியம் இதுகள் நிலையில் தெண்ணா வாய் அகண்ட ஒருவையால் வார்த்து மேலே சீலைபுட்டு கட்டி தனி மட்டும் இருவை புதைத்து அதின்மேல் வெறுமென்ன கெந்தகம்

வைத்து மேல் ஒரு சட்டி மூடி சுத்தமண் பிசைந்து
உதடு தெரியாமல் மூடி மேலே அரசமான ஒருமுட்டை
ஒரு விராக்கடை யாரு விராக்கடை தென்னடையாய்
வைத்து நெருப்பு போடவும். அதின் பிறகு எடுக்க
சுத்தியாம். வெண்மெண்ணாய் புடம் இடலாம். பிறகு
ஆமணக்கம் பால் பிழிந்த யிளாக்கில் கொதிக்க
சுத்தியாம். நெல்லிக்காய்

நெல்லிக்காய் கெந்தகம் சுத்தி:-

கெந்தகம், பழுத்த பசுவையும் அரைச்சு சுத்தியாம்.
வாசினை போம். பிரண்டை சாத்தில் சுத்தியாம்

189. அ. இங்கிலியம் சுத்தி:-

பொடி மண்ணை சிலையால் முடிந்து தோலாந்திரத்தில்
திரிபலை குடிநீரில் வேக சுத்தியாம்.

லவணம் அஞ்சனக்கம் சுத்தி:- ஒரு நாள் காடியில்
ஊற சுத்தி. வெள்ளாட்டு மூத்திரத்தில் இரண்டு
நாழிகை வைக்க சுத்தி. காந்தம் எலுமிச்சம் பழச
சாத்தில் இரண்டு நாழி ஊற போட்டு போட சுத்தி.
அல்லது காடியால் ஊறப்போட சுத்தி. மோர் தெளி
வில் ஊற சுத்தி.

ஆ. காரிய பற்பம்:-

ர.யம் பலம் 2, அசமதாகம் பலம் 2, செஞ்சன் பொடி பலம்,
கடுக்காய் பொடி பல ச, தாயுருவி பலம் க, பஸ்பம்
சட்டியால் போட்டு சிறுக சிறுக ஒடம் போடுங்
காண்டி கொண்டு வறுக்க பிறகு செஞ்சன் சிறுகசிறுக

போட்டு வறுக்க கடுக்காய் சிறுக போட்டு வறுக்க பிறகு நாயுருவி போட்டு வறுக்க பஸ்பமாம். சுவாச சயித்தியம், இருமல் பி~~ன்னையும் காரியத்துக்கு~~ ஆம்.

190. அ. தாம்பிர செந்தூரம்:-

தாம்பிரம் மூன்று வராகனெடை, தகடாய் ~~அச்சமாய்~~ அடித்து சிறுக நறுக்கி புளிவைப்பில் ஊறப்போட்டு கழுவி பொன்னரிதாரம் மூன்று வராகனெடை இரசம் வராகனெடை, சூத்திர நாபி இரண்டு வராகனெடை மூன்றும் அரைத்து இலை ~~பண்ணை~~ வெட்டு இலையில் பொடி பாதி போட்டு அதன் மேல் தகடு வைத்து மேலும் பொடியிட்டு மூடி மேலும் இலை மூடி சீலைமண் செய்து நன்றாய் காய உலர்த்தி ஒரு சட்டியில் மணல் சிறுக போட்டு அதுமேல் உப்பு விரல் உயரம் போட்டு அதுமேல் இலை வைத்து மேல் நாலுவிரல் உயரம் உப்பு போட்டு அதன்மேல் விரக்கனை மணல் போட்டு அதன் மேல் மடகிட்டு மூடி மண் பூசி அடுப்பில் வைத்து ~~அஞ்சு~~ ஐந்து சாமம் தீபாக்கினியால் எரிக்க செந்தூரமாம். எடுத்து கிராம் பணவெடை அனுபானத்தில் — சுரம், வாயு, சூலை, அசீரணம், மேகம் போம்.

191. அ. அரப்பொடி பற்பம்:-

அரப்பொடி கரிசலாங்கண்ணி, நாயுருவி, எருக்கம் பால், குமரை கிழங்கு குப்பை மேனி, நாகபட்டை சவுமிச்சம் பழம், கல்சாருவி, எருமை நாக்கியலை, ஆகாச தாமரை இதில் வகை ஒன்றுக்கு அரைத்து

அன்றாடம் புடம் அகலிலிட்டு காட்டுமுட்டையில்
போட பஸ்பமாம். இதிலே ~~தானே~~ அரைத்து எத்தனை
புடம் போட்டாலும் நல்லது. இதுக்கு காமாலை,
இருமல், காசிபாண்டு, வீக்கம், விஷபாகம்,
பெருவயிறு, குன்மம், ~~வகுத்த கோவை~~, திரும். தேன்
நெய்யில் இருத்த கெடமானல்படில் அவித்த செடம்
விடாத தொடரில் பிட்ட செடம் வியாதியால்
பிரந்த சொடம் படாதிரும். வித்தாய் நிக்கும்.
பத்தர கிரணை யாந்து போட்டால் திடம் பெறும்
செல்வமுண்டாய் செருக்கி வாழ்ந்திருக்கலாமே.

192. அ. இரச பற்பம்:-

தாம்பர இரசம் கல்வத்திலிட்டு பனைமட்டை சாறு
விட்டு அரிந்தில் கொம்பில் மத்தித்து பச்சை ஓலை
யில் உள்ளே வைத்து சீலை மண்பூசி உலர்த்தி
குக்கிட புடம் போட பற்பமாம்.

இரச பற்பம்:-

பனையது மட்டை சாற்றில்
பயமற்ற சத்தை விட்டு
மனமுற அரைத்து பச்சை
மயமுள ஓலை தன்னில்
நினைவுற வாங்கி பின்னை
நெகிழ்ந்த மண் சீலை செய்து
கனமிலா புடத்தை யிட்டால்
கண்டுகொள் பற்ப மாமே //.